Vol.4, Issue 4 | Annual Subscription ₹420

@NewsRotary /RotaryNewsIndia

செப்டம்பர் 2021

# ரோட்டரி நியூஸ்

INDIA
www.rotarynewsonline.org



Rotary

# நினைவில் நிற்கும் சில தருணங்கள்



**மேலே:** RI *தலைவர் சேகர் மேத்தா இந்திய பிரதமர் நரேந்திர மோடி அவர்களை தில்லியில் சந்தித்தார்.* RID 3054 PDG *ஆஷிஷ் தேசாய் மற்றும்* RID 3261 PDG *விவேக் தன்கா மற்றும் ராஷி மேத்தா ஆகியோரும் உடன் இருந்தனர்.* 45 *நிமிடங்கள் நடந்த இந்த சந்திப்பில் மேத்தா பிரதமருடன் நாட்டின் முன்னேற்றத்திற்கான திட்டங்கள் பற்றி விவாதித்தார்.*

**வலது மற்றும் கீழே:** RI *தலைவர் மேத்தா இவான்ஸ்டனில்* (USA) *உள்ள* RI *தலைமையகத்தில் தலைவர் பொறுப்பேற்றார்.*





# உள்ளே




**12 ஈரோட்டில் ரூ.20 கோடியில் 45 நாட்களில் உருவான மருத்துவமனை!**
ஈரோட்டில் ரோட்டரியன்கள் கட்டமைத்த, கொண்ட அதிநவீனக் கோவிட் மருத்துவமனையை ஈரோடு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு வழங்கினார் RI தலைவர் சேகர் மேத்தா.



**18 தீக்காயத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 10 ஆண்டுகளாக நம்பிக்கை அளித்துவரும் திட்டம்**
RC கோயம்பத்தூர் மெட்ரோபோலிஸ் 2012ல் தொடங்கிய தன்னுடைய தீ-க்குப் பின் நம்பிக்கை திட்டத்தின்மூலம், 600க்கும் மேற்பட்டவர்களுடைய வாழ்க்கைகளை மாற்றியமைத்துள்ளது.

**20 பெண் குழந்தைகள் கல்வித் திட்டத்தை தொடங்கியது RC தில்லி சவுத்**
இந்தச் சங்கம் சென்ற ஆண்டு 273 பெண்களுக்குக் கல்வி உதவித் தொகைகளை வழங்கியது, இந்த ஆண்டு 500 பெண்களுக்கு உதவுகிறது.



**24 உறுப்பினர்கள் சேர்க்கைக்குரிய அங்கீகாரம்: ரோட்டரி தலைவர் சேகர் மேத்தா**
ஒவ்வொருவரும் ஒவ்வொருவரை அழைத்து வாருங்கள் என்னும் RI தலைவர் சேகர் மேத்தா அவர்களின் மந்திரத்தின்படி, ரோட்டரிக்குப் புதிய உறுப்பினர்களை அறிமுகப்படுத்தும் ரோட்டரியன்கள் சிறப்புப் பின்களால் பெருமைப்படுத்தப்படுவார்கள்.



**38 அஸ்ஸாம் கிராமங்களில் காட்டு யானைகள் புகுந்துவிடாமல் தடுக்கும் சூரியசக்தி ஒளிவிளக்குகள்**
யானைகளால் அடிக்கடி தாக்கப்பட்டு அச்சத்தில் தடுமாறிய 10 கிராமங்களில் சூரிய ஒளித் தெரு விளக்குகளை நிறுவியது RC டிக்போய்.

**42 அன்னபூர்ணா மலையில் பறந்த ரோட்டரிக் கொடி**
RC புனே காந்தி பவன் உறுப்பினர், பக்வான் சாவலே தன்னுடைய பயண அனுபவங்களைப் பகிர்ந்துகொள்கிறார்.



**62 கிஷோரி அமோன்கர்: (1932–2017) புரியாத புதிர்!**
தன்னுடைய தனித்துவமான குரலால் மேடை நிகழ்ச்சிகளிலும் திரை இசையிலும் புகழ் பெற்ற கலைஞர்.

**68 சிறுவயது உணவு நினைவுகளில் மூழ்கும் சமையல் வல்லுனர்கள்**
இப்போது மறக்கப்பட்டுவிட்ட இந்தச் சமையல் குறிப்புகளைப் பாருங்கள், உங்கள் தாயின் சமையல் நினைவுகளை இவை மீட்டுக் கொண்டுவரும்.




**அட்டையில்:** RI தலைவர் சேகர் மேத்தா உடன் பாரத பிரதமர் நரேந்திர மோடி.

## திலீப் குமார் பற்றிய மகிழ்ச்சி தரும் பாராட்டுரை


*ஆகஸ்ட் இதழின் அட்டையில் திலீப் குமார் புகைப்படத்தைக் கண்டு மகிழ்ந்தேன். அவரைப்பற்றிய இரண்டு அஞ்சலிக் கட்டுரைகளும் அருமை.*

*RI தலைவருடைய செய்தி, ரோட்டரியன்களுடன் தொடர்ந்து உரையாடவேண்டிய தேவையைப் பற்றிப் பேசுகிறது. பெண்களுக்கு ஆற்றல் அளித்தலுடைய முக்கியத்து வத்தைப்பற்றிய ஆசிரியர் குறிப்பு, சுற்றுச்சூழல், உறுப்பினர்களைத் தக்கவைத்தல், மேலும் பெண்களை ரோட்டரியில் சேர்த்தல் பற்றிய RI இயக்குநர்களுடைய செய்திகள் ஆகிய அனைத்தும் நன்கு அமைந்திருந்தன.*

*ராஜஸ்தானில் 700 வீடுகளுக் குப் பலன் அளிப்பதற்காக ஒரு தடுப் பணையைக் கட்டிய இரண்டு டெல்லி சங்கங்களின் மிகச் சிறந்த பணியைக் கண்டு மகிழ்ந்தோம். நம் மருத்துவர் களை வணங்குதல் என்ற PRIP ராஜேந்திர சாபூ அவர்களின் கட்டுரை, RC திருப்பூர் வழங்கும் சேவைகள் குறிப்பிடவேண்டியவை.*

*ஆப்பிரிக்காவின் காலநிலை நெருக்கடிபற்றிய கட்டுரை, ஒரு திருமண வரவேற்பு ஒடிஷா மாநிலத்தில் ஒரு கிராமப்புறக் கண் மருத்துவ மனையை உருவாக்குதல்பற்றிய கட்டுரை உள்ளிட்ட மற்ற அனைத்துக் கட்டுரைகளும் சங்கச் செய்திகளின் புகைப்படங்களும் நன்கு அமைந்திருந்தன. சிறப்பான இதழை வழங்கிய உங்களுக்குப் பாராட்டுகள்.*

*ஃபிலிப் முலப்பொனெ M T*
*RC திருவனந்தபுரம்*
*சப்அர்பன் — D 3211*




*புகழ் பெற்ற நடிகர் திலீப் குமாரைப் பற்றி ஆசிரியர் ரஷீதா பகத் எழுதிய பாணி, பொருள் மற்றும் நிறைய என்ற அஞ்சலிக் கட்டுரை எனக்கு மிகவும் பிடித்திருந்தது.*

*கிருதி மகிஜா, RC டெல்லி*
*சவுத் — D 3012*

*திலீப் குமார் பற்றிய கட்டுரையை எழுதியதற்கு நன்றி.*

*P N மோகன்*
*RC மெட்ராஸ் — D3232*

*ரோட்டரி நியூஸ் திலீப் குமாருக்கு இவ்வளவு பெரிய முக்கியத்துவம் தருவது ஏன் என்று எனக்குப் புரியவில்லை. நம்மிடம் பேசுவதற்கு ரோட்டரி திட்டங்கள் இல்லையா? அல்லது, தங்கள் அர்ப்பணிப்பு உள்ள பணியின்மூலம் சமூகங்களை மாற்றிய ரோட்டரியன்கள் இல்லையா? ரோட்டராக்டர்களும் மிகச் சிறந்த பணி ஆற்றுகிறார்கள், அதையும் நாம் பேசலாம்.*

*சந்தீப் கோயல், RC கர்னல்*
*மிட்-டவுன் — D 3080*

*திலீப் குமார் ஒரு முழுமையான நடிகர், அவருக்கு இணையாக யாரும் இல்லை. பெண்களுக்கு ஆற்றல் அளிக்கவேண்டும் என்கிற தலைவர் மேத்தாவின் பார்வை, முன்னாள் தலைவர் ஹோல்கர் நாக் வலியுறுத்தியுள்ள DEI மந்திரம் ஆகியவை முக்கியமானவை. ஏழைகளுக்கு, உதவுவதற்காக ஆப்பிரிக்காவிலும் இந்தியாவிலும் மருத்துவப் பணிகளைத் தலைமை தாங்கிய, ஊக்குவித்த PRIP சாபூ அவர்களை நான் பாராட்டுகிறேன்.*

*ராஜ் குமார் கபூர்*
*RC ரூப்நகர் — D 3080*

*தீவிரமான, சிந்தனையைத் தூண்டுகிற கட்டுரைகள், சிறந்த கலைஞராகிய திலீப் குமாரின் நினைவுகளைப் பேசுகிற, சிறந்த படங்களைக் கொண்ட பக்கங்கள் என்று இந்த இதழ் சிறப்பாக அமைந்திருந்தது. DEI பற்றிய ஆசிரியர் பக்கம் சிறப்பானது, விளையாட்டில் பெண்களைச் சேர்த்தலை ரோட்டரி திட்டங்களில் ஒரு நோக்கமாக எடுத்துக்கொள்ளவேண்டும்.*

*அபய் கிஷோர் சந்த்வார்*
*RC தன்பாத் மிட்-டவுன் — D 3250*

*மிகச் சிறந்த நடிகராகிய திலீப் குமார்பற்றிய உங்கள் கட்டுரையை நான் படித்தேன். பழைய நினைவுகள், எண்ணங்கள், நிகழ்வுகள் நன்கு சிறப்பாக எழுதப்பட்டிருந்தன, நன்றி.*

*உதய் சுபேதர், RC புனெ*
*மெட்ரோ — D 3131*

## பன்முகத்தன்மை, பெண்களுக்கு ஆற்றல் அளித்தலை முன்னிறுத்துவோம்

ஆகஸ்ட் ஆசிரியர் பக்கம், பெண்களுக்கு ஆற்றல் அளிப்பது பற்றிய RIன் புதிய மந்திரத்தைப் பின்பற்றும்படி ரோட்டரியன்களை ஊக்குவிக்கிறது. RI தலைவர் மேத்தா, RIDs A S வெங்கடேஷ் மற்றும் கோட்பாகி, மற்றும் PRIP சாபூ ஆகியோரின் பக்கங்களும் அருமை.

K M K மூர்த்தி
RC செகந்திராபாத் — D 3150

கல்வி உதவித்தொகைகள், பள்ளிகளில் கழிப்பறைகள் போன்ற திட்டங்களால் பெண்களுக்கு ஆற்றல் அளிக்கிற தலைவர் மேத்தாவின் மந்திரம், உறுப் பினர் எண்ணிக்கையை 1.2லிருந்து 1.3 மில்லியனுக்கு உயர்த்தும் தொலைநோக்கு ஆகியவை குறிப் பிடவேண்டியவை. எங்கள் சங்கத்தில் ஆறு புதிய உறுப்பினர்களில் மூன்று பெண்கள், சங்கச்செயல்பாடுகளில் முழுமையாகப் பங்கேற்கிறார்கள்.

கர்னல் விஜயகுமார் (ஓய்வு)
RC ஆலப்பி கிரேட்டர் — D 3211

புதிய உறுப்பினர்களை அழைத்து வரும் ரோட்டரியன்களைத் தலைவர்

*திலீப் குமாருடைய வாழ்க்கை பற்றிய அட்டைப்படக் கட்டுரை சிறப்பாக இருந்தது. சூரியனால் ஆற்றல் பெறுதல் என்ற தலைப்பில் பிரீத்தி மெஹ்ரா எழுதிய கட்டுரை வீட்டில் சூரிய ஒளி ஒளிமின்னழுத்த அமைப்பை அமைப்பதற்கான அடிப்படைத் தகவல்களுடன் நன்கு எழுதப்பட்டிருந்தது.*

*மோகன் P ஷாஜி*
RC *சேர்தலா கிரீன் சிட்டி* — D 3211

*திலீப் குமார் மதிப்புக்குரியவர் ஆனால், ரோட்டரி செய்திகளுடைய அட்டையில் தயவுசெய்து உண்மையான நாயகர்களைச் சேருங்கள்; ரோட்டரியில் அப்படிப்பட்ட பல நாயகர்கள் இருக்கிறார்கள். இது திரைப்பட இதழ் இல்லை என்பதால், திரைப்பட நாயகர்களை அங்கு சேர்க்கவேண்டாம். அனைத்தும் ஆசிரியருடைய கைகளில் தான் இருக்கின்றன.*

*ஷாம் ஃபட்னிஸ்*
RC *கர்கர் மிட்-டவுன்* — D 3131

*திலீப் குமார் அட்டைப்படம் மிக அருமை. ரோட்டரி நியூஸில் வரும் ரோட்டரி மற்றும் பிற பொது கட்டுரைகள் சுவாரசியமாக உள்ளன.*

*அதுல் பீடே,* RC *தானே ஹில்ஸ்* — D 3142

மேத்தா அங்கீகரிக்கப் போகிறார் என்பதை அறிந்து நான் மகிழ்கிறேன். பெண்களுக்கு ஆற்றல் அளிப்பதன் வழியாக இன்னும் சமநிலையான உலகம் என்பது பற்றிய ஆசிரியர் குறிப்பு ஊக்கம் அளிக்கிறது.

S முனியாண்டி
RC திண்டுக்கல் ஃபோர்ட் — D 3000

**ஒரு சக் தே கணம்**

ஒடிஷா மாநிலப் பெண்கள் "சக்தே இந்தியா"என்று சொல்கிறார்கள் என்கிற கட்டுரை உள்ளத்தைத் தொட்டது, ஊக்கம் அளித்தது. டோக்கியோ ஒலிம்பிக்ஸில் நம் நாடு மிகச் சிறந்த முன்னேற்றம் பெற்றிருக்கும் இந்த நேரத்துக்கு இந்தக் கட்டுரை மிக நன்கு பொருந்தியது.

**ஊக்கம் தரும் RI தலைவர்**

கனவு நெசவாளர் என்ற அட்டைப் படக் கட்டுரை பெரிய கனவு காண மனத்தைத் தூண்டியது.

Dr ஜெயசேகரன் V P
RC பையனூர் — D 3204

சூழலியல் திட்டங்கள் மிகவும் தேவைப்படுவதால், தலைவர் மேத்தாவின் சிறந்த செய்திக்காக அவரை வணங்குகிறேன்.

Dr A R ஜான்சன் துரை
RC கடலூர் — D 2981

தலைவர் மேத்தா நம் பொறுப்பு களைப்பற்றித் தெளிவான செய்தியை வழங்கியுள்ளார். நாம் நம்முடைய திட்டங்களை மெய்நிகர் தளங்களில் மேம்படுத்தவேண்டும்.

இந்திரா கோயங்கா
RC பேளூர் — D 3291

மேம்பட்ட விளக்கு மின்னட்டும் என்ற பிரீத்தி மெஹ்ரா-வின் கட்டுரை ஆற்றல் மிக்க, சுற்றுச்சூழலுக்கு இதமான LED, CFL விளக்குகளுக்கு மாறுவதன்மூலம் ஆற்றலைச் சேமிப் பதற்கான செயல்விளைவு மிக்க ஒரு தீர்வை வழங்குகிறது. இதனால் மின்சாரக் கட்டணத்தில் 6%க்கு மேல் சேமிக்கலாம்.

அஸ்வினி கர், RC புபனேஸ்வர் மீடோஸ் — D 3262

எங்கள் பணியை ரோட்டரி நியூஸில் பதிப்பித்ததற்கு நன்றி. உங்களுடைய நேர்விதமான, விரைவான செயல், தங்களுடைய சிறந்த பணியை நம் இதழின் வழியாகப் பகிர்ந்துகொள்ள பல ரோட்டரியன்களை ஊக்குவிக்கும்.

மணிக் ராஜ் சிங்லா
RC பட்டியாலா மிட்-டவுன் — D 3090

**K L சைகல், அறிவார்ந்த கலைஞர்**

K L சைகல்பற்றிய கட்டுரை எனக்கு மிகவும் பிடித்திருந்தது.

சதீஷ் வ்யாஸ்
RC பாவ்நகர் — D 3060

ரோட்டரி நியூஸ் இதழில் கட்டுரைகள் அருமை, அனைத்துப் படங்களும் கண்ணைக் கவர்கின்றன. ஏனெனில், அவை ரோட்டரியின் சாரத்தைப் படம் பிடிக்கின்றன, ரோட்டரியன் களின் பணியைக் காட்சிப்படுத்து கின்றன. மகிழ்ச்சி.

சஞ்சய் பஹுஜா
RC யமுனா நகர் —D 3080

**Correction**

In our August'21 issue please note the following correction: Manish Motwani is not a recipient of the Service Above Self Award (page 11). The information, sent by RI Communications, was incorrect.

We welcome your feedback. Write to the Editor:
**rotarynews@rosaonline.org; rushbhagat@gmail.com.**
Mail your project details, along with hi-res photos, to **rotarynewsmagazine@gmail.com.**

Messages on your club/district projects, information and links on zoom meetings/ webinar should be sent only by e-mail to the Editor at **rushbhagat@gmail.com** or **rotarynewsmagazine@gmail.com.** WHATSAPP MESSAGES WILL NOT BE ENTERTAINED.

Click on **Rotary News Plus** on our website **www.rotarynewsonline.org** to read about more Rotary projects.

# பெண் கல்வியிற்கான தடைகளை தகர்ப்போம்

SERVE TO CHANGE LIVES

ஒருவருடைய வாழ்க்கையில் நீங்கள் மிகப் பெரிய மாற்றத்தைக் கொண்டு வருவதற்கான வழிகளில் ஒன்று, அவருக்குப் படிக்கக் கற்றுத்தருவது. எழுத்தறிவு, நமக்கு உலகைத் திறந்துவைக்கிறது. அது, நம்முடைய சொந்தச் சமூகங்களில் வாழ்க்கையைப்பற்றி இன்னும் நன்கு அறிந்தவர்களாக நம்மை ஆக்குகிறது, பிற பண்பாடுகளைப்பற்றி நமக்குச் சொல்லித்தருகிறது. படிப்பதும் எழுதுவதும் மக்களை இணைக்கின்றன, ஒருவர்மீது மற்றவர் வைத்திருக்கும் அன்பை வெளிப்படுத்த இன்னொரு வழியை அளிக்கின்றன.


செப்டம்பர் மாதம், ரோட்டரியில் அடிப்படைக் கல்வி மற்றும் எழுத்தறிவு மாதம் ஆகும். ஏழ்மையைக் குறைக்கிற, நலனை மேம்படுத்துகிற, அமைதியை முன்னிறுத்துகிற நம் செயல்பாடுகளில் எழுத்தறிவுத் திறன்களை மேம்படுத்துவது முக்கியமாகும். உண்மையில், குறைந்த வருவாய் நாடுகளைச் சேர்ந்த அனைத்து மாணவர்களும் அடிப்படைப் படிக்கும் திறன்களுடன் பள்ளியிலிருந்து வெளியில் வந்தால், உலக ஏழ்மை விகிதங்களை அது குறிப்பிடக்கூடிய அளவு குறைக்கும்.

இன்று உலக வயதுவந்தோர் மக்கள் தொகையில் (762 மில்லியன் பேர்) 14% பேருக்கு அடிப்படைப் படித்தல், எழுதுதல் திறன் இல்லை. இந்தக் குழுவில் மூன்றில் இரண்டு பங்குப் பேர் பெண்கள். வாழ்நாள்முழுவதும் மேம்பட்ட வீட்டு வசதியை, நலப் பராமரிப்பை, வேலைகளைப் பெறுவதற்கு எழுத்தறிவு, எண்ணறிவுத் திறன்கள் தேவை.

எல்லாப் பெண்களும் தங்களுடைய அடிப்படைக் கல்வியை நிறைவு செய்தால், தாய்மார்களுடைய மரணங்கள் மிகவும் குறையும். ஒரு குழந்தை படிக்கத் தெரிந்த ஒரு தாய்க்குப் பிறந்தால், அது 5 வயதைத் தாண்டி வாழ்கிற சாத்தியம் கூடுகிறது. பெண்களுக்கான கல்வியில் உள்ள தடைகளை நாடுகள் நீக்கினால் தான் உலக அளவில் இன்னும் கூடுதலான மக்களுக்குப் பலன்களை மேம்படுத்த இயலும். இந்தச் செயலுக்கான பொருளாதார வாதம் மிகத் தெளிவாக உள்ளது: பள்ளிப் படிப்பு ஆண்களுக்குக் கூடுதலாக வழங்கப்படுகிற சில நாடுகளில், தவறவிடப்பட்ட பொருளாதார வாய்ப்பின் மதிப்பு, ஆண்டுக்கு 1 பில்லியனுக்குமேல்.

கல்வியின் வழியாக மக்களுக்கு ஆற்றல் அளிப்பது என்பது, ரோட்டரியன்களாகிய நம்முடைய மிகத் துணிவான இலக்குகளில் ஒன்று. இந்த மாதத்தில் தொடங்கி, உங்கள் சங்கம் எழுத்தறிவின் வழியாக வாழ்க்கைகளை மாற்றுவதற்கு எப்படிச் சேவை புரியலாம் என்று சிந்தியுங்கள்: வயதுவந்தோர் எழுத்தறிவை அல்லது உள்ளூர் மொழிக் கற்றலை ஆதரிக்கும் இலவசத் திட்டங்களை வழங்குகிற அல்லது படித்தல், எழுதுதலைச் சுற்றி அமைகிற தொழில் முன்னேற்றத்தை ஆசிரியர்களுக்கு வழங்குகிற உள்ளூர் அமைப்புகளை ஆதரியுங்கள். உலகெங்குமுள்ள குழந்தைகளுக்குக் கற்கும் வாய்ப்புகளை மிகுதியாக்குவதற்காக எழுத்தறிவு வழிகாட்டிகளாக ஆகுங்கள், அல்லது, கல்விக்கான பன்னாட்டுக் கூட்டுப் பணி போன்ற ஓர் அமைப்புடன் இணைந்து பணிபுரியுங்கள். உள்ளூர்ப் பள்ளிகள், நூலகங்களுடன் பேசுங்கள், அவர்களுடைய இப்போதைய திட்டங்களை ஆதரிப்பதற்கு, உங்கள் சமூகத்தில் தேவைப்படும் புதிய திட்டங்களை உருவாக்குவதற்கு உங்கள் சங்கம் எப்படி உதவலாம் என்று கேளுங்கள்.

இந்திய ரோட்டரி சங்கங்களுக்கும் இந்திய அரசுக்கும் இடையிலான வெற்றிகரமான உடனுழைப்புத் திட்டமான TEACH, இந்தியாவில் லட்சக்கணக்கான குழந்தைகளை எட்டுவதற்கு எழுத்தறிவுத் திட்டங்களின் அளவைப் பெருக்குவது எப்படி என்று காண்பித்துள்ளது. இந்தியாமுழுவதும் பள்ளிகள் Covid-19 நோய்ப்பரவலால் மூடப்பட்டிருக்கிற இந்த நேரத்தில், இந்தத் திட்டத்தின் மின் கற்றல் பகுதி தேசியத் தொலைக்காட்சி வழியாக 100 மில்லியனுக்கும் மேற்பட்ட குழந்தைகளை எட்டியது.



**சேகர் மேத்தா**
RI தலைவர்



# ஆப்கான் பெண்களுக்கு யார் உதவுவார்கள்?

“ஆப்கானிஸ்தானில் மீண்டும் தலிபான்கள் ஆட்சியைக் கைப் பற்றியுள்ளனர். எங்களை இனி யார் காப்பாற்றுவார்கள்?” என்று ஒரு பெண், காபூல் விமானநிலையத்தில் வேலிகளுக்குப் பின்னால் நின்று கொண்டு கூக்குரலிடும் அந்த காட்சிகளை பார்த்தபோது மனம் வேதனை அடைந்தது. ரோட்டரியின் கவனம் இப்போது பெண் குழந்தைகள் மற்றும் DEI (பன்முகத்தன்மை, சமஉரிமை மற்றும் சேர்த்தல்) என்பதும் என் நினைவுக்கு வந்தது.

2005ம் ஆண்டில் ஆப்கானிஸ்தானுக்குச் சென்று பத்து நாட்கள் தங்கி அங்கிருந்து செய்தி அறிக்கை கொடுத்ததும் நினைவுக்கு வந்தது. காபூலில் பெண்களுக்கான பிரத்யேக தோட்டத்தில் (பாக்-இ-ஜனானா) துடிப்பான ஒரு பெண்ணிடம் நான் கலந்துரையாடியதை நான் திரும்பிப் பார்க்கிறேன். தலிபான்கள் வெளியேறி நான்கு ஆண்டுகள் ஆகியிருந்த போதிலும் தலிபான்கள் நிகழ்த்திய கொடுமைகள் அவர்கள் மனதைவிட்டு அகலவில்லை. மேலும் அவர்கள் அன்னியர்களிடம் பேசுவதற்கே அஞ்சி னார்கள். யாருடனாவது மனம் திறந்து பேசினால், ஒரு வேளை அவர்கள் தலிபான்களுக்கு தகவல் அளிப்பவர்களாக இருப்பார்களோ என்ற பயம் அவர்கள் மனதில் இருந்தது. ஆனால், நான் இந்தியாவிலிருந்து வந்த ஒரு பெண் பத்திரிகையாளர் என்பதால் என்னிடம் திறந்த மனதுடன் பேசினார்கள். மீண்டும் தலிபான்கள் ஆட்சியைக் கைப்பற்றி பெண்கள் மீதான கொடுமைகளை அரங்கேற்றக் கூடும் என்ற எண்ணம் அவர்கள் மனதில் இருந்துகொண்டே இருந்தது.

சரி இப்போது தலிபான்கள் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றியுள்ளனர். சர்வதேச அளவில் தங்களுக்கு அங்கீகாரம் கிடைக்க வேண்டும் என்பதற்காக அரசியல் ரீதியில் சில அறிக்கைகளை வெளியிட்டுள்ளனர். பெண்களை கண்ணியமாக நடத்துவோம், பெண்கள் பள்ளி, கல்லூரிகளுக்குச் சென்று கல்வி கற்கலாம், பெண்கள் வேலைக்குச் செல்லலாம் என்று தெரிவித்துள்ளனர். ஆனால், கடந்த கால அனுபவங்கள் மற்றும் 1995–2001ம் ஆண்டுகளுக்கு இடையே ஆப்கான் பெண்கள் கொடுமை படுத்தப்பட்டது, இந்த அறிக்கைகள் வெறும் கண்துடைப்பு என்றே தோன்றுகிறது. மேற்கத்திய நாடுகளைச் சேர்ந்த வர்கள் உள்ளிட்ட பெண் பத்திரிகையாளர்கள் “பர்கா” அணிந்து துணிச்சலுடன் காபூல் தெருக்களில் உள்ளூர் மக்களையும், தலிபான்களையும் பேட்டி கண்டனர். ஒரு விடியோ காட்சியில், ஒரு பெண் பத்திரிகையாளர் தலிபான் தலைவர்களிடம், ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப் பட்ட பெண் அரசியல்வாதிகள் அரசை நிர்வகிக்க அனுமதிக் கப்படுவார்களா? என்று தலிபான் தலைவர் ஒருவரிடம் கேள்வி கேட்டபோது அவர், சிரித்துக்கொண்டே, அவரிடம், விடியோவை நிறுத்துமாறு கூறியதை நாம் பார்க்க முடிந்தது.

இப்போது அமெரிக்காவில் வசிக்கும் ஆப்கானிஸ்தான் விமானப்படையின் முதல் விமானி நிலோஃபர் ரஹ்மானி, தமது குடும்பம் மற்றும் நாட்டிலுள்ள பெண்களின் நிலை குறித்து அஞ்சுவதாக குறிப்பிட்டுள்ளார். மற்றவர்களைவிட பெண்கள், சிறுமிகள் அதிகம் இழக்க நேரிடும். கடந்த காலத்தில் தலிபான்கள் ஆட்சியில் நடந்த கொடூரச் சம்பவங்கள் இன்னமும் மனதில் நிழலாடுகின்றன. பொது இடங்களில் அடிப்பது, கைகளை வெட்டுவது, விளையாட்டு அரங்கங்களில் மரண தண்டனையை நிறைவேற்றுவது, வரலாற்றுச் சின்னங்களை அழிப்பது என அர்த்தமில்லாமல் பல கொடூரச் சம்பவங்கள் அரங்கேற்றப்பட்டன.

ஏறக்குறைய கடந்த 20 ஆண்டுகளாக பெண்கள் பர்கா அணியாமல் சுதந்திரமாக வெளியில் நடமாட முடிந்தது. பெண்கள் பள்ளி, கல்லூரிக்குச் சென்று படித்து மருத்துவர் களாகவும், வழக்கறிஞர்களாகவும் உருவானார்கள். ஏன் மக்கள் பிரதிநிதிகளாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மகளிர் கால்பந்து அணியும் உருவானது. இப்போது தலிபான்கள் மீண்டும் தலைதூக்கியுள்ளதால் இந்த வளர்ச்சி தேய்ந்துவிடும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

1990களில் தலிபான்கள் தடிகளால் பர்கா அணிந்த பெண்களை தாக்கியது எனக்கு மிகுந்த மனவேதனையை அளித்தது. தலிபான்கள் திட்டமிட்டு பெண்களை அச்சுறுத்தினர். வேலைக்குச் செல்வது, கல்வி கற்கும் உரிமை, நகைகள் அணிந்து அலங்கரித்துக் கொள்வது, கைகளில் நகம் வளர்த்து அதற்கு நகப் பாலிஷ் போடுவது, பொது இடங்களில் சிரித்து மகிழ்வது ஏன் முகத்தைக் காட்டக்கூட முடியாதவாறு அவர்களின் சுதந்திரம் பறிக்கப்பட்டது.

சிபா ஷாகிப் எழுதிய Afghanistan Where God comes only to weep புத்தகம்தான் எனக்கு நினைவுக்கு வந்தது. 1979ம் ஆண்டு ரஷியாவின் குண்டுவீச்சால் நாசமடைந்த தமது கிராமத்தை விட்டு வெளியேறிய துணிச்சலான பெண் ஷிரின்-கோல், குழந்தையாக இருந்தபோது காபூலுக்குச் சென்று பின் அங்கு பாகிஸ்தான் அகதிகள் முகாமில் இருந்து கொண்டு, நாட்டை விட்டு வெளியேற முடியாமல் தமது சகோதரர் சூதாட்டத்தில் பட்ட கடனை தீர்ப்பதற்காக கட்டாயத் திருமணம் செய்துகொண்டு குடும்பத்தை காப்பாற்ற தனது உடலையே விற்று போராட்ட வாழ்க்கை நடத்திய பெண்ணின் கதை. ஆப்கானில்தானில் உள்ள பல பெண்களின் சோகக்கதையும் இதுதான்.

ரஷீதா பகத்

## Governors Council

RID 2981 S Balaji
RID 2982 K Sundharalingam
RID 3000 R Jeyakkan
RID 3011 Anup Mittal
RID 3012 Ashok Aggarwal
RID 3020 Rama Rao M
RID 3030 Ramesh Vishwanath Meher
RID 3040 Col Mahendra Mishra
RID 3053 Sanjay Malviya
RID 3054 Ashok K Mangal
RID 3060 Santosh Prdhan
RID 3070 Dr Upinder Singh Ghai
RID 3080 Ajay Madan
RID 3090 Parveen Jindal
RID 3100 Rajiv Singhal
RID 3110 Mukesh Singhal
RID 3120 Samar Raj Garg
RID 3131 Pankaj Arun Shah
RID 3132 Dr Omprakash B Motipawale
RID 3141 Rajendra Agarwal
RID 3142 Dr Mayuresh Warke
RID 3150 K Prabhakar
RID 3160 Thirupathi Naidu V
RID 3170 Gaurishkumar Manohar Dhond
RID 3181 A R Ravindra Bhat
RID 3182 Ramachandra Murthy M G
RID 3190 Fazal Mahmood
RID 3201 Rajasekhar Srinivasan
RID 3203 Shanmugasundaram K
RID 3204 Dr Rajesh Subash
RID 3211 Srinivasan K
RID 3212 Jacintha Dharma
RID 3231 Nirmal Raghavan W M
RID 3232 Sridhar J
RID 3240 Dr Mohan Shyam Konwar
RID 3250 Pratim Banerjee
RID 3261 Sunil Phatak
RID 3262 Santanu Kumar Pani
RID 3291 Prabir Chatterjee



Printed by PT Prabhakar at Rasi Graphics Pvt Ltd, 40, Peters Road, Royapettah, Chennai - 600 014, India, and published by PT Prabhakar on behalf of Rotary News Trust from Dugar Towers, 3rd Flr, 34, Marshalls Road, Egmore, Chennai 600 008. Editor: Rasheeda Bhagat.



The views expressed by contributors are not necessarily those of the Editor or Trustees of Rotary News Trust (RNT) or Rotary International (RI). No liability can be accepted for any loss arising from editorial or advertisement content. Contributions — original content — is welcome but the Editor reserves the right to edit for clarity or length. Content can be reproduced with permission and attributed to RNT.


# RI இயக்குனர்

## உறுப்புக் கொடைபற்றிய விழிப்புணர்வை நாம் மிகுதியாக்கவேண்டும்

உலகில் மிகக் கூடுதலான எண்ணிக்கையில் உறுப்பு மாற்றுச் சிகிச்சைகளைச் செய்யும் நாடுகளில் அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக இந்தியா 2ம் இடத்தில் உள்ளது. எனினும், இந்தியாவில் உறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சை தேவைப்படுகிறவர்களுக்கும், அதைப் பெறுகிறவர்களுக்கும் நடுவில் ஒரு பெரிய இடைவெளி உள்ளது. இதற்கு முதன்மைக் காரணங்கள், விழிப்புணர்வின்மை, அறியாமை, உரிய உறுப்புக் கொடையாளர்கள், முறையான மருத்துவ வசதிகள் கிடைக்காமல் இருத்தல்.

உறுப்புகளைக் கொடையாக வழங்குவதற்குத் தன்னார்வத்துடன் முன்வந்து உறுதி வழங்குகிற விழிப் புணர்வை ஏற்படுத்த வேண்டும். அரசு இந்தப் பிரச்சனையைக் கையாள்வதற்காகத் தேசிய, பகுதி மற்றும் பிராந்திய நிலையில் உறுப்பு மற்றும் திசு மாற்றுச்சிகிச்சை அமைப்புகளை உருவாக்கியுள்ளது.

இரண்டு வகையான உறுப்புக் கொடைகள் உள்ளன: வாழும்போது வழங்கும் கொடை மற்றும் இறந்தபின் வழங்கும் கொடை. இந்தியச் சட்டங்களின்படி, ஓர் உறுப்பை நன்கொடையாக அளிப்பதற்கு நன் கொடையாளர்களும் அவர்களுடைய குடும்பத்தினரும் ஒப்புக்கொள்ளவேண்டும். இறந்தபின், உடனடிக் குடும்ப உறுப்பினர் ஒருவருடைய ஒப்புதல் தேவை.

இந்தியாவில் மிகப் புகழ் பெற்ற நன்கொடை, சிறுநீரக நன்கொடை ஆகும், அடுத்து, கல்லீரல் மாற்றுச் சிகிச்சை, மிகச் சிலர் தான் இதய மற்றும் நுரையீரல் மாற்றுச் சிகிச்சைக்கு முன் வருகிறார்கள். இந்தியாவில் உறுப்புக் கொடை விகிதத்தைப்பற்றி எந்தத் தரவுகளும் இல்லை என்றாலும், தேவைக்கும் வழங்கலுக்கும் இடையில் ஒரு பெரிய ஏற்றத்தாழ்வு தொடர்கிறது. 1994ல், மனித உறுப்புகளை நீக்குதல், சேமித்தல் மற்றும் மாற்றுச் சிகிச்சை செய்தலை ஒழுங்குபடுத்துவதற்காக மனித உறுப்புகள் மாற்றுச்சிகிச்சைச் சட்டம் செயலுக்கு வந்தது; இதிலிருந்த போதாமைகளைச் சரிசெய்வதற்காக இது 2011ல் திருத்தப்பட்டது.

ரோட்டரி போன்ற லாப நோக்கம் இல்லாத அமைப்புகள் உறுப்புக் கொடைபற்றிய விழிப்புணர்வைப் பெருக்குவது, அதற்கான செயல்முறையை எளிமையாக்குவதற்குச் சுறுசுறுப்பாக இயங்கிவருகின்றன, நன்கொடை அளிக்க உறுதியளிக்கும் செயல்முறை மிக எளிதானது என்று நம் உள்ளூர்ச் சமூகங்களுக்கு நாம் சொல்லித்தர வேண்டும். ஆனால், ஒட்டுமொத்தச் செயல்முறையும் வெளிப்படையாக இருக்கவேண்டும். ஏனெனில், இதற்குமுன் உறுப்புகள், குறிப்பாகச் சிறுநீரகங்கள் விற்பனையாவதுபற்றிய செய்திகள் வந்துள்ளன.

ரோட்டரியன்களாகிய நாம் இந்த முக்கியமான, தேவையான, மனிதர் ஒருவர் இறந்தபிறகும் செய்யக்கூடிய சேவையைப்பற்றிய விழிப்புணர்வைப் பரப்பவேண்டும்.





**Dr மகேஷ் கோட்பாகி**
RI இயக்குனர், 2021–23

# களின் செய்திகள்

## ஒவ்வொரு குழந்தைக்கும் தரமான கல்வி கிடைக்கவேண்டும்



முந்தைய சில வாரங்கள் கடினமாக இருந்தன. நோய்ப்பரவலுடன், ஹெயிட்டி-யில் நில நடுக்கம், கிரேக்கத்தில் கட்டுப்படுத்தப்படாத தீ, ஆஃப்கானிஸ்தான் பிரச்சனைகளை நாம் எதிர்கொண்டோம். பாதிக்கப் பட்டவர்களுக்காக நாம் வருந்துகிற அதே நேரத்தில், ரோட்டரி போன்ற அமைப்புகளின் பொருத்தத்தை இதுபோன்ற நிகழ்வுகள் வலுப்படுத்துகின்றன.

முன்பு எப்போதையும்விட வலுவாக நாம் உலக அமைதிக்கு நம்மை அர்ப்பணித்துக் கொண்டுள்ளோம். அமைதி என்றால், போர் இல்லாத நிலைமட்டு மில்லை. இந்த உலகில் உள்ள ஒவ்வொருவருக்கும் உணவு, ஆடை, உறைவிடம் உறுதியாகக் கிடைத்தால்தான் உண்மையான அமைதி சாத்தியமாகும். நோய் இல்லாத உலகை நம்மால் உருவாக்க இயன்றால்தான் அமைதி சாத்திய மாகும். ஒவ்வொருவருக்கும் கட்டுப்படியாகக்கூடிய விலையில் அடிப்படைக் கல்வி கிடைத்தால்தான் அமைதி சாத்தியமாகும்; நம் சேவை வாழ்க்கைகளை மாற்ற வேண்டும். இப்போதைய தேவை, குறிப்பிடக்கூடிய தாக்கத்தைக் கொண்ட பெரிய சேவைத் திட்டங்கள்.

இந்திய ரோட்டரியன்கள் இந்த நாட்டை முழு எழுத்தறிவு கொண்ட நாடாக ஆக்க உறுதியளித் திருக்கிறார்கள். இந்த மாதம், அடிப்படைக் கல்வி மற்றும் எழுத்தறிவு மாதம் என வகுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு சங்கமும் இந்த இலக்குக்கு இன்னும் அருகில் நம்மைச் செலுத்தும் ஒரு செயலைச் செய்யவேண்டும். நோய்ப்பரவலால் இன்னும் சிலர் கல்வி வலைப்பின்னலில் இருந்து வெளியில் தள்ளப்பட்டிருக்கலாம், அவர்களை அடையாளம் கண்டு பள்ளிக்கு அழைத்துவரவேண்டியது நம் கடமை. இந்த நாட்டில் உள்ள ஒவ்வொரு குழந்தையும் தரமான கல்வியைப் பெறட்டும். குழந்தைகள் விரும்பிச் செல்லக்கூடிய மகிழ்ச்சி இடமாக ஒவ்வொரு பள்ளியும் மாறட்டும். சுருக்கமாகச் சொன்னால், இந்த நாட்டில் உள்ள ஒவ்வொரு குழந்தைக்கும் தரமான கல்வியைக் கிடைக்கச் செய்வோம், அணுகச் செய்வோம், கட்டுப்படியாகச் செய்வோம். எழுத்தறிவுள்ள மக்கள் தொகை, வேறு பல செயல்பாட்டுக் கோளங்களிலும் ஒரு மாற்றத்தை உண்டாக்கலாம்.

வருங்காலத்தில் ரோட்டரி எப்படி இருக்கும் என்று நமக்குத் தெரியாது, ஆனால், நாம் இன்று என்ன செய்கிறோம் என்பதை அது பெருமளவு சார்ந்திருக்கும். நம் நிறுவனத்தின் எதிர்காலத்தைச் சிறப்பாக்க நம்மால் இயன்ற அனைத்தையும் செய்வோம்.



A S வெங்கடேஷ்
RI இயக்குனர், 2021–23


## Board of Trustees

Shekhar Mehta RID 3291
**RI President**

Dr Mahesh Kotbagi RID 3131
**RI Director &**
**Chairman, Rotary News Trust**

AS Venkatesh RID 3232
**RI Director**

Gulam A Vahanvaty RID 3141
**TRF Trustee**

Rajendra K Saboo RID 3080
Kalyan Banerjee RID 3060
Panduranga Setty RID 3190
Sushil Gupta RID 3011
Ashok Mahajan RID 3141
P T Prabhakar RID 3232
Dr Manoj D Desai RID 3060
C Basker RID 3000
Dr Bharat Pandya RID 3141
Kamal Sanghvi RID 3250

### Executive Committee Members (2021–22)

Gaurish Dhond RID 3170
**Chairman**
**Governors Council**

Anup Mittal RID 3011
**Secretary**
**Governors Council**

Ramesh Meher RID 3030
**Secretary**
**Executive Committee**

V Thirupathi Naidu RID 3160
**Treasurer**
**Executive Committee**

Jacintha Dharma RID 3212
**Member**
**Advisory Committee**




**Editor**
Rasheeda Bhagat

**Senior Assistant Editor**
Jaishree Padmanabhan

**Rotary News Trust**
3rd Floor, Dugar Towers,
34 Marshalls Road, Egmore
Chennai 600 008, India.
Phone: 044 42145666
*rotarynews@rosaonline.org*
*www.rotarynewsonline.org*

Now share articles from
*rotarynewsonline.org*
on WhatsApp.

## ஒரு விஷயத்தைப்பற்றிக் கனவு காண இயலும் என்றால், அதைச் சாதிக்கவும் இயலும்



சிறுமிகள், பெண்களுடைய கல்விக்காகப் போராடுகிற, பாகிஸ்தானைச் சேர்ந்த இளம் செயல்பாட்டாளர் மலாலா யூசுஃப்ஜாய். இன்றைக்கு உலகறிந்த ஆளுமையாகிவிட்ட மலாலா பதின் பருவத்தில் இருந்தபோது, பெண்களுடைய கற்கும் உரிமைக்காகத் துணிவோடு குரல் கொடுத்தார். அவருடைய நாட்டிலிருந்த தீவிரவாதிகள் மலாலா சொல்வதை ஏற்கவில்லை, அவர் பள்ளியிலிருந்து வீடு திரும்பிக்கொண்டிருந்த வழியில் ஒரு தாலிபன் போராளி அவரைச் சுட்டுவிட்டார்.

ஆனால், அந்தத் தாக்குதலைக் கண்டு மலாலா தன்னுடைய போராட்டத்திலிருந்து விலகிவிடவில்லை; அவர் குணமானவுடன், தன்னுடைய கல்விப் போராட்டப் பணியை மீண்டும் தொடங்கினார். இன்று மலாலா நிதி உலகெங்கும் பல திட்டங்களின் வழியாகக் கல்வியை ஆதரிக்கிறது.

மலாலா ரோட்டரி உறுப்பினர்களுக்கு ஊக்கம் அளிப்பதுடன், நம்மிடையில் சில பொதுத்தன்மைகளும் உள்ளன: சரியானதைச் செய்யும் தூண்டுதல், எழுத்தறிவைத் தூண்டும் பேரார்வம், கனவுகளை உண்மையாக மாற்றும் ஆற்றல்.

என்னுடைய வாழ்க்கைக் குறிக்கோள்களில் ஒன்று: உங்களால் ஒரு விஷயத்தைப்பற்றிக் கனவு காண இயலும் என்றால், அதைச் சாதிக்கவும் இயலும். ரோட்டரியன்கள் செய்கிற, குறிப்பாக, ரோட்டரி அறக்கட்டளையுடன் செய்கிற ஒவ்வொன்றுக்கும் இது பொருந்துகிறது, நாம் நம் கனவுகளை உண்மையாக்குகிறோம்.

மலாலாவைப்போல், எழுத்தறிவு என்பது பலரை ஏழ்மையிலிருந்து விடுவிக்கும் முதல் படி என்று நாம் அறிவோம். நம் சிந்தனையைச் செயலாக்குவதற்கு, நாம் முதலில் ஒரு சமூகத்தையும் அங்குள்ள உறுப்பினர்களின் தனித்துவமான பிரச்சனைகளையும் புரிந்துகொள்கிறோம்.

எழுத்தறிவுப் பரிசு என்பது ஒருமுறை புத்தகங்களை நன்கொடையாக அளிப்பதாக இருக்கக்கூடாது, காலப்போக்கில் ஒரு சமூகத்தை மாற்றும் ஒரு திட்டமாக இருக்கவேண்டும் என நாம் விரும்புகிறோம்.

கடந்த பல ஆண்டுகளாக, தேசியத் திட்டங்கள்முதல் உள்ளூர்த் திட்டங்கள்வரை நான் பல ரோட்டரி எழுத்தறிவுத் திட்டங்களைக் கண்டுள்ளேன். சென்ற ஆண்டில் பன்னாட்டு Covid-19 நோய்ப்பரவல் தாக்கியபோது, பல சங்கங்கள் உடனடியாகச் செயல்பட்டு இணையப் பள்ளி முறைக்குத் தங்களைத் தயார் செய்துகொள்ளச் சமூகங்களுக்கு உதவினார்கள், அவர்கள் மடிக்கணினிகளையும் வழங்கினார்கள். ரோட்டரி பல தீர்வுகளை வழங்குகிறது, நம் தன்னார்வலர்கள் ஓய்வின்றி உழைக்கிறார்கள். நீங்கள் ரோட்டரியின் வழியாக இதற்குப் பெரிய அளவில் உதவுகிறீர்கள், மக்கள் எழுத்தறிவுக்கான முதல் படியை எடுத்து வைக்க, ஏழைமையிலிருந்து வெளியில் வர, இன்னும் சிறந்த ஒன்றைப் பெற உதவுகிறீர்கள்.

நினைவிருக்கட்டும், உங்களால் ஒரு விஷயத்தைப்பற்றிக் கனவு காண இயலும் என்றால், அதைச் சாதிக்கவும் இயலும், மலாலாவைப்போல.

**ஜான் F ஜெர்ம்**
அறக்கட்டளை அறங்காவலர் தலைவர்



## பண்பாட்டுச் செழிப்பு

மியோகி வலாகெர்



செவ்வியல் கலை, சமகாலக் கலை, புகைப்படக்கலை, கட்டுமானக் கலை என நீங்கள் எதனால் ஈர்க்கப்பட்டாலும் சரி, ஹூஸ்டனில் உங்களுக்கு ஓர் அருங்காட்சியகம் உள்ளது. 2022 ரோட்டரி பன்னாட்டு மாநாடு ஜூன் 4–8 தேதிகளில் நடைபெறும்போது, இந்த நகரத்தின் அருங்காட்சியக மாவட்டத்துக்குச் செல்ல ஒரு நாளைத் திட்டமிடுங்கள்: அமெரிக்காவின் மிகச் சிறந்த சிறுவர் அருங்காட்சியகங்களில் ஒன்றான ஹூஸ்டன் சிறுவர்அருங்காட்சியகம்.

ஹூஸ்டன் கலை உலகின் முன்னோடிகளாக அறியப்படும் ஜான் மற்றும் டொமினிக் டி மெனில் அமைக்கச்செய்த ரொத்கோ தேவாலயம் 1971ல் திறக்கப்பட்டது, அப்போதிலிருந்து, கண்டிப்பாகக் காண வேண்டிய ஓர் இடமாக உள்ளது. இங்குள்ள, மார்க் ரொத்கோ-வின் 14 பெரிய, புலனாகாத ஓவியங்கள், வேண்டுமென்று செய்யப்பட்ட கட்டுமானத் தெரிவுகள் ஆகியவை ஆன்மிக ஆய்வை, சமூக மாற்றத்தைத் தூண்டும் நோக்கத்தைக் கொண்டவை.

ஹூஸ்டன் இயற்கை அறிவியல் அருங்காட்சியகத்துக்குச் செல்லுங்கள். அங்கு நீங்கள் காக்ரெல் பட்டுப்பூச்சி மையத்தில் நடக்கலாம், மழைக்காட்டுப் பாதுகாப்பு மையத்தின் நீர்வீழ்ச்சிக்குக் கீழ் எட்டிப் பார்க்கலாம், அங்கு காட்சிப்படுத்தப் பட்டுள்ள பல உயிரினங்களைப்பற்றிய பூச்சியியலாளர்களுடைய உரையைக் கேட்கலாம். மேலும், கிரிக்கெட் வறுவல் சுவையைப்பற்றிய குறுகுறுப்பு உங்களுக்கு எப்போதும் உண்டு என்றால், கவலை வேண்டாம், இங்குள்ள பூச்சி விற்கும் இயந்திரத்தில் ஒரு நொறுக்குத் தீனியை வாங்கிச் சாப்பிடுங்கள்.

**மேலும் தெரிந்துகொள்ள,**
convention.rotary.orgக்கு வாருங்கள்




## Membership Summary

As on August 1, 2021

| RI District | Rotary Clubs | No of Rotarians | Women Rotarians (%) | Rotaract Clubs | Interact Clubs | RCC |
|---|---|---|---|---|---|---|
| 2981 | 128 | 5,807 | 7.35 | 31 | 51 | 225 |
| 2982 | 76 | 3,373 | 7.03 | 44 | 97 | 68 |
| 3000 | 132 | 5,164 | 9.43 | 88 | 259 | 213 |
| 3011 | 121 | 4,410 | 27.71 | 68 | 113 | 36 |
| 3012 | 127 | 3,952 | 26.44 | 59 | 75 | 59 |
| 3020 | 76 | 4,255 | 6.51 | 26 | 166 | 350 |
| 3030 | 94 | 4,859 | 14.47 | 114 | 226 | 359 |
| 3040 | 102 | 2,536 | 14.31 | 40 | 78 | 196 |
| 3053 | 66 | 2,724 | 16.23 | 29 | 48 | 116 |
| 3054 | 183 | 7,345 | 20.12 | 99 | 167 | 562 |
| 3060 | 112 | 4,957 | 14.65 | 62 | 67 | 147 |
| 3070 | 120 | 3,177 | 15.33 | 34 | 23 | 58 |
| 3080 | 94 | 3,767 | 12.16 | 124 | 156 | 113 |
| 3090 | 88 | 2,223 | 4.27 | 32 | 17 | 123 |
| 3100 | 103 | 2,268 | 9.92 | 8 | 19 | 146 |
| 3110 | 133 | 3,516 | 10.18 | 11 | 15 | 106 |
| 3120 | 84 | 3,397 | 15.96 | 57 | 30 | 55 |
| 3131 | 135 | 4,900 | 22.8 | 98 | 223 | 131 |
| 3132 | 88 | 3,355 | 10.25 | 28 | 122 | 165 |
| 3141 | 116 | 6,061 | 26.28 | 131 | 175 | 100 |
| 3142 | 101 | 3,466 | 20.83 | 74 | 137 | 80 |
| 3150 | 114 | 4,038 | 13.32 | 74 | 135 | 118 |
| 3160 | 76 | 2,439 | 6.85 | 14 | 20 | 82 |
| 3170 | 137 | 5,910 | 13.87 | 82 | 236 | 171 |
| 3181 | 85 | 3,310 | 8.79 | 31 | 193 | 115 |
| 3182 | 84 | 3,143 | 9.51 | 42 | 124 | 104 |
| 3190 | 154 | 6,155 | 18.23 | 146 | 187 | 67 |
| 3201 | 151 | 5,774 | 8.83 | 92 | 87 | 54 |
| 3203 | 84 | 4,205 | 7.44 | 71 | 232 | 36 |
| 3204 | 61 | 1,944 | 6.07 | 16 | 22 | 13 |
| 3211 | 145 | 4,642 | 7.76 | 6 | 24 | 133 |
| 3212 | 141 | 5,102 | 11.9 | 74 | 204 | 153 |
| 3231 | 96 | 3,463 | 7.65 | 28 | 81 | 419 |
| 3232 | 144 | 7,254 | 16.75 | 105 | 209 | 97 |
| 3240 | 99 | 3,404 | 15.19 | 55 | 402 | 214 |
| 3250 | 102 | 3,702 | 19.94 | 59 | 73 | 184 |
| 3261 | 82 | 2,944 | 17.66 | 14 | 23 | 44 |
| 3262 | 116 | 3,877 | 13.03 | 62 | 47 | 80 |
| 3291 | 163 | 3,901 | 22.46 | 127 | 93 | 637 |
| **India Total** | **4,313** | **1,60,719** | | **2,355** | **4,656** | **6,129** |
| 3220 | 76 | 2,283 | 16.51 | 86 | 131 | 74 |
| 3271 | 122 | 1,984 | 16.43 | 89 | 134 | 24 |
| 3272 | 146 | 1,863 | 17.34 | 45 | 18 | 47 |
| 3281 | 299 | 8,102 | 18.71 | 261 | 144 | 208 |
| 3282 | 169 | 3,800 | 11.55 | 196 | 46 | 47 |
| 3292 | 152 | 5,941 | 16.55 | 164 | 125 | 127 |
| **S Asia Total** | **5,277** | **1,84,692** | | **3,196** | **5,254** | **6,656** |

*Source: RI South Asia Office*

## Rotary at a glance

| | | |
|---|---|---|
| Rotary clubs | : | 36,787 |
| Rotaract clubs | : | 10,408 |
| Interact clubs | : | 16,393 |
| *RCCs | : | 11,769 |
| Rotary members | : | 1,181,919 |
| Rotaract members | : | 221,650 |
| Interact members | : | 377, 039 |

*As on August 18, 2021*

# ஈரோட்டில் ரூ.20 கோடியில் 45 நாட்களில் உருவான மருத்துவமனை!

ரஷீதா பகத்

இந்த அற்புதமான மருத்துவமனையில் உங்கள் முன் நிற்கும்போது மகிழ்ச்சியில் திளைக்கிறேன். ரூ.20 கோடியில் ஒரு மருத்துவமனை அனைத்து வசதிகளுடனும் 45 நாட்களில் கட்டப்பட்டுள்ளது வியப்பளிக்கிறது. ஈரோடு ரோட்டேரியன்களால் 401 படுக்கை வசதிகளுடன் கட்டப்பட்ட இந்த கோவிட் மருத்துவமனை, ஈரோடு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை வசம் ஒப்படைக்கப்பட்ட நிகழ்வில் பேசும்போது RI தலைவர் சேகர் மேத்தா மேற்கண்டவாறு கூறினார்.

தொழில்முறையில் நானும் கட்டுமானத் தொழிலில் ஈடுபட்டிரு பவன் தான். சாதாரணமாக ஒரு கட்டடம் கட்டுவதானால் அஸ்திவாரம் எழுப்பவே 40 முதல் 45 நாட்களாகும். ஆனால், நீங்கள் ஒரு மருத்துவமனை கட்டடத்தையே 45 நாட்களில் கட்டி முடித்துவிட்டீர்கள். அதுமட்டுமல்ல, ஆக்சிஜன் வசதி உள்ளிட்ட அனைத்து வசதிகளுடன் மருத்துவ மனையை நிர்மாணித்துள்ளீர்கள். இது சிறப்புக்குரியது. ரோட்டரியின் வரலாற்றில் எழுதப்படும் திட்டமாக இது இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. என்னுடைய 36 ஆண்டுக்கால ரோட்டரி வரலாற்றில் இதுபோன்ற திட்டத்தை நான் பார்த்ததே இல்லை என்றார். மற்றொரு சாதகமான அம்சம் என்னவெனில், கூடுதல் படுக்கை வசதிகள் மூலம் 150 மருத்துவர்கள் இந்த மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை மூலம் பயிற்சி பெறமுடியும்.

RID 3203 PDG Dr E K சகாதேவன் பேசும் போது, பெரிய திட்டங்களை தைரியத்துடன் செயல்படுத்த ரோட்டேரியன்கள் முன்வரவேண்டும் என்று மேத்தா அடிக்கடி வலியுறுத்து வார். எனவே இந்த மருத்துவமனை திட்டத்தை நாங்கள் துரிதகதியில் கட்டி முடிக்க திட்டமிட்டோம் என்று கூறினார்.

முன்னதாக மருத்துவமனைத் திட்டம் உருவான வரலாற்றை PDG சகோதேவன் விளக்கினார். கோவிட் தொற்று இரண்டாவது

*ஈரோடு மருத்துவமனை வளாகத்தில் RI தலைவர் சேகர் மேத்தா, RIDs A S வெங்கடேஷ் மற்றும் மகேஷ் கோட்பாகி. (இடமிருந்து) DG K சுந்தரலிங்கம் (2982), Rtn K K விஜயசந்திரன், S செங்குட்டுவன், PDGs A கார்த்திகேயன், E K சகாதேவன், கிஷோர் குமார் (3020) C சிவஞானசெல்வம் (2982), P M சிவசங்கரன், DG சண்முகசுந்தரம், DGN K சுந்தரராஜன் மற்றும் K A குரியச்சன் ஆகியோரும் உள்ளனர்.*






**நிற்போர் (இடமிருந்து):** V *ராஜமாணிக்கம்* (Trust *துணைத்தலைவர்*), PDG *சிவசங்கரன்* (Trust *வழிகாட்டி*), V *மோகன்ராஜ் (பொருளாளர்),* G *சண்முகம் (நிறுவனர் அறங்காவலர்),* PDG Dr *சகாதேவன் (நிறுவனர் தலைவர்),* K K *விஜயசந்திரன் (துணை செயலாளர்),* M K *சிவகுமார் (அறங்காவலர்).* **அமர்ந்திருப்போர் (இடமிருந்து):** Rtn S *செங்குட்டுவன்* (Rotary Health Care Trust *தலைவர்*), RID *வெங்கடேஷ்,* DG K *சண்முகசுந்தரம்,* RI *தலைவர் சேகர் மேத்தா,* RID *மகேஷ் கோட்பாகி,* PDG *கிஷோர் குமார்.*

அலை மே மாதத்தில் உருவான போது கோயம்புத்தூர், சேலம் மற்றும் ஈரோட்டில் கொரோனா நோயாளி களுக்கு போதுமான படுக்கை வசதிகள் இல்லை. அவர்கள் அவசர சிகிச்சைக்காக ஆம்புலன்ஸில் ஆக்சிஜன் கருவிகளுடன் மருத்துவ மனைகளைத் தேடி அலைய நேரிட்டது. சிலர் மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவு படுக்கை வசதி கிடைக்காமல் உயிரிழக்கவும் நேரிட்டது. இதையடுத்து ஈரோடு ரோட்டரி சங்கத்தின் உறுப்பினர் ரோட்டேரியன் சிவபாலன், அரசு மருத்துவமனை டீன் டாக்டர் மணியை சந்தித்துப் பேசினார். அப்போது ஈரோடு ரோட்டரி சங்கம் சார்பில் 75 கோவிட் படுக்கைகளை மருத்துவ மனைக்கு நன்கொடையாக அளிக்க விரும்புவதாகத் தெரிவித்தார். அதற்கு டீன், “நீங்கள் படுக்கைகளை வழங்கினால் நான் அவற்றை எங்கே போடுவது, அவற்றை வைப்பதற்கு ஒரு மருத்துவமனையை கட்டித்தந்தால் நன்றாக இருக்கும். ஈரோடு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை டாக்டர்களுக்கு பயிற்சி அளிக்கும் வசதியுடன் 300 ஏக்கர் பரப்பளவில் பிரம்மாண்டமான வளாகத்தில் அமைந்துள்ளது” என்றார்.

### மிகப்பெரிய CSR நன்கொடைகள்

அரசு மருத்துவமனை நிலம் வழங்க முன்வந்ததை அடுத்து முதலில் ரூ.75 லட்சத்திலான திட்டம் பின்னர் ரூ.20 கோடி மருத்துவமனை திட்டமாக உருவெடுத்தது. ரூ.1.5 கோடி TRF சர்வதேச மானிய உதவியும் இதில் அடங்கும். மருத்துவமனை கட்டடம் எழுப்ப ரூ.14.5 கோடியும் ரூ.5.5 கோடி மருத்துவ சாதனங்களுக்காகவும் ரோட்டேரியன்கள் நிதி திரட்டினர். கட்டுமானத் தொழிலில் ஈடுபட்டுள்ள திருப்பூர் சவுத் ரோட்டரி சங்கத்தின் AKS உறுப்பினரான ரோட்டேரியன் K நந்தகோபால், முன்கூட்டியே தயாரிக்கப்பட்ட கான்கிரீட் தளங்களை பயன்படுத்தினால் மருத்துவமனையை விரைந்து கட்டி முடிக்கலாம் என்றார். தொடக்கத்தில் எங்களிடம் பணம் இல்லாததால், அவரே இத்திட்டத்துக்கு ரூ.1 கோடி நன்கொடையாக வழங்கினார். இதையடுத்து ரோட்டரி ஹெல்த்கேர் டிரஸ்ட் அமைக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து ஈரோடு ரோட்டரி சங்க உறுப்பினர்கள் 125 பேரும் தலா ரூ.5 லட்சம் நிதி அளிக்க முன்வந்தனர். அவர்கள் அனைவரும் அறங்காவலர்களாக நியமித்தோம். அடுத்ததாக, கார்ப்பொரேட் நிறுவனங்களின் CSR திட்டத்தின் கீழ் சக்தி மசாலா குழுமத்திடமிருந்து ரூ.2 கோடி, ஒளிரும் ஈரோடு அறக்கட்டளையிடமிருந்து ரூ.2 கோடி மற்றும் ஆதித்ய மசாலா தயாரிப்பு நிறுவனமான நானி அக்ரோபுட்ஸ் நிறுவனத்திடமிருந்து ரூ.1 கோடியும் நிதி பெறப்பட்டது. சகாதேவன் நிறுவன அறங்காவலர், ஈரோடு ரோட்டரி சங்கத்தின் முன்னாள் தலைவர் S செங்குட்டுவன் அறங்காவலர் குழு தலைவர். சிவபாலன் செயலாளர் உள்ளிட்ட கணிசமாக நன்கொடை வழங்கிய அனைவருமே நிர்வாக அறங்காவலர் அல்லது அறங்காவலர்களாக உள்ளனர். அனைத்து படுக்கைகளிலும் ஆக்சிஜன் வசதி. மருத்துவமனையில் 58 தீவிர சிகிச்சை பிரிவு படுக்கைகளும், 58 டயாலிஸிஸ் சிகிச்சைக்காக படுக்கை களும் உள்ளன. கோவிட் தொற்று பாதிப்பு அதிகம் இல்லையெனில் இவையும் கோவிட் அல்லாத சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனைகளாக மாற்றியமைக்கப்படும். மருத்துவர் ஆலோசனை அறைகளும், நான்கு அறுவைச்சிகிச்சை அரங்குகளும் அமைக்கப்படும். எதிர்காலத் தேவை களைக் கருத்தில் கொண்டு இந்த மருத்துவமனை வடிவமைக்கப் பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

இந்த திட்டத்தில் ஈடுபட்டுள்ள முக்கிய குழுவினரை மிகவும் உற்சாகப்படுத்தும் விஷயம் என்னவென்றால், இந்த மருத்துவ மனை நம் வாழ்நாள் முழுவதும் உயிரைக் காப்பாற்றும். எங்கள் நோக்கமும் அதுதான் என்று உணர்ச்சிப் பெருக்குடன் அவர் தெரிவித்தார். இந்த மருத்துவ மனையை குறுகிய காலத்தில் நிர்மாணிக்க நாங்கள் இரவு பகலாக உழைத்தபோது அரசு மருத்துவமனையில் 1,000 பேர் கோவிட் நோயாளிகளாக சிகிச்சை பெற்றுவந்தனர். எங்களுக்கும் தொற்று பரவிவிடுமோ என்று குடும்பத்தினர் கவலையில் இருந்தனர். ஆனால், நாங்கள் அசராமல் பணி செய்து இத்திட்டத்தை வெற்றிகரமாக முடித்தோம் என்றார்.

இந்த மருத்துவமனையை அமைப்பதற்கு முழு ஈடுபாட்டுடன் ஒத்துழைப்பு அளித்த DG K ஷண்முகசுந்தரம் மற்றும் PDG P M சிவசங்கரன் இருவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்வதாக அவர் கூறினார். இந்த திட்டம் ரோட்டரி மீது மக்களுக்கு உள்ள நன்மதிப்பை உயர்த்தியுள்ளது மட்டுமல்ல, ரோட்டரி வேகமாக வளர்ந்து வருவதையும் காட்டுகிறது. மருத்துவமனைக்கான கட்டுமானப் பணி தொடங்கியபோது ரோட்டரி உறுப்பினர்கள் அல்லாதவர்களும் ரூ.5 லட்சம் நன்கொடையாக வழங்கியுள்ளனர். பின்னர் ரோட்டரியில் இணைந்துள்ளனர். இந்த திட்டத்தின் மூலம் RC ஈரோடு மற்றும் RC ஈரோடு சென்ட்ரல் இரண்டிலும் சேர்த்து 100 புதிய உறுப்பினர்கள் சேர்ந்துள்ளனர் என்றார். இதர மாவட்டங்களில் உள்ள ரோட்டரி சங்கங்கள் மூலம் ரூ.2 லட்சம் நிதி கிடைத்தது. தற்போது இந்த அறக்கட்டளையில் 11 நிர்வாக அறங்காவலர்களும் 125 அறங்காவலர்களும் 200க்கும் மேலான உறுப்பினர்கள் உள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

முன்னாள் மாவட்ட ஆளுநர்களும் நிதியளித்துள்ளனர். வெளிநாடுகளிலிருந்தும் நிதியுதவி கிடைத்துள்ளது. எந்த நாட்டைச் சேர்ந்தவராக இருந்தாலும் நிதிப் பங்களிப்புச் செய்து அறங்காவலர் ஆகலாம் என்றார்.

இந்த சந்திப்பில் உரையாற்றிய மருத்துவமனையின் டீன் டாக்டர் மணி, சரியான நேரத்தில் உதவி செய்ய முன்வந்த ரோட்டரி மற்றும் ரோட்டேரியன்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன் என்றார்.

## நம்பிக்கை திருக்கோயில்

ரோட்டரி இயக்குநர் மகேஷ் கோட்பாகி, புனேயில் மருத்துவமனை நடத்திவரும் மருத்துவர். அவர் கூறுகிறார்: இந்தியாவில் நாம் கோயில் கட்டுகிறோம். ஆனால், இன்று நீங்கள் மக்களுக்குச் சேவைசெய்யும் கோயிலை கட்டியிருக்கிறீர்கள். அதுவும் ஒரு மருத்துவமனையை 45 நாட்களில். ரூ.20 கோடி நிதியை 45 நாட்களில் திரட்டி, அதாவது ஒரு நாளைக்கு சராசரியாக ரூ.50 லட்சம் திரட்டி சாதனை படைத்துள்ளீர்கள். இந்த மருத்துவமனையை 1 லட்சம் சதுர அடி பரப்பளவாக விரிவாக்கம் செய்யுமாறு நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன் என்றார்.

இரண்டாவது கோவிட் அலையின் போது புனேயில் உள்ள தமது மருத்துவமனையில் ஏற்பட்ட அனுபவத்தை அவர் பகிர்ந்து கொண்டார். ஒருநாள் மருத்துவமனை ஊழியர் ஒருவர் என்னிடம், தீவிர சிகிச்சைப் பிரிவில் 160 நோயாளிகள் சிகிச்சை பெற்று வருகின்றனர். நம் கைவசம் உள்ள மருத்துவ திரவ ஆக்சிஜன் இன்னும் நான்கு மணி நேரத்தில் தீர்ந்துவிடும் என்று சொன்னார். எனக்கு மூச்சே நின்று விடும் போல் இருந்தது. மருத்துவத் தொழிலில் ஈடுபட்டுள்ள நாங்கள்

*RI தலைவர் மேத்தா ஈரோடு அரசு மருத்துவமனை டீன் Dr மணியிடம் ரோட்டரி மருத்துவமனையின் சாவிகளை அளிக்கிறார்.*



தினமும் நிறைய நோயாளிகளை சந்திக்கிறோம். அவர்களின் வலியும், வேதனையும் எங்களுக்கு நன்றாகப் புரியும். புதிதாக மருத்துவமனையை கட்டுவது என்பது கடினமான வேலையாகும். மருத்துவமனையை நடத்திச் செல்வதும் அதை பராமரிப்பதும் அதைவிட கடினமானதாகும். இப்போது அரசு மருத்துவமனை டீன் டாக்டர் மணி, ஒரு நல்ல கோரிக்கையை வைத்துள்ளார். அதாவது மருத்துவமனையை கட்டிக் கொடுத்த ரோட்டரியே அதை பராமரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார். ரோட்டரி அவரின் கோரிக்கையை நிறைவேற்றும் என்று நான் உறுதியளிக்கிறேன் என்றார்.

ரோட்டரி இயக்குநர் A S வெங்கடேஷ், ரோட்டேரியன்கள் இத்திட்டத்தை குறுகிய காலத்தில் செயல்படுத்தியதற்காக பாராட்டினார். ஒரு குழந்தை பள்ளிக்குச் செல்லாததை பார்க்கும் போது, அந்த குழந்தையை பள்ளியில் சேர்க்காமல் அக்குழந்தைக்காக பள்ளியை கட்டுவது பற்றி யோசிப்பவன் தான் ரோட்டேரியன் என்றார். இப்போது நீங்கள் படுக்கைகளாக நன்கொடையாக வழங்குவதாக கூறி அதை வைப்பதற்கு மருத்துவமனையைக் கட்டிக் கொடுத்திருக்கிறீர்கள். இதன் மூலம் டாக்டர் மணிக்கு பேருதவி செய்திருக்கீறிர்கள் என்றார்.

ரோட்டரியின் தலைவர் சேகர் மேத்தாவின் சேவை செய்வோம், வளர்வோம் தாரக மந்திரத்தை குறிப்பிட்டு வெங்கடேஷ் பேசினார். எதையும் சிறியதாகச் செய்தால் அவர் திருப்தி அடையமாட்டார். எதுவாக இருந்தாலும் நேருக்கு நேர் சொல்லிவிடுவார். ரோட்டரியினர் உத்வேகத்துடனும் ஊக்கத்துடனும் எதையும் செய்ய வேண்டும் என்பார். இன்று நீங்கள் ஒரு நல்ல திட்டத்தை நிறைவேற்றி அவரை பெருமைப்படுத்தியுள்ளீர்கள். எந்த ஒரு நல்ல காரியத்தைச் செயல்படுத்த திட்டமிட்டாலும் அதற்குத் தேவையான பணம் வரும் என்பதை ரூ.20 கோடி நிதி திரட்டியதன் மூலம் நிரூபித்துள்ளீர்கள். புதிய தொழில்நுட்பம் மூலம் 45 நாட்களில் ஒரு மருத்துவமனையை கட்டி முடித்து சாதனை புரிந்துள்ளீர்கள் என்றார்.

TRF அறங்காவலர் குலாம் வாஹன்வதி பேசுகையில், இந்த திட்டத்துக்கு நன்கொடை வழங்கியவர்கள் தாராள மனதுடன் செயல்பட்டுள்ளனர். இதுபோன்ற தனித்துவமான திட்டத்தை கொண்டுவருவதில் உங்களுக்கு இருந்த ஆர்வத்தையும், புத்திசாலித்தனத்தையும் பாராட்டுகிறேன் என்றார்.


மேத்தா கடைசியாகச் சொன்னார், உங்கள் பிராந்தியத்தில் நீங்கள் வழங்கிய தலைமைக்காக RID வெங்கி மற்றும் Dr சகாதேவனுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்கள் செயலுக்கு தலைவணங்குகிறேன் என்றார்.

இனி உங்களது அடுத்த திட்டம் சிறியதாக இருக்க முடியாது. இதை விடப் பெரியதாகவும், துணிச்சல் மிகுந்ததாகவும் இருக்க வேண்டும். இது முடிந்தால் எனது பதவிக்காலத்தில் மீண்டும் ஒரு பெரிய திட்டத்தை தொடங்கிவைக்க நான் மீண்டும் வருவேன் என்று உறுதியளித்தார் சேகர் மேத்தா.

## நான்கு சாதனைகள்

*முன்னாள் மாவட்ட ஆளுநர் K சகாதேவன் கூறுகையில், இந்த திட்டம் விரிவாக்கம் செய்யப்பட்ட போதே புதிய தொழில்நுட்பத்துடன், 69,200 சதுர அடிபரப்பில், 45 நாட்களில் ஒரு மருத்துவமனையை கட்டி சாதனை செய்யப்போகிறோம் என்பது அறங்காவலர்களுக்குத் தெரியும்.*

*நாங்கள் நான்கு சாதனைகளுக்கு விண்ணப்பித்தோம். கட்டுமானம் நடந்து கொண்டிருக்கும்போதே அவர்களின் பிரதிநிதிகள் வந்து ஆய்வு செய்தனர். 45 நாட்களில் முன்கூட்டியே தயாரிக்கப்பட்ட கான்கிரீட் தளங்களைக் கொண்டு மிகப்பெரிய மருத்துவமனையை உருவாக்கினோம். இந்த திட்டத்துக்கு எலைட் உலக சாதனை, ஆசிய உலகசாதனை அகாதெமி, இந்திய ரெக்கார்ட்ஸ் அகாதெமி மற்றும் தமிழ்நாடு சாதனை புத்தகம் ஆகியவற்றில் இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.*




படங்கள்: ரஷிதா பகத்.

# RI தலைவரின் ஈரோடு பயணம்



*கோவை விமான நிலையத்தில் RI தலைவர் சேகர் மேத்தாவை வரவேற்கும் PDG A கார்த்திகேயன். PDGs A V பதி, K A குரியச்சன், Rtn S செங்குட்டுவன் மற்றும் PDG கிஷோர் குமார் ஆகியோரும் உள்ளனர்.*

*RID A S வெங்கடேஷ், RI தலைவர் மேத்தா மற்றும் RID மகேஷ் கோட்பாகி.*






*EOBO திட்டத்தின் கீழ் புதிய உறுப்பினர் சேர்க்கையிற்காக ரோட்டரியினரை மேத்தா பாராட்டுகிறார். RID கோட்பாகி மற்றும் DG சண்முகசுந்தரம் ஆகியோரும் உடன் உள்ளனர்.*








*RIDs வெங்கடேஷ் மற்றும் கோட்பாகியுடன் RI தலைவர் மேத்தா ஈரோடு மருத்துவமனையில்; (வலது) RID வெங்கடேஷ் உடன் சென்னை விமான நிலையத்தில்.*

புகைப்படங்கள்: ரஷீதா பகத்
வடிவமைப்பு: S. கிருஷ்ணப்ரதீஷ்

Rotary PEOPLE OF ACTION

# தீக்காயத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 10 ஆண்டுகளாக நம்பிக்கை அளித்துவரும் திட்டம்

ஜெய்ஸ்ரீ



கங்கா மருத்துவமனை இயக்குனர் Dr ராஜ சபாபதி

RC கோயம்புத்தூர் மெட்ரோபோலிஸ், RID 3201, கோயம்பத்தூர் கங்கா மருத்துவமனையுடன் இணைந்து செயல்படுத்திவரும் தீக்குப்பின் நம்பிக்கை (HAF) என்ற தனித்துவமான முதன்மைத் திட்டத்தால், 2012 முதல் தீக்காயத்தால் பாதிக்கப்பட்ட 600க்கும் மேற்பட்டோர் மிகுந்த பலன் பெற்றுள்ளார்கள்.

இந்தத் திட்டத்துக்குத் தலைமை தாங்குபவர், இந்தச் சங்கத்தின் உறுப்பினர், இந்த மருத்துவமனையின் இயக்குநர், அதன் மறு அமைப்பு அறுவைச் சிகிச்சைப் பிரிவுத் தலைவரான Dr S ராஜா சபாபதி. தொடர் அறுவைச் சிகிச்சை மறு கட்டமைப்புகளுக்குப்பிறகு, பாதிக்கப்பட்டோர் மிகவும் மேம்பட்ட நிலையில் வீடு திரும்ப இயலுகிறது, அதைவிட முக்கியமாக, தங்கள் கை, கால்களைப் பயன்படுத்திப் பயனுள்ள பணிகளைச் செய்ய இயலுகிறது என்று சுட்டிக்காண்பிக்கிறார் இவர்.

இந்தத் திட்டத்தின்கீழ் 1000வது அறுவைச் சிகிச்சை ஜூலை 21 அன்று டாக்டர் சபாபதியால் நிக்கி தேவி-க்குச் செய்யப்பட்டது. நிக்கியும் அவருடைய கணவரும் UPஐச் சேர்ந்த இடம் பெயர்ந்த தொழிலாளர்கள், ஈரோட்டில் தங்கள் இரு குழந்தைகளுடன் வசிப்பவர்கள். ஐந்து ஆண்டுகளுக்குமுன், சமையலின் போது ஒரு பெரிய தீ விபத்தால் நிக்கி-யின் முகம் பாதிக்கப்பட்டது. அவருடைய இடக்கையில் உள்ள விரல்கள் ஒன்றாக ஒட்டிக் கொண்டன, அந்தக் கை முற்றிலும் பயனற்றதாகிவிட்டது. மிகப் பெரிய அறுவைச் சிகிச்சையின் முதல் நிலை இது. ஆறு மாதங்களில், இன்னும் சில சிகிச்சைகளுக்குப்பின் அவர் நன்றாக ஆகிவிடுவார் என்கிறார் டாக்டர் சபாபதி.

ஏழை நோயாளிகளுக்கு இந்த அறுவைச் சிகிச்சைகள் இலவசமாகச் செய்யப்படுகின்றன என்கிறார் RC கோயம்புத்தூர் மெட்ரோபோலிஸ் தலைவர் பழனியப்பன். மருத்துவ மனைச் செலவுகளை, சங்கம் கவனித்துக் கொள்கிறது, அறுவைச் சிகிச்சை வல்லுனர் களுடைய கட்டணங்கள், பிற தொழில்முறைக் கட்டணங்களைத் தள்ளுபடி செய்வதன் மூலம் மருத்துவமனை பங்களிக்கிறது. ஆகஸ்ட் '21வரை இந்தத் திட்டத்தின் மதிப்பு ரூ.6.29 கோடி ($845,276). சங்கத்தின் அடுத்தடுத்த தலைவர்கள் வழக்கமான நிதி திரட்டலின் வழியாக (சுமார் ரூ.3.99 கோடி) இதை முழுமையாக ஆதரித்துவருகிறார்கள், மருத்துவ மனை 2012முதல் ரூ.2.3 கோடி மதிப்புள்ள சேவைகளை வழங்கிப் பங்களித்துள்ளது. ஆகஸ்ட் 2021வரை, தீக்காயத்தால் பாதிக்கப்பட்ட 606 பேருக்கு 1,010 மறு அமைப்பு அறுவைச் சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளன.

இதைத் தொடரவேண்டும், இதன் வீச்சைக் குறிப்பிடக்கூடிய அளவில் விரிவாக்கி மேலும் பல மக்களுக்குச் சென்றுசேர்க்கவேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். பணம் ஒரு தடை இல்லை. HAF பற்றிய விழிப்புணர்வை நாங்கள் பரப்ப விரும்புகிறோம், இதன் மூலம் மேலும் பல மக்கள் இந்த முன்னெடுப்பால்




*தீக்குப்பின் நம்பிக்கை திட்டத்தின் பயனாளிகள் ஸ்ரீஜா (மேலே) மற்றும் திலகவதி (கீழே).*







1000மாவது அறுவை சிகிச்சைப் பெற்ற நிக்கி தேவி





பலன் பெறலாம் என்கிறார் பழனியப்பன்.

தீ விபத்தால் பாதிக்கப் பட்டு உயிர் பிழைத்த பலர், உயிருடன் இருந்து சமூகத்தின் நிராகரிப்பைச் சந்திப்பதைவிட, தாங்கள் இறந்திருக்கலாம் என்று விரும்புகிறார்கள். இவர்களுடைய உடல் பகுதிகள் மாறியுள்ளதால், சிதைந்துள்ளதால் வரக்கூடிய மனச்சோர்வை எதிர்த்து இவர்கள் போராடுகிறார்கள், வயதான மக்கள் வாழ்வாதாரத்தைச் சம்பாதிக்கும் கூடுதல் சவாலை எதிர்கொள்கிறார்கள் என்கிறார் இந்த அறுவைச் சிகிச்சை வல்லுனர். சரியான சிகிச்சையின்மூலம் இதுபோன்ற சிதைவுகளைச் சரி செய்யலாம். ஆனால், அதற்கு ஓர் அமர்வு போதாது, நிறையப் பொறுமையும் உறுதியும் வேண்டும் என்று அவர் தொடர்ந்து கூறுகிறார்.

உயிர் பிழைத்தவர்களில் HAF கொண்டுவரும் செயல் மாற்றத்துக்காக, PRIPகள் ராஜேந்திர சாபூ, K R ரவீந்திரன், PRID C பாஸ்கர் போன்ற மூத்த ரோட்டரி தலைவர்கள் அதைப் பாராட்டியுள்ளார்கள். இந்த பயனாளிகளில் பலர் இயல்புக்கு அருகிலான வாழ்க்கைகளை வாழ்கிறார்கள், தங்கள் குடும்பத்தின் நிதி நலனுக்குக்கூடப் பங்களிக்கிறார்கள் என்று மிகுந்த பெருமையுடன் சொல்கிறார் டாக்டர் சபாபதி.

நாங்கள் சிகிச்சை அளித்துள்ள ஒவ்வொரு நோயாளியும் ஒரு கதையைச் சொல்வார். ஆனால், இந்தச் சிகிச்சையின் பலனை, நோயாளிகளுக்கும் அவர்களைச் சுற்றியுள்ளவர்களுக்கும் ஏற்படுகிற மகிழ்ச்சியைப் பார்க்கும் போதுதான் ரோட்டரியின் ஆற்றலை, மந்திரத்தை நாங்கள் உணர்கிறோம் என்று தொடர்ந்து கூறுகிறார் அவர். பிரிட்டிஷ் மருத்துவ இதழின் தெற்கு ஆசிய விருதுக் கான குறும்பட்டியலில் HAF இடம்பெற்றுள்ளது, இந்த விருதைத் தங்களால் வெல்ல இயலும் என்று இவர் நம்பிக்கை தெரிவிக்கிறார். ■

# பெண் குழந்தைகள் கல்வித் திட்டத்தை தொடங்கியது RC தில்லி சவுத்

ரஷீதா பகத்

2020–21 ரோட்டரி ஆண்டில் எங்கள் சங்கம் பெண் குழந்தைகளுக்கு அதிகாரம் அளித்தல் திட்டத்தைச் செயல்படுத்த முடிவு செய்தது. ஏனெனில் நாடு சுதந்திரம் பெற்று 73 ஆண்டுகளுக்குப் பின்னரும் பல இந்திய குடும்பங்களில் பெண் குழந்தைகள் பிறப்பதை வரவேற்பதில்லை என்பது நம்மில் அனைவருக்கும் தெரியும். பெரும்பாலும் பெண் குழந்தைகள் பிறப்பிலிருந்தே புறக்கணிக்கப் படுகிறார்கள். கல்வியாகட்டும் அல்லது மருத்துவ வசதிகளாகட்டும் பகுபாடு, வெறுப்புணர்வு, ஒடுக்கு முறை போன்றவற்றை எதிர்கொள்ள நேரிடுகிறது என்கிறார் தெற்கு தில்லி ரோட்டரி சங்கத்தின் செயலாளர் (20–21) கிருதிமகிஜா.

ஆரம்பக் கல்வியில்கூட நடுத்தர வர்க்கத்தில் கீழ்நிலையில் உள்ள குடும்பத்து பெண்கள் பல்வேறு இடையூறுகளை சந்திக்க வேண்டியிருக்கிறது என்பதால்தான் பிரதமர் நரேந்திர மோடி பெண் குழந்தைகளை பாதுகாப்போம், பெண் குழந்தைகளுக்கு கல்வி கற்பிப்போம் (Beti Bachao Beti Padhao) திட்டத்தைக் கொண்டுவந்துள்ளார். நாளைய பெண்களின் கல்வி மற்றும் சுதந்திரத்துக்காக Beti Ka Shiksha Aur Samman என்னும் திட்டத்தை நாங்கள் செயல்படுத்த தொடங்கியுள்ளோம். ஏழைக் குழந்தைகள் 200 பேருக்கு படிப்புச் செலவுக்காக உதவித் தொகை வழங்குவதே இத்த்திட்டத்தின் நோக்கமாகும் என்றார் அவர். இந்த திட்டத்தின் கீழ் ஏழை குடும்பங்களைச் சேர்ந்த 200 பெண் குழந்தைகள் பள்ளிக்குச் சென்று கல்வி கற்பதை உறுதிசெய்ய அவர்களுக்கு மாதம் ரூ.1,000 வீதம் வழங்கப்படுகிறது.

இத்திட்டம் அப்போது சங்கத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த தலைவர் அனில் கே. அகர்வாலின் சிந்தனையில் உதித்த திட்டமாகும். 53 ஆண்டுகளாகச் செயல்பட்டு வரும் RC தெற்கு தில்லியில் 64 உறுப்பினர்கள் உள்ளனர். மேலும் தில்லியில் உள்ள இரண்டாவது பழமையான சங்கம் இது. எங்கள் சங்கத்தின் தலைமைப் பதவிகளில் 40 சதவீதம் பெண்களே இருந்துள்ளனர் என்று கிருதிமகஜா பெருமையுடன் குறிப்பிட்டார்.

இந்த திட்டம் குறித்து சங்கத்தின் உறுப்பினர்களுடன் விரிவாக விவாதித்தபோது அவர்கள் அனைவரும் முழுமனதுடன் அதை வரவேற்றனர். திட்டத்தின் முதல் ஆண்டில் உறுப்பினர்கள் மற்றும் நன்கொடையாளர்களிடமிருந்து நல்லவரவேற்பு கிடைத்தது. நன்கொடையாளர்கள் பெரும்பாலும் உறுப்பினர்களின் குடும்பத்தினர் மற்றும் நண்பர்களாகவே இருந்தனர்.

இத்திட்டத்துக்காக ரூ.32.76 லட்சம் நிதி குவிந்தது. எங்களது இலக்கு 200 குழந்தைகள் என்றாலும் இதன் மூலம் 273 குழந்தைகளுக்கு உதவித்தொகை வழங்க முடியும் என்றார் கிருதி.

நண்பர்கள் மற்றும் குடும்பத் தினரிடமிருந்து நன்கொடைகள் பெற









உறுப்பினர்கள் கடுமையான முயற்சி களை மேற்கொண்டிருந்தனர். ஏழை குடும்பங்களைச் சேர்ந்த பெண் குழந்தைகளின் கல்வி முன்னேற்றத்துக் கான இந்த சமூக நலத் திட்டத்துக்கு உறுப்பினர்கள் ஒருங்கிணைந்து



செயலாற்றியது பாராட்டத்தக்கது என்றார் அகர்வால்.

நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த ஏழை குடும்பத்தைச் சேர்ந்த, அதே நேரத்தில் தரமான கல்வியை கற்க விரும்பும் சிறந்த மாணவர்களைத் தேர்ந்தெடுக்க சங்கம் ஒரு திட்டத்தை தயாரித்தது. நாங்கள் தேர்ந்தெடுத்த பெண் குழந்தைகள் சேரிப்பகுதியைச் சேர்ந்தவர்கள் அல்ல. அவர்கள் வறுமைக் கோட்டுக்கு மேலே இருப் பவர்கள். ஏற்கெனவே பள்ளிகளில் படித்து வருபவர்கள். ஆனால், கல்விக்கட்டணம் செலுத்த முடியாமல் நிதிப்பிரச்னையால் படிப்பை பாதியில் விட்டுவிடும் நிலையில் உள்ளவர்களையே தேர்ந்தெடுத்தோம். அவர்களின் பெற்றோர்கள் குழந்தையை பள்ளியில் படிக்க வைப்பதில் ஆர்வமுடையவர்களாக இருந்தனர். ஆனால், தரமான கல்வியைப் பெற பணம்தான் அவர்களுக்குப் பிரச்னையாக இருந்தது என்றார் அவர்.

எங்கள் திட்டமே தெளிவான வழிகாட்டு முறைகளைக் கொண்டிருந்தது. பயனாளிகள் தகுதியானவர்களாகவும், 6ம் வகுப்பு முதல் 8ம் வகுப்பு வரை அவர்களின் கல்வித்திறன் சிறப்பாகவும் இருக்க வேண்டும். அதாவது தேர்வுகளில் குறைந்தபட்சம் 65 சதவீத மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும் அல்லது கலை, விளையாட்டு, இசை உள்ளிட்ட துறைகளில் திறமை பெற்றவர்களாக இருக்க வேண்டும். மேலும் மாணவியின் குடும்ப வருமானம் மாதம் ரூ.20,000த்துக்கு மேல் இருக்கக்கூடாது என்றார் சங்கத்தின் தலைவர் அகர்வால்.

கல்வி உதவித்தொகை வழங்கு வதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவிகள் தில்லி மாநகராட்சி குழு பள்ளிகளைச் சேர்ந்தவர்கள். மேலும் ரோட்டேரியன் என்.எம்.டி.சி.க்கே சென்று தகுதி வாய்ந்த 200 மாணவி களையும் தேர்ந்தெடுத்துள்ளனர். 23 என்.எம்.டி.சி. பள்ளிகளிலிருந்து 200 மாணவிகள் தேர்வு செய்யப்பட்டு கடந்த ஜனவரி மாதத்திலிருந்து அவர்களுக்கு மாதம் தோறும் ரூ.1,000 கல்வி உதவித்தொகையாக வழங்கப்பட்டு வருகிறது.

இதில் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவெனில் இத்திட்டம் நிலையானது மட்டுமல்ல, நீண்ட கால நோக்குடையது. ஒரு முறை உதவித் தொகைக்காக மாணவிகள் தேர்ந்தெடுக்கப்பட்டால் அவர்கள் மேனிலைப் பள்ளியை முடிக்கும் வரை நாங்கள் பக்கபலமாக இருப்போம் என்றார் கிருதி. உதவித்தொகை பெறும் பெண் குழந்தைகள் சிறப்பாக படிக்கிறார்களா என்பதை கோவிட்

கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டவுடன், திட்டக் குழுவினர் குறிப்பிட்ட இடைவெளிகளில் சென்று பார்த்து அவர்களின் முன்னேற்றத்தை கண்காணிப்பார்கள்.

உதவித்தொகை ஒவ்வொரு மாணவியின் காலாண்டு அறிக்கை அட்டையையும் வாங்கிப் பார்ப்போம். அவர்களுக்கு ஏதாவது உதவி தேவைப்பட்டால் அதற்கும் ஆதரவு அளிப்போம். மாணவிகளின் ஆசிரியர்களிடமும் நாங்கள் தொடர்பில் இருந்துகொண்டு மாணவிகளின் முன்னேற்றத்தை கண்காணிப்போம் என்றார் அவர்.

அகர்வால் மற்றும் கிருதி இருவரும் இத்திட்டத்தை செயல்படுத்துவதில் மிகவும் ஆர்வமாக உள்ளனர். இத்திட்டம் நிலையாக இருக்க வேண்டும் என்றும் அவர்கள் விரும்புகின்றனர். மாணவிகள் பள்ளிப் படிப்பை முழுமையாக முடிக்க வேண்டும் என்பதுதான் அவர்களின் முக்கிய நோக்கம். நன்றாக படிக்கும் மாணவிகளுக்கு கல்லூரியில் சேர்ந்தாலும் உதவி அளிக்கப்படுமா என்று நான் கிருதியிடம் கேட்டேன்.

நாங்கள் அதுபற்றி இன்னும் சிந்திக்கவில்லை. ஆனால், இரண்டாவது கட்டமாக பள்ளிப் படிப்பை வெற்றிகரமாக முடித்தவர்களுக்கு தொழிற் பயிற்சி அளித்தால் அவர்கள் சுயமாக தொழில் செய்து சம்பாதிக்க முடியும் என்று எண்ணுகிறோம். எனினும் எதிர்காலத்தில் குறைந்த எண்ணிக்கையிலான் பெண்களுக்கு தொழிற்பயிற்சி அளிப்பது அல்லது கல்லூரிப் படிப்புக்கு உதவுவது என்ற முடிவை நாங்கள் எடுக்கக்கூடும் என்றார் அவர்.



தற்செயலாக அகர்வால் மற்றும் கிருதி இருவரும் உண்மையிலேயே பெண் குழந்தைகள் கல்வித்திட்டத்துக்கு கடுமையாக உழைத்துள்ளனர். இருவரும் சேர்ந்து தேவைப்பட்ட மொத்த பணத்தில் 80 சதவீதத்தை திரட்டியுள்ளனர். ஆன்லைன் வகுப்புக்குத் தேவையான வைஃபை வசதி, பாடபுத்தகங்கள், உபகரணங்கள் உள்ளிட்ட அவர்களின் தேவைகள் எங்கள் ஆதரவுடன் பூர்த்தி செய்யப் பட்டது குறித்து நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம் என்றார் அகர்வால்.

ஒரு பெண் குழந்தை, பள்ளிக் கல்வி என்பதையும் தாண்டி, அவள் சுதந்திரமாகவும், முடிவுகள் எடுக்கும் அதிகாரம் உள்ளவராகவும் உருவாகவேண்டும் என்பதே நோக்கம். வேலைவாய்ப்புக்கான சந்தையில் போட்டியிடும் அளவுக்கு அவர்கள் அறிவுள்ளவர்களாகவும், திறன் பெற்றவர்களாகவும் இருக்க வேண்டும் என்பதை சங்க உறுப்பினர்கள் உணர்ந்துள்ளனர். மாறிவரும் உலகில் சூழலுக்கு ஏற்ப தங்களை மாற்றிக்கொண்டு தங்களது வாழ்க்கையை முடிவு செய்பவர்களாக இருக்க வேண்டும். அத்துடன் உலகிற்கும், சமூதாயத்திற்கும் தங்கள் பங்களிப்பைச் செய்ய வேண்டும்.

இந்த இலக்கை நோக்கி ரோட்டரியின் 21–22ம் ஆண்டில் மற்றொரு திட்டத்தைச் செயல்படுத்த சங்கம் திட்டமிட்டுள்ளது. அதாவது 10 மற்றும் 12ம் வகுப்பு மாணவிகள் உயர்கல்வியைத் தொடரவும் அல்லது தொழிற்பயிற்சிக்கான ஆலோசனைகளையும் வழங்க திட்டமிட்டுள்ளோம். மாணவிகளின் ஆர்வம் எதில் உள்ளது என்பதை அடையாளம் காண சில நிறுவனங்களுடன் இணைந்து அவர்களுக்கு மனோதத்துவ பரிசோதனை மேற்கொள்ளவும் திட்டமிட்டுள்ளோம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த திட்டத்தின் முக்கிய உறுப்பினர்கள் 2021–22ம் ஆண்டில் 500 அல்லது அதற்கு மேற்பட்ட பெண் குழந்தைகளுக்கும் விரிவுபடுத்த திட்டமிட்டுள்ளனர். இதன் மூலம் இளம் பெண்கள் முறையான கல்வி பெற முடியும். மேலும் அரசாங்கத்தின் திட்டங்களை நன்கு புரிந்துகொண்டு நன்மைகளையும் பெறமுடியும். இது பற்றிய விழிப்புணர்வு இல்லாமல் மற்றவர்களிடம் உதவிகேட்கும் நிலையை தவிர்க்க முடியும் என்றார்.■



# 2023–24 RI தலைவராக கோர்டன் மெக்இனல்லி தேர்ந்தெடுக்கப்பட்டார்



2023–24க்கான RI தலைவரைப் பெயர் குறிப்பிடும் குழு, RC சவுத் க்வீன்ஸ்ஃபெர்ரி, லோதியன், ஸ்காட்லாந்து, உறுப்பினரான கார்டன் மெக்இனல்லி அவர்களைத் தேர்ந் தெடுத்துள்ளது. வேறு வேட்பாளர்கள் யாரும் பரிந்துரைக்கப்படாவிட்டால், அக்டோபர் 1 அன்று இவர் RIPNஆக அறிவிக்கப்படுவார்.

கோவிட்-19 நோய்ப்பரவலின் போது தொழில்நுட்ப அடிப்படையில் ரோட்டரி தன்னைத் தகவமைத்துக் கொண்டதை மெக்இனல்லி பாராட்டினார், ரோட்டரி வளரவும், உரையாடலை மிகுதியாக்கவும் விரும்புகிற சூழ்நிலையில் இந்த அணுகுமுறை தொடரவேண்டும், நம்முடைய பழைய நடவடிக்கைகளில் சிறந்தவற்றுடன் சேர்க்கப்பட வேண்டும் என்றார்.

உறுப்பினர் எண்ணிக்கையை மிகுதியாக்குவதற்கு மிகச்சிறந்த வழி, உரையாடல்தான் என்கிறார் மெக்இனல்லி. சங்கங்களை இன்னும் நன்றாக ஆதரிப்பதற்கு RI, பகுதித் தலைவர்கள், மாவட்டக் குழுக்கள் என அனைவரும் அவர்களுடன் உரையாடவேண்டும் என்கிறார் இவர். சமூக ஊடகங்களின்மூலம் உரையாடுவது ரோட்டரியின் பிராண்டை வலிமையாக்கும், அதனுடன் வரும் வாய்ப்புகளை வெளிச்சம் போட்டுக் காண்பிக்கும். மேலும், அரசுகள், பெருநிறுவனங்கள், பிற அமைப்புகளுடன் சேர்ந்து செயல்பட்டால், பொருளுள்ள கூட்டு முயற்சிகள் உருவாகும். உரையாடலை மேம்படுத்தினால், உறுப்பினர் எண்ணிக்கை, பொருளுள்ள சேவையை வழங்க இயலும் நம்முடைய திறன் ஆகிய இரு வழிகளிலும் நாம் ரோட்டரியை வளர்ப்போம்.''

உறுப்பினர் எண்ணிக்கைதான் நம் அமைப்பின் உயிர் நாடி என்று இவர் தொடர்ந்து கூறுகிறார். மாறுபட்ட மக்கள் தொகையினரை ஈர்க்கின்ற புதிய பாணிச்சங்கங்களை அமைப் பதற்கு இப்போது கிடைக்கும் நெகிழ்வுத்தன்மையைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்று நான் ஊக்குவிப்பேன்.''

டன்டீ பல்கலைக்கழகத்தில் பல் அறுவைச் சிகிச்சைத் துறையில் பட்டம் பெற்ற மெக்இனல்லி எடின்பர்கில் தன்னுடைய சொந்தப் பல் சிகிச்சைத் தொழிலை இயக்கிவந்தார்.

1984லிருந்து ரோட்டரி உறுப்பினராக இருக்கும் மெக்இனல்லி, கிரேட் பிரிட்டன் மற்றும் அயர்லாந்திலுள்ள RIன் தலைவராகவும், துணைத் தலைவராகவும் பொறுப்பு வகித்துள்ளார். RI இயக்குநராகவும், பல குழுக்களில் உறுப்பினராக அல்லது தலைவராகவும் இவர் சேவை புரிந்துள்ளார். இப்போது இவர் 2022 ஹூஸ்டன் மாநாட்டுக் குழுவின் ஆலோசகராகவும், செயல்பாடுகள் ஆய்வுக் குழுவின் துணைத் தலைவராகவும் இயங்கிவருகிறார்.

மெக்இனல்லியும் இவருடைய மனைவி ஹீத்தெரும் ரோட்டரி அறக்கட்டளையின் மிகப் பெரிய நன்கொடையாளர்கள் மற்றும் நன்மை வழங்குவோர் ஆவர். இவர்கள் சொத்து விட்டுச்செல்லல் குழு உறுப்பினர்களாகவும் செயல்படுகிறார்கள்.■

# மும்பை கோவிட் மையத்துக்கு மருத்துவக் கருவிகள்

ரோட்டரி செய்திக்குழு

வாஷி, மும்பையில் உள்ள தன் கோவிட் பராமரிப்பு மையத்தில் நோயாளி களுக்குச் சிகிச்சை அளிப் பதற்காக நவி மும்பை மாநகராட்சி அமைப்புக்கு ரூ.20 லட்சம் மதிப்புள்ள மருத்துவக் கருவிகளை நன்கொடையாக அளித்தது RC நியூ பாம்பே சீசைட் நெருல், RID 3142. இந்தத் திட்டம், GN ஹியரிங் இந்தியா ஆதரவுடன் செய்யப்பட்டது, இவர்கள் தங்கள் CSR நிதியளித்தலின் கீழ் இந்த நோக்கத்துக்காக நன்கொடை அளித்தார்கள். இந்த நெருக்கடி நேரப் பராமரிப்புக் கருவிகளை மாநகராட்சி ஆணையர் அபிஜித் பாங்கரிடம் DG மயூரேஷ் வார்கெ, GN ஹியரிங் இந்தியா MD சுனில் வின்ஜனேகர் ஆகியோர் வழங்கினார்கள். இந்த CSR செயல்பாடு, நிறுவனங்கள் ஒன்றாகச் சேர்ந்து சமூகத்துக்கு நன்மை செய்வதற்கான எடுத்துக் காட்டு என்றார் DG.■



# உறுப்பினர்கள் சேர்க்கைக்குரிய அங்கீகாரம்: ரோட்டரி தலைவர் சேகர் மேத்தா

V முத்துகுமரன்

தமது பதவிக்காலத்தில் இந்திய துணைக் கண்டத்தில் உள்ள 4,5,6 மற்றும் 7 ஆகிய ரோட்டரி மண்டலங்களில் ரோட்டேரியன்களுக்கான மூன்று அம்ச செயல்திட்டத்தை வகுத்துள்ளார் ரோட்டரித் தலைவர் சேகர் மேத்தா. ஒவ்வொருவரும் ஒரு புதிய உறுப்பினரைக் கொண்டு வரும் திட்டத்தின் கீழ் 25 புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பவர் களுக்கு “நன்றி” சான்றிதழ்கள் வழங்கப்படும். அதில் ரோட்டரி தலைவர் மற்றும் பொதுச் செயலர் கையெழுத்திட்டிருப்பார். அத்துடன் அவர்களின் புகைப்படங்கள் எவன்ஸ்டனில் உள்ள RI தலைமையகத்தில் மெய்நிகர் அரங்கில் வெளியிடப்படும் என்று தெரிவித்துள்ளார்.

மாவட்ட ஆளுநர்கள், மண்டலம் மற்றும் மாவட்ட ஒருங்கிணைப் பாளர்கள், பிராந்தியத் தலைவர்கள் மற்றும் சங்கத் தலைவர்களுடன் மெய்நிகர் முறையில் உரையாடிய தலைவர் சேகர் மேத்தா, மேலும் இரண்டு விஷயங்களில் கவனம் செலுத்துமாறு கேட்டுக் கொண்டார். ஒன்று மகளிர்க்கு அதிகாரமளித்தல் மற்றொன்று ரோட்டரி சேவை நாள்கள். இதில் சங்கங்கள் ஒன்றிணைந்து தங்கள் மாவட்டத்தின் சேவைத்திட்டங் களை காலாண்டுக்கு ஒரு முறை காட்சிப்படுத்தி அதில் ரோட்டரியினர் அல்லாதவர்களைக் கலந்துகொள்ளச் செய்யவேண்டும். இதன் மூலம் ரோட்டரி மீதான நன்மதிப்பை உயர்த்த முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ரோட்டரி இந்தியா மாவட்டங்கள் 3011 (தில்லி), 3141 (மும்பை) மற்றும் 3131 (புணே) ஆகியவற்றின் நிறுவன நிகழ்ச்சிகளில் பங்கேற்ற போது ஒவ்வொரு மாவட்டத்திலும் இந்த ஆண்டு உறுப்பினர்கள் எண்ணிக்கையை 2,000மாக உயர்த்து மாறு புதிய ஆளுநர்களை மேத்தா வலியுறுத்திக் கேட்டுக் கொண்டார். கடந்த 10–12 வருடங்களில் நம்மால் 40,000 புதிய உறுப்பினர்களை மட்டுமே சேர்க்க முடிந்தது.

கடந்த ஆண்டு (2020–21) மேற் குறிப்பிட்ட நான்கு மண்டலங் களிலும் நாம் 10,000 உறுப்பினர்களைச் சேர்த்துள்ளோம். இந்த ஆண்டின் முதல் 25 நாட்களில் இந்த மண்டலங்களில் ஏற்கெனவே 10,000 புதிய உறுப்பினர் கள் சேர்க்கப்பட்டுள்ளனர். ஒவ்வொரு சங்கமும் ஒவ்வொருவரும் ஒரு புதிய உறுப்பினரைக் கொண்டு வருவோம் (EOBO) திட்டத்தை பின்பற்றினால், நாம் வளர முடியும், என்றார் அவர்.

உத்தரப்பிரதேச முதல்வரை சந்தித்ததை நினைவுகூர்ந்த அவர், ஹரியாணா அரசுடனான புரிந்துணர்வு ஒப்பந்தம், பஞ்சாபில் உள்ள 1,000 பள்ளிகளுக்கான மின்கற்றல் பாடங்கள், அடுத்த ஐந்து ஆண்டுகளில் மத்திய அரசின் தடுப்பணை மற்றும் நீர்நிலைகள் திட்டங்களில் 10 சதவீதத்தை செயல்படுத்த உறுதியேற்றுள்ளதை விவரித்தார். மேலும் 2025 ஆம் ஆண்டுக்குள் எழுத்தறிவு இந்தியா (சாக்ஷார் பாரத்) என்ற ரோட்டரி இந்தியாவின் திட்டத்தைச் செயல்படுத்தும் லட்சியம் குறித்து பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் எழுத இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

ரோட்டரி கவனம் செலுத்தி வரும் 7 விஷயங்களில் திட்டங்களைச் செயல்படுத்துவதில் நிதியுதவி செய்யும் சரியான நபர்கள் அல்லது நிறுவனங்களை கண்டறிவதில் RILM மற்றும் RIHF ஆகியவற்றின் உதவிகளை மாவட்ட ஆளுநர்கள் கேட்டுப் பெறவேண்டும் என்று மேத்தா வலியுறுத்தினார்.

உறுப்பினர் சேர்க்கை குழுவின் தலைவரான PRID கமல் சங்வி ரோட்டரி உலகின் புதிய மந்திரங்களில் ஒன்று EOBO. நமது மண்டலம் ஒரு மாதத்தில் (ஜனவரி 23 முதல் பிப்ரவரி 23–2021) சவாலை எதிர்கொண்டுள்ளது.



*ரோட்டரி தலைவர் சேகர் மேத்தாவுடன்* RID A S *வெங்கடேஷ்.*

அதாவது பால் ஹாரிஸ் உறுப்பினர் சேர்க்கை சவாலின் கீழ் 6,000 புதிய உறுப்பினர்களை நாம் சேர்த்துள்ளோம் என்றார்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் 10 முதல் 15 இ-சங்கங்கள் உருவாக்கப்பட வேண்டும். உலக மக்கள் தொகையில் 48 சதவீதத்துக்கு எதிராக சர்வதேச அளவில் உறுப்பினர்கள் எண்ணிக்கை 24 சதவீதமாகவே உள்ளது. எனவே பெண் உறுப்பினர்களை அதிக அளவில் சேர்ப்பதில் நாம் கவனம் செலுத்த வேண்டும். இந்தியாவில் பெண் உறுப்பினர்கள் 16 சதவீதத் துக்கும் குறைவாகவே உள்ளனர். அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் காலனிகளில் ரோட்டரி சங்கங்களை உருவாக்கும் யோசனையையும் அவர் முன்வைத்தார்.

ரோட்டரி சங்கத்தில் ரோட்ராக்டர்கள் இணைவதை ஊக்குவிக்க வேண்டும். ஒவ்வொரு ரோட்டேரியனும் ஒரு ரோட்ராக்டரை ரோட்டரிக்கு கொண்டு வருமாறு உறுப்பினர்களை மாவட்ட ஆளுநர் உற்சாகப்படுத்த வேண்டும். அதிக செயல்திறன் கொண்ட திட்டங்களைச் செயல்படுத்துவதன் மூலம் ரோட்டரி பற்றிய நல்லெண்ணத்தை மக்களிடம் ஏற்படுத்த வேண்டும். நமது சேவைகள் மூலம் பெரும்பான்மையான மக்களைக் கவர வேண்டும். உறுப்பினர் களை இழந்துவிடாமல் இருக்க வேண்டுமானால், அவர்களை சேவைத் திட்டத்தில் ஈடுபடுத்திக் கொள்ள வாய்ப்பளிக்க வேண்டும் என்றார் சங்வி.

புதிய உறுப்பினர்களைக் கொண்டு வரும் ரோட்டேரியன்கள், சங்கங்கள், மாவட்ட ஆளுநர்கள் மற்றும் மாவட்ட தலைவர்களுக்கு ரோட்டரி தலைவரின் பாராட்டுக் கடிதமும் பேட்ஜும் (லெவல்1, 2 மற்றும் 3 என்ற அடிப்படையில்) அவர்கள் சேர்க்கும் புதிய உறுப்பினர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் வழங்கப்படும். இதேபோல 10 அல்லது அதற்கு மேற்பட்ட புதிய சங்கங்களை உருவாக்கும் DGs மற்றும் DMCs-களுக்கு நட்சத்திர குறியுடன் சான்றிதழ்களும் பேட்ஜு களும் வழங்கப்படும். 100 சதவீதம் உறுப்பினர்களை தக்கவைக்கும் மாவட்டங்கள் மற்றும் சங்கங்களுக்கு



RID *மகேஷ் கோட்பாகியுடன்* PRID *கமல் சங்வி.*

சிறப்பு பேட்ஜுகளும் தலைவர் கையெழுத்திடப்பட்ட பாராட்டிதழும் வழங்கப்படும்.

ரோட்டேரியன்கள் வேறு நகரங் களில் உள்ள தங்கள் உறவினர்கள் மற்றும் நண்பர்களையும் உறுப்பினர்கள் சேர்க்கைக்கு குறிப்பிடலாம். அவர் களுக்கும் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## வலைத்தளங்களுடன் தரவுகளை ஒத்திசைக்கவேண்டும்

RIன் அங்கீகாரத்தை பெற சங்கங்கள் தங்களது உறுப்பினர்கள் சேர்க்கை, திட்டங்கள், நிகழ்ச்சி செயல்பாடுகள் உள்ளிட்ட தரவுகளை அவ்வப்போது *rotaryindia.org* வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும் என்றார் RID மகேஷ் கோட்பாகி. ரோட்டரி சங்கங்கள் தங்கள் திட்டங்கள் மற்றும் செயல்பாடுகளை துரிதமாக அவ்வப்போது மேற்குறிப்பிட்ட வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும். இந்த வலைத்தளத்தை பயன்படுத்துவது தொடர்பாக ஆகஸ்ட் மாதம் 19ம் தேதியிலிருந்து ஒவ்வொரு புதன்கிழமையும் மாவட்ட ஆளுநர்கள், மாவட்டத் தலைவர்களுக்கும், சங்கத் தலைவர்களுக்கும் இதன் பயன்பாடு குறித்து வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

ஒவ்வொரு காலாண்டிலும் மாவட்டத்தில் உள்ள சங்கங்கள் தாங்கள் நிறைவேற்றிய மெகா திட்டங்கள் பற்றிய தகவல்களை படங்களுடன் பொது மக்கள் தெரிந்து கொள்ளும் வகையில் விளம்பரப் படுத்தலாம். இதன் மூலம் ரோட்டரி மீதான மதிப்பு உயரும். அதன் மூலம் புதிய உறுப்பினர்களை ரோட்டரிக்கு ஈர்க்க முடியும் என்றார் அவர்.

## பெண்களுக்கு அதிகாரமளித்தல்

RID A S வெங்கடேஷ் தமது விளக்கக் காட்சியில், கடந்த சில வருடங்களில் இந்தியா முழுவதும் 132 மில்லியன் சிறுமிகள் பள்ளிப்படிப்பை பாதியில் விட்டுள்ளதாகவும் இது மோசமான ஒரு சூழ்நிலையாகும் என்றும் தெரிவித்தார். ரோட்டரியின் கவனம் எல்லாம் மகளிரை மேம்படுத்துவதில் இருக்க வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார். இவர்களை மீண்டும் பள்ளிக்குத் திரும்பச் செய்ய வேண்டும். மேலும் அவர்களுக்கு திறன் வளர்ப்பு பயிற்சி அளிப்பதன் மூலம் அவர்கள் சுயமாக தொழில் செய்து வருமானத்தை பெருக்கிக் கொள்ள முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கிராமப்புற மகளிர் மேம்பாட்டுக்கான வேறு நல்ல யோசனைகள் இருந்தால் அதை மாவட்ட ஆளுநர்கள் *rotaryindia.org* வலைத்தளத்தில் தெரிவிக்கலாம் என்றார் வெங்கடேஷ்.■

# ஒரு மாரத்தான் மனிதர்

ராஜேந்திர சாபூ

எப்போதும் ஆற்றலுடன், ஆர்வத்துடன் இருந்தவர், எப்போதும் உடலளவில், உணர்வளவில் களைத்துப் போகாதவர், நெடுந்தொலைவுப் பந்தய வீரர், கார்லோ ரவிஜ்ஜா. பல திறன்களைக் கொண்ட இவர் 96 ஆண்டுகள் சுறுசுறுப்பாக வாழ்ந்தார். அவருடைய ரோட்டரி பயணத்தில் உடன் சென்ற தோழராகவும் சக பயணியாகவும் நான் அவருடைய நட்பை எப்போதும் மகிழ்ந்து அனுபவித்தேன்.

கார்லோ இத்தாலியில் உள்ள மிலனில் ஒரு வளமான குடும்பத்தில் பிறந்தார். அவருடைய தந்தை பெயரும் கார்லோ தான். இவர் சுவிட்சர்லாந்தில் உள்ள கால்லெனில் பிறந்தவர். மூத்த கார்லோ முதல் உலகப் போருக்குப் பின் மிலனில் குடியேறினார், 1971ல் அவர் மிலானோ சுட்-ஒவெஸ்ட், இத்தாலி, ரோட்டரி சங்க உறுப்பினர் ஆனார். 1977–78ல் மாவட்ட ஆளுநர் ஆனார்.

1976–77ல் நான் மாவட்ட ஆளுநராக இருந்தேன், அந்தக் காலகட்டத்தில் நாங்கள் சந்தித்தோம். 1981–83ல் நான் RI இயக்குநராக இருந்தேன், அவர் 1984–86ல் அந்தப் பொறுப்பை வகித்தார். அந்த ஆண்டுகளில் நாங்கள் அடிக்கடி சந்தித்துப் பேசினோம். நான் தொழில் காரணமாக ஜூரிச் வழியாகத் தெற்கு ஜெர்மனிக்குச் செல்வேன். கார்லோவின் வீடும் அலுவலகமும் லுஜெர்னைச் சுற்றி இருந்தன, நாங்கள் மதிய உணவுக்குச் சந்திப்போம். உஷா என்னுடன் இருந்தால், ரோசன்னாவும் கலந்துகொள்வார். எங்களுக்காகச் சைவ உணவு சமைப்பது அவர்களுக்குப் பிடிக்கும்.

நான் RI தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது, நான் மாநாட்டுக் குழுவை விரைவில் தீர்மானிக்கவேண்டியிருந்தது. அந்த மாநாடு ஒர்லாண்டோவில் நடந்தது. நான் கார்லோ-வை மாநாட்டுத் துணைத் தலைவராக நியமித்தேன். அவருடைய மாவட்டம் RI தலைவர் (1993–94) பொறுப்புக்கு அவருடைய பெயரை முன்வைத்தது. அதற்குப் பதிலாக, சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த ராபர்ட் பார்த் தேர்ந்தெடுக்கப்பட்டார். RI தலைவராகிய நான், 1991ல் லண்டனில் நடைபெற்ற RIBI மற்றும் ஐரோப்பாவின் ஒருங்கிணைந்த ரோட்டரி சந்திப்பில் கலந்து கொண்டேன். கார்லோ தன்னுடைய பெரும் ஏமாற்றத்தை என்னிடம் வெளிப்படுத்தினார். பின்னர், நான் அவருக்கு ஆறுதல் கூறினேன், “தேர்ந்தெடுக்கும் குழு ஐரோப்பாவைக் கருத்தில் கொள்ளும்போது, உங்கள் பண்புகள், அனுபவத்தால் நீங்கள் நிச்சயம் அந்த வாய்ப்பைப் பெறுவீர்கள்” என்றேன்.

1998ல் அந்த வாய்ப்பு வந்தது. அவர் 1999–2000க்கான RI தலைவர் ஆனார். அவருடைய பன்னாட்டுச் சந்திப்பில் அவர் முன்னோக்கிச் சிந்திக்கும் ரோட்டரி 2000: ஒரே மாதிரியாக, நம்பகத்தன்மையுடன், தொடர்ச்சியுடன் செயலாற்றுவோம்” என்ற கருப்பொருளை அறிவித்தார்.

கார்லோ தன்னுடைய துணை ஆளுமையாக ஜொனாத்தன் மஜியக்பெ-யைத் தேர்ந்தெடுத்தார், இவர் பிறகு RI தலைவராக ஆனார். அதற்குமுன் ஜொனாத்தனை TRF அறங்காவலராக நியமித்திருந்தார் RI தலைவர் ராபர்ட் பார்த்; அப்போது அவருடைய செயல்திறனைப் பார்த்துக் கார்லோ ஈர்க்கப்பட்டிருந்தார். அத்துடன், கார்லோவும் ஜொனாத்தனும் நல்ல நண்பர்களாக இருந்தார்கள். ஆப்பிரிக்காவிலிருந்து ஓர் அறிவாளியான, சிந்தனை மிக்க, அறிவுள்ள ரோட்டரி தலைவரைத் தான் விரும்பியதாகக் கார்லோ குறிப்பிட்டார். ஜொனாத்தன் அந்த இடத்தை நிரப்பினார், அவருடைய நம்பிக்கையைப் பெற்ற

*PRIP கார்லோ ரவிஜ்ஜா மற்றும் ரொஸன்னா தம்பதியினர் தில்லியில் PRIP ராஜேந்திர சாபூவுடன்.*





**இடமிருந்து:** *வினிதா (PRID சுஷில் குப்தாவின் மனைவி), PRIP சாபூ, ரொசன்னா மற்றும் PRIP ரவீஜ்ஜா, முன்னாள் குடியரசு தலைவர் அப்துல் கலாம், PRIP க்லென் எஸ்டெஸ், PRID சுஷில் குப்தா, PRID சுதர்ஷன் அகர்வால் மற்றும் PRIP கல்யாண் பானர்ஜி 2004ல் தில்லியில் நடைபெற்ற இளம்பிள்ளைவாத மாநாட்டில்.*

அறிவுரையாளராக ஆனார்.

கார்லோ பலமுறை இந்தியாவுக்கு வந்தார். அவர் இளம்பிள்ளைவாதத்தை அகற்றுவதில் பேரார்வத்துடன் இருந்தார். 1998ல் அப்போதைய RI இயக்குநர் கல்யாண் பேனர்ஜி தலைமையில் நடைபெற்ற 1997 ரோட்டரி சந்திப்பில் கலந்து கொள்ளக் கார்லோவும் ரோசன்னாவும் வந்தார்கள். 9 டிசம்பர் 1997ல் மனித குலத்துக்கான சேவைக்கு வழங்கப்படும் 7வது ரோட்டரி விருதுகள் நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக அவர்கள் சில நாட்கள் முன்கூட்டியே வந்தார்கள்.

சில நாட்களுக்குள், ஜனவரி 12–16, 1998ல் தில்லியில் நடைபெற்ற CoLல் கலந்து கொள்வதற்காக, RI தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவராகக் கார்லோவும் ரோசன்னாவும் மீண்டும் வந்தார்கள். அதன்பிறகு, நட்பு அடிப்படையில் கார்லோவும் ரோசன்னாவும் சண்டிகருக்கு வந்தார்கள். ஒரு பள்ளியில் ஓர் இன்டராக்ட் சங்கத்தின் நிறுவல் நிகழ்ச்சியிலும், பணி வாழ்க்கைக் கருத்தரங்கம் ஒன்றிலும் அவர் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார். அவர்கள் சண்டிகரி லிருந்து என்னுடன் தில்லி கிளம்பினார்கள், அம்பாலா-வில் உள்ள மறைந்த PRID Y P தாஸ் இல்லத்தில் நாங்கள் தங்கினோம். பின்னர், நாங்கள் தில்லியில் தங்கினோம், புகழ் பெற்ற குடியரசு நாள் அணிவகுப்பைப் பார்த்தோம்.

ஜனவரி 1999ல், RI தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டவரான கார்லோ பாகிஸ்தான் சென்றார்; ஜனவரி 29ல் லாகூரிலிருந்து அவர்கள் வாகா-வைக் (அட்டாரி எல்லை) கடந்தார்கள். ஏப்ரல் 2, 1999ல் கார்லோ RI தலைவராகக் கொல்கத்தா வந்தார். RI தலைவர் சேகர் மேத்தா (அப்போது கார்லோவின் குழுவில் DG) அவரை வரவேற்றார்.

ஆகஸ்ட் 2004ல், RI தலைவர் க்ளென் எஸ்டெஸ்ஸுடன் TRF தலைவராக அவர் தில்லிக்கு வந்தார், இளம்பிள்ளைவாத மாநாட்டில் கலந்துகொண்டார். அப்போதைய RI இயக்குனர் சுஷீல் குப்தா தலைமையில் இந்த நிகழ்ச்சி நடைபெற்றது. இதன் தலைமை விருந்தினர், இந்தியக் குடியரசுத் தலைவர் APJ அப்துல் கலாம், PRIP பேனர்ஜியும் அங்கு இருந்தனர். நாங்கள் இந்தியக் குடியரசுத் தலைவரையும் பிரதமர் மன்மோகன் சிங்கையும் சந்தித்தோம்.

2002 டிசம்பரில் சென்னையில் நடைபெற்ற ரோட்டரி சந்திப்பில் கலந்துகொள்ளக் கார்லோ வந்திருந்தார். பெரும்பாலும் முன்னாள் ஆளுநர்களைக் கொண்ட பார்வையாளர்களிடம் பேசிய அவர், RI தலைவருடைய பிரதிநிதியாக நான் 55 மாவட்டக் கருத்தரங்குகளைக் கண்டுள்ளேன் என்றார். பின்னர், ஒரு நண்பர் என்ற முறையில் நான் அவரிடம் இவ்வாறு சொன்னேன், “பெரும்பாலான முன்னாள் ஆளுநர்கள் RI தலைவருடைய பிரதி நிதியாக ஒருமுறைகூடச் சேவையாற்றியதில்லை.” தான் செய்ததை அவர் உடனடியாக உணர்ந்தார், அந்த அறிவுரைக்காக எனக்கு உளமார நன்றி கூறினார்.

நான் கார்லோ-வை ஓர் எதார்த்தத் தொலைநோக்காளராக அறிவேன். ரோசன்னா எப்போதும் அவருடைய வெளிப்பகுதியைச் சமன் செய்தார். அந்தத் தம்பதியரை எங்களுடைய மிகச் சிறந்த நண்பர்களாக உஷாவும் நானும் நினைவுகூர்கிறோம்.

ஒருமுறை, எவான்ஸ்டனில் நான் அவரைக் கேட்டேன், “நீங்கள் காலை நடைக்கு எங்கு செல்கிறீர்கள்?” “சுமார் 15 கிமீ தொலைவில் உள்ள சிகாகோவுக்கு” என்றார் அவர். “அதன்பிறகு, எப்படித் திரும்புவீர்கள்?” என்று நான் கேட்டேன். “அதேபோல் நடந்துதான் திரும்புவேன்” என்று பதில் சொன்னார் அவர். உண்மை யில், கார்லோ ஒரு மாரத்தான் நடைவீரர். அவருடைய நோக்கம், பிறரை எதிர்த்து வெல்வது இல்லை, தனக்குத் தானே சவால் விடுவது தான். அவர் உண்மையில் ஒரு வாழ்க்கை மாரத்தான் வீரர்.■

# RI தலைவர் மேத்தாவிற்கு கொல்கத்தாவில் கோலாகல திருவிழா

ரஷீதா பகத்

சேகர் மேத்தா RI தலைவராகப் பொறுப்பேற்றுக் கொள்கிற நாளில், பன்னாட்டு உறுப்பினர் குழுத் தலைவர் கமல் சங்வி கொல்கத்தாவில் ஏற்பாடு செய்த ஒரு கொண்டாட்டமான விழாவில், இந்தியாவின் மூத்த ரோட்டரி தலைவர்கள் மேத்தாவையும் ராஷியையும் பாராட்டினார்கள். RI இயக்குநர் மகேஷ் கோட்பாகி, அவருடைய மனைவி அமிதா, TRF அறங்காவலர் குலாம் வாஹன்வடி, பல மாவட்ட ஆளுநர்கள், மாவட்ட முன்னாள் ஆளுநர்கள் மற்றும் மேத்தாவின் இல்லச் சங்கமான கல்கத்தா மகாநகர் ரோட்டரி சங்கத்தின் உறுப்பினர்கள் இந்த விழாவில் பங்கேற்றார்கள்.

பழைய நினைவுகள், இசை, நடனம் நிறைந்த இந்த நிகழ்ச்சியில் தன்னைப் பாராட்டியவர் களுக்கும் புகழ்ந்தவர்களுக்கும் பதில் அளிக்க எழுந்த மேத்தா ஒரு நிமிடம் சொற்கள் இன்றி நின்றார். ஆனால், விரைவில் அவர் தன்னுடைய வழக்கமான பாணிக்குத் திரும்பினார், ரோட்டரிக்கான தன்னுடைய கனவுகளை (ஒவ்வொருவரும் ஒவ்வொருவரை அழைத்து வாருங்கள்'' வழியாக மேலும் கூடுதல் உறுப்பினர் எண்ணிக்கை, இன்னும் பெரிய, இன்னும் துணிச்சலான திட்டங்கள், ரோட்டரியின் பொதுத் தோற்றத்தை உச்சத்துக்குக் கொண்டுசெல்வதற்காகப் பேரார்வத்துடனும் விடாமுயற்சியுடனும் உழைத்தல், அதன் மூலம், நலிந்தோருக்கு உதவ விரும்புவோர் விரும்பித் தேர்ந்தெடுக்கும் NGOஆக ரோட்டரியை ஆக்குதல்) மீண்டும் வலியுறுத்தினார்.

இன்னும் ஓரிரு வாரத்தில் தான் எவான்ஸ் டனுக்குக் கிளம்பினாலும், வழக்கம்போல் அவர்களில் பலரைப் பின்னிரவு நேரத்தில் எழுப்பித் தன்னுடைய மனத்தில் இருக்கும் ரோட்டரி யோசனைகள், திட்டங்களை விவாதிக்கப் போவதாக மேத்தா கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்ட எல்லாருடைய ஆதரவுக்காகவும் அவர் நன்றி தெரிவித்தார், அவர்களுடைய ஆதரவு இல்லா விட்டால் தான் RIன் மிக உயர்ந்த பொறுப்பைப் பெற்றிருக்க இயலாது என்றார்.



1

1. *RI தலைவர் சேகர் மேத்தா RC கல்கத்தா மகாநகரின் பெண்களுக்கான மாத சுழற்சி சுகாதாரத் திட்டத்தை துவக்கி வைக்கிறார். ராஷி, அமிதா மற்றும் RID மகேஷ் கோட்பாகி ஆகியோரும் உடன் உள்ளனர்.*
2. *ராஷி மேத்தா PRID கமல் சங்வியிற்கு கேக் அளிக்கிறார். RI தலைவர் மேத்தா, RID கோட்பாகி, அமிதா மற்றும் TRF அறங்காவலர் குலாம் வஹன்வதி ஆகியோரும் உடன் உள்ளனர்.*
3. *ராஷி மற்றும் RI தலைவர் மேத்தா.*
4. PDG *ஜான் டேனியலுடன் ஷோபா கிஷோர், அமிதா, ராஷி மற்றும் சோனல்.*
5. *விழாவை துவக்க பாரம்பரிய நடனம்.*



2





3



4



5

6. RID கோட்பாகி மற்றும் அமிதாவுடன் PDG கிஷோர் குமார் மற்றும் ஷோபா.
7. RID கோட்பாகி மற்றும் அமிதாவுடன் PRID கமல் சங்கி மற்றும் சோனல்.
8. PRID சங்கி, RID கோட்பாகி, RI தலைவர் மேத்தா, ராஷி, அமிதா, சோனல் மற்றும் ஷோபா.
9. மாவட்ட தலைவர்களுடன் RI தலைவர் மேத்தா, மற்றும் அவர் மனைவி ராஷி.




















படங்கள்: சிறப்பு ஏற்பாடு

வடிவமைப்பு: S. கிருஷ்ணப்ரதீஷ்

# RID 3291ல் ரோட்டரி – ரோட்ராக்ட் ஒருங்கிணைப்பு

ஜெய்ஸ்ரீ

RID 3291ல் உள்ள ரோட்டரி சங்கங்கள் சேவைத் திட்டங்களைச் செயல்படுத்த மற்றும் பல்வேறு திட்டங்களை வடிவமைக்க ரோட்ராக்ட் சங்கங்களுடன் இணைந்து செயல்பட்டு ஒரு முன்மாதிரியை உருவாக்குகின்றன. இந்த ஆண்டின் தொடக்கத்தில் இருந்து ரோட்ராக்டர்களுக்கு இது ஒரு உற்சாகமான பயணமாக இருந்தது என்கிறார் DRR அர்கா குமார் நாக். ரோட்டேரியன்களுடன் பணிபுரிய மாவட்ட ரோட்ராக்ட் குழுவை வழிநடத்திச் செல்பவர் இவர்தான். மாவட்ட ஆளுநர் பிரபிர் சாட்டர்ஜி பதவியேற்பின்போது இவர் கௌரவ விருந்தினராக அழைக்கப்பட்டார். 15 ரோட்டரி சங்கங்களின் தலைவர்கள் பதவியேற்பு விழாவிலும் இவர் சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டார். அதேபோல DRR ஆக தாம் பதவியேற்ற போது ரோட்டேரியன்கள் பலரும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர் என்று அவர் கூறினார்.

ரோட்ராக்டின் உயர்ந்தநிலை என்பது 2019 COL கூட்டத்தில் எடுக்கப்பட்ட முக்கிய முடிவாகும். இதன் மூலம் ரோட்டரியில் இளம் தொழில் வல்லுநர்களை நிறைந்திருந்தனர். ரோட்டரியில் ரோட்ராக்டர்களை இணைக்கும் திட்டத்துக்கு முறைப்படி ஒப்புதல் அளித்த PRIP பாரி ராஸ்ஸினுக்கு நன்றி. ரோட்டேரியன்கள் ரோட்ராக்டர்களை சமமாக கருத வேண்டும், அவர்களையும் சமூக சேவைகளில் ஈடுபடுத்த வேண்டும் என்று அவர் விரும்பினார். COL கூட்டத்துக்குப் பிறகு பல நல்ல கொள்கை மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. இதில் ரோட்ராக்டர்கள் மாவட்ட மற்றும் RI குழு கூட்டங்களில் ரோட்டேரியன்களுடன் இணைந்து பணியாற்ற வழிவகுத்ததும் ஒன்றாகும்.

RID 3291ல் உள்ள 18 ரோட்டரி குழுக்களில் ரோட்ராக்டர்கள் இணை தலைவராக இடம் பெற்றுள்ளனர். இது ரோட்ராக்டர்களின் மன உறுதியை மேம்படுத்தியுள்ளது. ரோட்டரியின் ஒட்டுமொத்த இலக்குகளுக்கு திறம்பட பங்களிக்க இது வாய்ப்பளிக்கிறது. உதாரணமாக ரோட்டரி இன்டராக்ட குழுவில் இணை தலைவராக இடம்பெறும் ரோட்ராக்டருக்கு அதிக இன்டராக்டர்கள் மற்றும் இன்டராக்ட் சங்கங்களை சேர்க்கும் பொறுப்பு உள்ளது. ரோட்ராக்டர்கள் எளிதில் பள்ளி மாணவர்களுடன் தொடர்பு கொள்ள முடியும் என்பதால் இது எளிதாகிறது என்கிறார் நாக். மறுபுறம் PDGக்கள் மாவட்ட ரோட்ராக்ட் கவுன்சிலின் தலைமை ஆலோச கர்களாகவும் வழிகாட்டிகளாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

RID 3291ல் மூன்று குறிப்பிட்ட சேவைத் திட்டங்களில் ரோட்டரி மற்றும் ரோட்ராக்ட் சங்கங்கள் இணைந்து செயல்படுகின்றன. ஒரு மெகா இரத்த தான முகாம், வீரங்கணா என அழைக்கப்படும் மகளிர்க்கு அதிகாரம் அளிக்கும் திட்டம். இதில் திறன் வளர்ப்பு பயிற்சி, தற்காப்புக் கலைக்கான பயிற்சி பட்டறை மற்றும் சட்ட ஆலோசனை முகாம், ஆண்டு இறுதிக்குள் மாவட்டம் முழுவதும் 10,000 மரக்கன்றுகள் நடும் ஹரியாலி திட்டம். மாவட்ட ஆளுநர் மற்றும் உதவி ஆளுநர்களுடன் திட்டச் செயல்பாட்டு இடங்களுக்குச் செல்வது பயனுள்ளதாக இருந்தது. அப்போது திட்டங்களை வடிவமைப்பது, செயல்படுத்துவது, பயனாளிகளைத் தேர்ந்தெடுப்பது, போட்டி விலைக்கு பொருள்களை வாங்குதல் உள்ளிட்ட பல விஷயங்களை நாங்கள் கற்றுக்கொண்டோம்.

ரோட்டரி-ரோட்ராக்ட் குழு பாகூர் கிராமத்தில் பழங்குடியினருக்காக ஒரு உயர்நிலைப் பள்ளியை அமைத்து வருகிறது. அந்தப் பள்ளி கிறிஸ்துவ



RI *தலைவர் சேகர் மேத்தா மற்றும்* DG *பிரபிர் சாட்டர்ஜியுடன்* DRR *அர்கா குமார் நாக்.*




*மாவட்டத்தின் வீராங்கனா திட்ட பயனாளிகளுடன் DG சாட்டர்ஜி மற்றும் DRR நாக்.*

மிஷினரியால் நடத்தப்படும். அதில் நான்கு ரோட்டரி தலைவர்களின் நிதிஷ் லஹரி, ராஜேந்திர சாபூ, கல்யாண் பானர்ஜி, சேகர் மேத்தா ஆகியோரின் பெயரில் குழுக்கள் ஏற்படுத்தப்படும். பள்ளியின் கலை அரங்கத்துக்கு பால் ஹாரிஸ் பெயரிடப்படும், இந்த பள்ளிக்கான அடிக்கல் நாட்டு விழா கடந்த ஆகஸ்ட் மாதம் பிற்பகுதியில் நடந்தது.

இரட்டை உறுப்பினரான நாக், 2017ம் ஆண்டு RAC டோலி கஞ்சில் சேர்ந்தார். இந்த ஆண்டு RC டோலி கஞ்சில் ரோட்டேரியனாக இணைந்தார். சங்கத்தின் முரண்பாடு களைத் தீர்க்கும் குழுவின் தலைவராகவும் அவர் உள்ளார். தொழில் முறையில் அவர் ஒரு வழக்குரைஞர்.

ரோட்ராக்டர் என்கிற முறையில் துர்கா பூஜையின்போது கொல்கத்தா முழுவதும் பந்தல்களுக்கு பெரிய அளவில் துர்க்கை சிலைகளை தயாரிக்கும் கலைஞர்களை கௌரவிக்க தனது சங்கத்தை அவர் வழிநடத்தினார். டோலிகஞ்ச் ரோட்டரி சங்கம் மற்று மாநில அரசின் தொழிலாளர் நலத்துறை வழிகாட்டுதல் பேரில் இதை நாங்கள் செயல்படுத்தினோம். அவரது தலைமையின்கீழ் மேற்கொள்ளப்பட்ட இதர ரோட்ராக்ட் திட்டங்களில் 500 குழாய்களை நிறுவுதல் மற்றும் மூடியில்லாமல் தண்ணீர் வழிந்தோடும் குழாய்களை சீரமைத்தல் மற்றும் பார்வையற்றோருக்கு பிரெய்லி முறையிலான புத்தகங்கள் மற்றும் வெள்ளை கைத்தடிகளை வழங்குதல், சட்டம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல் உள்ளிட்ட நடவடிக்கை களும் மேற்கொள்ளப்பட்டன.

DRR என்ற முறையில் அவரது நிகழ்ச்சி பட்டியலில் ஆண்டு முழுவதும் இலவச கண் சிகிச்சை முகாம் நடத்துவதும் கண் கண்ணாடிகள் வழங்குவதும் இடம்பெறும். தொடக்கத்தில் நாங்கள் கொல்கத்தா மற்றும் சுந்தர்பனில் உள்ள காவல்துறையினர் மற்றும் மாநகராட்சி ஊழியர்களுக்காக இலவச கண் சிகிச்சை முகாம்களை நடத்தினோம். மேலும் எங்கள் ரோட்ராக்ட் சங்கங்கள் மூலம் 20,000 கண் கண்ணாடிகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளோம். இத்திட்டத்தின் வெற்றியின் அடிப்படையில் தலைவர் சேகர் மேத்தா அதை நாடு முழுவதும் விரிவாக்க உதவுவதாக உறுதியளித்துள்ளார் என்றார் அவர்.

மேத்தாவின் ஆலோசனையால் ஊக்கமடைந்த நாக், அதிக ரோட்ராக்டர்களை ரோட்டரிக்கு இரட்டை உறுப்பினர்களாக மாற்ற முயற்சித்து வருகிறார். மாவட்டத்தில் கடந்த ஆண்டு 47 இரட்டை உறுப்பினர்கள் இருந்தனர். இந்த ஆண்டு அதை கணிசமாக அதிகரிக்கமுடியும் என்று அவர் நம்புகிறார். 2029ம் ஆண்டுக்குள் ரோட்ராக்ட் உறுப்பினர்கள் எண்ணிக்கையை 10 லட்சமாக உயர்த்த இலக்கு நிர்ணயித்திருக்கிறோம். ரோட்ராக்டர்கள் விஷயத்திலும் நாங்கள் ஒவ்வொருவரும் ஒருவரைக் கொண்டு வாருங்கள் (EOBO) திட்டத்துக்காக வேலை செய்கிறோம் என்று ரோட்டரி தலைவரிடம் தெரிவித்தோம். அதை அவர் EOBOR என்று மாற்றியமைத்தார். அதாவது ஒவ்வொரு ரோட்ராக்டரும் ரோட்டரிக்கு இரட்டை உறுப்பினரைக் கொண்டுவரவேண்டும். இதன் மூலம் ரோட்ராக்ட் மற்றும் ரோட்டரி உறுப்பினர்கள் எண்ணிக்கை அதிகரிக்கும் என்றார் நாக்.

ரோட்ராக்டை விளம்பரப் படுத்துவதிலும், ரோட்டரி மற்றும் ரோட்ராக்ட் பற்றி பொது மக்களிடம் நல்லெண்ணத்தை ஏற்படுத்துவதிலும் நாக் திட்டமிட்டு செயல்பட்டு வருகிறார். ரோட்ராக்ட் இணைத் தலைவர் ரவி வாட்லாமணி பரிந்துரையின்படி ரோட்டரி-ரோட்ராக்ட் சங்கங்கள் பள்ளி மாணவர்களுக்கு மேஜைகள் மற்றும் உட்காரும் பெஞ்சுகள் வழங்க திட்டமிட்டுள்ளோம். இவை அனைத்திலும் ரோட்டரியின் சின்னம் பொறிக்கப்படும். 10,000 மரக்கன்றுகள் நடும் திட்டத்திலும் வேலிகள் அமைக்கப்பட்டு அவற்றில் ரோட்டரியின் சின்னம் அச்சிடப்படும் என்றார் நாக். ■

Rotary PEOPLE OF ACTION

# நாசிக் கிராம பெண்களுக்கு புகையில்லா அடுப்புகள்

கிரண் ஜெஹரா



அதிக புகை தரும் அடுப்பினால் மூச்சு திணறல் ஏற்பட்டு மூச்சுக்குழாய் அழற்சியால் அவதியுறும் பெண்.

மகாராஷ்டிர மாநிலம் நாசிக் அருகில் உள்ள ஜாரி, அம்பாஸ், பெஹெட்படா, நவின்படா மற்றும் பல்ஷிகுர்ட் கிராமங்களில் புகை இல்லாத அடுப்புகள் நச்சான உள் காற்று மாசை மிகவும் குறைத்துள்ளன, விறகுத் தேவையை நீக்கியுள்ளன, அதன்மூலம் கிராமப் புறப் பெண்களுடைய வாழ்க்கைகளை மேம்படுத்தியுள்ளன. இந்த மாற்றத்துக்குக் காரணம், இந்தக் கிராமங்களில் 250 புகை இல்லாத அடுப்புகளை வழங்கிய RC நாசிக், RID 3030.

நாசிக்கிலிருந்து 150கிமீ தொலைவில் உள்ள இந்தக் கிராமங்கள் மேற்குத் தொடர்ச்சி மலையின் ஒரு பகுதியாகிய பெத் காடுகளுக்கு நடுவில் அமைந்துள்ளன, இவற்றைச் சென்றடைய முறையான சாலைகள் கூட இல்லை. சமையலுக்காக இவர்கள் பயன்படுத்தும் விறகின் அளவு ஆண்டுக்கு ஆண்டு மிகுதியாகியுள்ளது. அத்துடன், சரியான சாலைகள் இல்லாததால், அரசுத் திட்டங்கள் ஏழை வீடுகளைச் சென்றடைவதும் எதார்த்தத்தில் சவாலாக அமைந்தது. இவர்களுக்கு LPG சிலிண்டர்களைக் கொண்டு செல்வதும் சிரமம், என்கிறார் CSR திட்டங்களின் பொறுப்பாளர் (2020–21) சங்கத்தின் முன்னாள் செயலாளரும் ஆகிய பிரஃபுல் பார்தியா.

ஓராண்டுக்குமுன், இந்தச் சங்கம் ஐந்து குக்கிராமங்களில் வாழ்க்கை நீடித்தல் கணக்கெடுப்பை நடத்திய போது, கிராமத்து மக்களுடைய நலனுக்கும் காடுகள் விரைவாக அழிக்கப்படுதலுக்கும் ஒரு நேரடி இணைப்பைக் கண்டறிந்தார்கள். பெண்கள் பார்வை மங்குவதாக, இருமல், நெஞ்சு அடைப்பு இருப்பதாகப் புகார் சொன்னார்கள் என்கிறார் கிராமத் தத்தெடுப்புக்காகச் சங்கம் அமைத்துள்ள குழுவின் முன்னாள் இயக்குநர் விவேக் பென்ட்சே. இந்த ஆய்வில், பெரிய எண்ணிக்கையிலான மரங்கள் வெட்டப்பட்டுச் சமையலுக்கான விறகாகப் பயன்படுத்தப்பட்டன என்று தெரியவந்தது. ஒவ்வொரு கிராமத்திலும் 50 வீடுகள் உள்ளன, சராசரியாக, அந்த வீடுகள் ஒவ்வொன்றுக்கும் ஆண்டுக்கு மூன்று மரங்களில் இருந்து விறகுகள் தேவை. இதன் பொருள், அந்தக் கிராமங்களில் ஆண்டுதோறும் 150 மரங்கள் வெட்டப்பட்டன என்று தொடர்ந்து கூறுகிறார் அவர்.



*கிராம மக்களுக்கு புதிய அடுப்புகள் அளித்த RC நாசிக் உறுப்பினர்கள்.*

இந்த ஆய்வைத் தொடர்ந்து, கிராமவாசிகளுடன், குறிப்பாகப் பெண்களுடன் தொடர் சந்திப்புகள் நடத்தப்பட்டன, பழங்கால அடுப்புகளின் நல ஆபத்துகளைப் பற்றி அவர்களுக்குச் சொல்லித்தரப் பட்டது. வெள்ளோட்டத் திட்டமாக, ஒவ்வொரு கிராமத்திலும் இரண்டு குடும்பங்களுக்கு இரண்டு புகை இல்லாத அடுப்புகள் சங்க நிதியைப் பயன்படுத்தி வழங்கப்பட்டன. இந்தப் புதிய, சுற்றுச்சூழலுக்கு இதமான அடுப்புகளுக்கு மாறியதன்மூலம், இந்த வீடுகளில் அன்றாட விறகுப் பயன்பாடு 5–7 கிலோவிலிருந்து 1.5கிலோவாகக் குறைந்தது. புதிய அடுப்புகளைப் பயன்படுத்திய பெண்களுக்கு மிக மகிழ்ச்சி, அனைத்து வீடுகளுக்கும் (சுமார் 250) புதிய அடுப்புகள் வழங்கப்படவேண்டும் என்று கிராமத் தலைவர்கள் கோரினார்கள்.''

சங்கத்தின் CSR குழு ஆட்டோ காம்ப் இந்தியா நிறுவனத்தை இதில் இணைத்தது, அவர்கள் உள்ளூர் வணிகர் ஒருவரிடம் புதிய, புகை இல்லாத அடுப்புகளை வாங்க ரூ.3 லட்சம் பங்களித்தார்கள். ஜூன் 2021ல் முடக்கம் நீக்கப் பட்டபோது, IPP முக்தா லெலெ, பார்தியா, இன்னும் சில சங்க உறுப் பினர்கள், நிறுவன அலுவலர்கள் புதிய அடுப்புகளைப் பயன் பெறுவோருக்கு வழங்கினார்கள். இந்தத் திட்டம் எங்கள் பெண்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தியுள்ளது, இப்போது அவர்கள் புகை அல்லது பிற தீங்கு விளைவிக்கும் பிரச்சனைகளை எதிர்கொள்வதில்லை என்கிறார் அம்பாஸ் கிராமத்தைச் சேர்ந்த இல்லத்தரசி நந்தா. ஒவ்வொரு குக்கிராமத்திலும், சுற்றுச்சூழலுக்கு இதமான இந்தத் திட்டத்தின்மூலம் கிட்டத்தட்ட 1,000 கிராமத்து மக்கள் பலன் பெறுவார்கள். அத்துடன், ஆயிரக்கணக்கான மரங்கள் வெட்டப்படுவது தடுக்கப்படும் என்கிறார் பென்ட்சே.

### கோவிட் தடுப்பு மருந்து வழங்கல் முகாம்

RC நாசிக்-கின் ரோட்டரி தொண்டு அறக்கட்டளை, HCG மனவடா மருத்துவமனை, இன்டியன் வால்வ் ஆகியோர் இணைந்து நடத்திய தடுப்பு மருந்து வழங்கல் முகாமில் சுமார் 630 மக்களுக்குத் தடுப்பு மருந்து வழங்கப்பட்டது. 40 ரோட்டரியன்கள், நாசிக்-கில் உள்ள JDC பைட்கோ கல்லூரியின் RACஐச் சேர்ந்த 10 ரோட்டராக்டர்கள் இந்தத் திட்டத்தை நடத்தினார்கள்.■

# பால்கர் கிராமவாசிகளுக்குக் வீடுகளைக் கட்டும் RID 3141

ரோட்டரி செய்திக்குழு

மகாராஷ்டிர மாநிலத்தின் பால்கர் மாவட்டத்தில் பல குக்கிராமங்களில் மண்ணாலான கூரைக் குடிசைகளில் வசிக்கும் ஆதிவாசிக் குடும்பங்களுக்குக் குறைந்த செலவில் வீடு கட்டித்தரும் RID 3141ன் ஆஷியானா திட்டம் இதுவரை 110 காங்க்ரீட் வீடுகளை நிறைவுசெய்துள்ளது, மேலும் 215 வீடுகள் கட்டப்பட்டுவருகின்றன

மாவட்டத் திட்ட இயக்குநர் ராஜ் கோஸ்லா தலைமையிலான திட்டக் குழு 425 வீடுகளை வழங்கச் சம்மதம் பெற்றுள்ளது. மீதமுள்ள 100 வீடுகளுக்கான பணி விரைவில் தொடங்கும். உள்ளூர் அலுவல் அமைப்புகளைத் தொடர்புகொண்டு அனுமதி பெறுதல், கட்டடக் கலைஞர்களைத் திரட்டுதல், கட்டுகின்ற ஒப்பந்ததாரர்களைத் தேர்ந்தெடுத்தல் ஆகியவற்றின் மூலம் கோஸ்லா இந்தத் திட்டத்தைத் தொடங்கினார். கிராமப்புற ஏழைகளுக்குக் குறைந்த செலவில் வீடுகளை வழங்கும் பிரதமருடைய பிரதான் மந்த்ரி ஆவாஸ் யோஜனா வீட்டு வசதி திட்டத்தைப் பயன்படுத்திக் கொள்ளும்படி அவர்களைச் சம்மதிக்க வைத்தார்.

இந்திய அரசின் இந்த வீட்டு வசதித் திட்ட வரம்பின்கீழ் ஆஷியானா திட்டம் செயல்படுத்தப்பட்டது. ஒரு வீட்டுக்கான செலவாகிய ரூ.2 லட்சத்தில் ரூ.1.2 லட்சத்தை அரசு மானியமாக வழங்கியது.

இதையடுத்து, மாவட்டச் செயலாளர் அனில் ஜெயின், “கேம் ஆஃப் ஹவுசி” என்ற ஒரு மிகச் சிறந்த நிதி திரட்டும் யோசனையை முன்வைத்தார். பகடைகளை உருட்டி விளையாடப்படும் இந்த விளையாட்டு மாவட்டம்முழுவதும் நடைபெற்றது, இந்தத் திட்டத்துக்கு நிதி திரட்டியது. இந்த விளையாட்டில் பங்கேற்கும் சங்கங்களுக்கு ஒரு நிபந்தனை: அவர்கள் ஒரு வீட்டுக்கான செலவை ஏற்கவேண்டும். முதல் மாதத்திலேயே மாவட்டச் சங்கங்கள் 50 வீடுகளுக்கு உறுதியளித்தன என்றார் மெஹ்ரா.

*ஆஷியானா திட்டத்தின் பயனாளி குடும்பம் தங்கள் பழைய வீடு முன்.*



### இதயத்தில் நம்பிக்கை

ஆனால், இதன்மூலம் திரட்டப்பட்ட பணம் இந்தத் திட்டத்துக்குப் போதவில்லை. சங்க உறுப்பினர் மினி கோஸ்லா, ஆஷாயேன் தில் மெய்ன் ஹோகி (இதயத்தில் நம்பிக்கை) என்ற தலைப்பில் இசை நிதி திரட்டலை உருவாக்கினார், இது, பெரு நிறுவனங்களிடமிருந்து குறிப்பிடக்கூடிய CSR நிதிகளைத் திரட்டியது.

திட்டக் குழுவினர் ஜில்லா பரிஷத் அலுவலர்களுடன் பணியாற்றி, நிதியளித்தலின் அரசுப் பகுதியை வெளியிடச் செய்தார்கள், வீட்டு உரிமையாளர்களை அவர்களுடைய இப்போதைய வசிப்பிடங்களை இடிக்கச் சம்மதிக்கவைத்தார்கள், வீட்டுவசதித் திட்டத்துக்குச் சரியான ஒப்பந்ததாரர்களைப் பெற்றார்கள். RCகள் பால்கர், தஹானு மற்றும் வடா ஆகியோர் கிராமப் பஞ்சாயத்து சர்பாஞ்ச் உள்ளிட்ட உள்ளூர் அலுவலர்களுடன் கூட்டங்களை நடத்துவதற்கு இந்தக் குழுவுக்கு உதவினார்கள்.

முதல் 50 வீடுகளை நிறைவு செய்வதுதான் மிகக் கடினமாக இருந்தது. ஆனால், அந்தத்

தொடக்கத் தடுமாற்றத்துக்குப்பிறகு, ஆஷியானா குழு ஒரு மிகச் சிறந்த அமைப்பை உருவாக்கியது, அங்கிருந்து கட்டுமானப் பணிகள் இதமாக நடைபெற்றன'' என்றார் மெஹ்ரா.



*ஒரு மூதாட்டி தன் புதிய வீட்டின் வாசலில்.*

### மகிழ்ச்சியான கணம்

முதல் வீட்டை DG மெஹ்ரா 80 வயது மூதாட்டி ஒருவருக்கு வழங்கினார். நிறைவு செய்யப்பட்ட வீடுகளை வழங்கச் சென்ற சங்கத் தலைவர்கள் பலன் பெறுவோருக்குப் பல சேவைத் திட்டங்களை அறிவித் தார்கள்: உணவு தானியங்கள் மற்றும் திரும்பப் பயன்படுத்தக்கூடிய சானிட்டரி பேட்களை வழங்கும் ஒரு 3H (நலன், பசி மற்றும் தூய்மை) திட்டம்; ஊட்டச்சத்துக் குறை பாட்டைக் கையாள்வதற்காகச் சுமார் 1,600 குழந்தைகளுக்கு ஊட்டச் சத்து மிக்க உணவு வழங்குதல்; அனைத்து வீடுகளுக்கும் குழாய் நீர் வழங்குவதற்காக ஆழ்துளைக் கிணறுகளைத் தோண்டிக் குழாய் களை அமைத்தல்; ஆதிவாசி குடும் பங்களுக்காகச் சமூக, மருத்துவ மையங்களைக் கட்டுதல். RC பாம்பே ஹேங்கிங் கார்டன்ஸைச் சேர்ந்த Rtn திலீப் ஷா, ரோட்டரி ஆஷியானா வீடுகளில் நிறுவுவதற்கான ட்யூப் லைட்டுகள், மின்விசிறிகளை வழங்கினார்.■

## ஒடிஷா மாநிலத்தில் கோவிட் நோயாளிகளைக் காக்கும் ரோட்டரி ஆக்ஸிபேங்க்ஸ்




கோவிட் இரண்டாம் அலையின்போது, பெரும்பாலான பிற நகரங்களைப்போல் புபனேஷ்வரும் ஆக்ஸிஜன் பற்றாக்குறையால் தடுமாறியது. தேவை மிகுதியானதால், ஆக்சிஜன் உருளைகள் விலை மிகவும் உயர்ந்தது, உயிர்காக்கும் இந்த வாயு கள்ளச்சந்தையில் நிறைய விற்கப்பட்டது.

இந்தச் சூழலில், அப்போதைய DG சௌம்யா ராஜன் மிஷ்ரா தலைமையில் இயங்கிய RID 3262, மாவட்டம் முழுவதும் ரோட்டரி சங்கங்கள் வழியாக ஆக்ஸிபேங்க்ஸை அமைக்க எண்ணியது. திட்ட ஒருங்கிணைப் பாளர்கள் பிரதீப் பாண்டா மற்றும் S S கட்கரே ஆகியோர் மும்பையிலிருந்து 500 ஆக்ஸிஜன் உருளைகளைப் பெற்று, இந்த மாவட்டத்திலுள்ள பல ரோட்டரி சங்கங்களுக்கு வழங்கும் வியூகத்தை வகுத்தார்கள். அதன்பிறகு, இச்சங்கங்கள் வீட்டில் தனியாக இருக்கிற, கிராமப்புறப் பகுதிகளில் இருக்கிற கோவிட் நோயாளிகளின் ஆக்சிஜன் தேவைகளை நிறைவேற்றுவார்கள்.

சந்தையில் ரூ.16,000 விலையில் கிடைக்கும் உருளைகளை, மாவட்ட அலுவலகத்தின் பேரம் பேசுதலுக்குப் பின் சங்கங்கள் ரூ.8,400க்குப் பெற்றன. ஆக்சிஜன் ஆலைகளை வைத்திருந்த இரண்டு ரோட்டரியன்கள் (RC கட்டாக் மிட்-டவுன் உறுப்பினர் சுப்ரான்ஷு சமன்டராய் மற்றும் தேபப்ரதா ஸ்வாயின்) இந்த உருளைகளை இலவசமாக நிரப்புவதற்கு உதவினார்கள்.

இந்த முன்னெடுப்பை RI தலைவர் சேகர் மேத்தா, ரோட்டரி இந்தியா கோவிட் செயல் படைத் தலைவர் அசோக் மகாஜன் பாராட்டினார்கள்.■

# அஸ்ஸாம் கிராமங்களில் காட்டு யானைகள் புகுந்துவிடாமல் தடுக்கும் சூரியசக்தி ஒளிவிளக்குகள்

கிரண் ஜெஹரா



அஸ்ஸாமின் தீன்சுகியா மாவட்டத்தில் திக்பாய்க்கு கிழக்கே உள்ள 10 கிராமங்களை உள்ளடக்கிய கெர்ஜான் மற்றும் தேகியாஜன் பகுதிகளில் மண் குடிசைகளில் வாழும் மக்கள் காட்டு யானைகளுக்கு பயந்து வாழ்கிறார்கள். இரவில் கான்கிரீட் வீடுகளில் தஞ்சமடைகிறார்கள். விலங்குகள் நெல் வயல்களில் புகுந்து பயிர்களை நாசம் செய்வதால் அங்கு செல் வதையே நாங்கள் நிறுத்திவிட்டோம் என்கிறார் ரிகிராஜ் கோகோய் என்ற கிராமத்து இளைஞர். அவரது கிராமம் வனப்பகுதியை ஒட்டி உள்ளது. மேலும் ஒருகாலத்தில் யானை வழித்தடமாகவும் இருந்தது.

காடுகள் அழிப்பு மற்றும் யானை வழித்தடங்கள் தொடர்ந்து ஆக்கிரமிக்கப்படுவதன் மூலம் திக்பாய்க்கு அருகில் உள்ள கிராமங்களில் மனிதன்-விலங்குகளுக்கு இடையே மோதல் அதிகரித்து விட்டது என்கிறார் RID 3240க்கு உட்பட்ட திக்பாய் ரோட்டரி சங்கத்தின் தலைவர் சத்யாகம் டௌவேரா. கடந்த இரண்டு ஆண்டுகளில் யானைகள் நடத்திய தாக்குதலில் ஐந்து பேர் உயிரிழந்ததை அடுத்து பத்து கிராமங்களுக்கு உதவ சங்கம் முடிவெடுத்தது. விலங்குகளை விரட்டியடிப்பதற்காக அவர்கள் பட்டாசு வெடிப்பார்கள் மற்றும் முரசு கொட்டுவார்கள். மேலும் இரவு நேரத்தில் தங்கள் நிலைத்தை விழிப்புடன் கண்காணிப்பார்கள். ஆனால், கிராமங்களை யானைகள் சூறையாடுவதைத் தடுக்க முடியவில்லை. இதனால் நெல் பயிரிடுவதை நாங்கள் நிறுத்தி விட்டோம், பழங்கள், காய்கறிகள் விலங்குகளுக்கு தீவனமாகவிட்டன என்றார் கோகோய்.

கிராம மக்களை சந்திக்கும்போது யானைகள் தந்தத்துக்காக வேட்டை யாடப்படுவது, யானை வழித்தடங்கள் மனிதர்களால் ஆக்கிரமிக்கப்படுவது, கட்டுமானப் பணிகளால் யானைகள் வாழ்விடங்கள் குறைந்துவருகின்றன என்று அவர்களுக்கு நாங்கள் விளக்கினோம் என்றார் டௌவேரா. யானைகளால் ஏற்படும் சவால் களுக்குத் தீர்வுகாண இரண்டு முறை மெய்நிகர் கருத்தரங்குகள்

நடைபெற்றன. கிராமங்களில் உள்ள தெருக்களில் விளக்கொளி ஏற்படுத்தினால் விலங்குகள் உள்ளே நுழைவதை தடுக்க முடியும் என்று ஒரு யோசனை தெரிவிக்கப்பட்டது. இந்திய அரசின் புதுப்பிக்கவல்ல எரிசக்தி திட்டம் ஒன்றை தெரிவித்தபோது அது கிராம மக்களிடத்தில் நம்பிக்கையை ஏற்படுத்தியது என்றார் அவர்.

இதையடுத்து அஸ்ஸாம் எரிசக்தி வளர்ச்சி முகமையின் அதிகாரிகள் முயற்சியில் போஹர் (ஒளித் திட்டம்) என்னும் திட்டம் உருவானது. 12 வாட் போட்டோவோல்டிக் செல்கள் மூலம் இயங்கும் 100 LED விளக்குகள் நிறுவ சங்கம் முடிவு செய்தது. பத்து கிராமங்களிலும் முக்கியமான இடங்களில் லிதியம் பேட்டரிகள் நிறுவப்பட்டு அதிலிருந்து போட்டோ வோல்டிக் செல்கள் மூலம் மின்னேற்றத்துக்கு (சார்ஜ்) வழி செய்யப்பட்டது. அசாம் எரிசக்தி மேம்பாட்டு முகமையின் உதவியுடன் சலுகைவிலையில் ரூ.2.7 லட்சத்தில் சூரியசக்தி விளக்குகள் பெறப்பட்டன. இல்லையெனில் இதற்கு ரூ.27 லட்சம் செலவிடயிருக்கும். டௌவேரா RID 3240 அறக்கட்டளை மூலம் ரூ.2 லட்சம் பெற்றுத்தந்தார். இதற்காக IPDG சுபாஷிஷ் சாட்டர்ஜிக்கு நன்றி சொல்ல வேண்டும். மேலும் சங்கத்தின் உறுப்பினர்களிடம் ரூ.70,000 நன்கொடையாக திரட்டப்பட்டது. சூரியசக்தி விளக்குகளை நிறுவும் பணியை அசாம் எரிசக்தி வளர்ச்சி முகமை ஏற்றுக்கொண்டது. அத்துடன் அவற்றை 5 ஆண்டுகளுக்கு பராமரிக்கவும் ஒப்புக் கொண்டது. இத்திட்டத்தைச் செயல்படுத்தும் போது களப்பணியில் இளைஞர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். உயர்கோபுர விளக்கை நிறுவுவது மற்றும் விளக்குகளை சுத்தம் செய்து பராமரிப்பது குறித்து அவர்களுக்கு முறையாக பயிற்சி அளிக்கப்பட்டது. சூரியசக்தி விளக்குகள் முழுவதும் நிறுவப்பட்டவுடன் கிராம மக்களுடன் சந்திப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. விளக்குகளைப் பராமரிப்பதற்காக இரண்டு குழுக்களும் ஏற்படுத்தப் பட்டன.



நெல் வயல்களில் பயமின்றி வேலை பார்க்கும் பெண்கள்.



கிராமத்தில் சூரியசக்தி தெரு விளக்கு நிறுவப்படுகிறது.

**காட்டு யானைகள் வருவதில்லை**

கிராமங்களில் இரவு நேரத்தில் சூரியசக்தி மின் விளக்குகளால் ஒளிருவதால் யானைகள் கிராமங்களுக்கு நுழைந்து பயிர்களை நாசப்படுத்துவதும், வீடுகளைச் சூறையாடுவதும் நின்றுவிட்டது. அரசாங்கத்தால் பல ஆண்டுகளாகச் செய்ய முடியாததை ரோட்டரி எங்களுக்கு செய்து கொடுத்துள்ளது. கிராமத்தின் தலைவர் ஜாய்சந்த போரா. ஓரளவு வயதானவர்கள் மீண்டும் விவசாயத்துக்குத் திரும்பியுள்ளனர். காட்டு யானைகள் துரத்துமோ என்கிற பயம் இல்லாமல் இளைஞர்கள் திக்பாயில் உள்ள மாலைநேரக் கல்லூரிக்குச் சென்று படித்துவிட்டு இரவு தாமதமாக வீடு திரும்புகிறார்கள். இதேபோன்ற பிரச்னைகளை எதிர்கொள்ளும் இதர கிராமங்களிலும் இந்த சூரிய சக்தி மின்விளக்குத் திட்டத்தை செயல்படுத்த சங்கம் திட்டமிட்டுள்ளது.■

# Mahabs 2021

FEEL THE HERITAGE




Rotary

## ROTARY INSTITUTE 2021

**Zone 4,5,6 & 7 | 10-12 Dec 2021 | Mahabalipuram | Tamil Nadu**

Team Mahabs is all set and ready to organize the Institute in a magnificent manner. Each and every moment at the Institute is meticulously planned to keep you engaged and ignited. We have a distinguished group of keynote speakers from all over the world to deliver insightful sessions on various topics.



Shekar Mehta
RI President ( 2021 -22 )



RID.AS. Venkatesh
Convenor



PDG.Muruganandam.M (MMM)
Chairman

# ROTARY INSTITUTE IS ON

## REGISTER EARLY

*to avoid last minute rush !!*

### Great Speakers

Enthralling and inspiring sessions by eminent speakers

### Networking

Build long-term, mutually beneficial relationships across India.

### Heritage

Feel the Heritage in and around Mahabalipuram

### Have Fun

Relax and have fun - entertainment Unlimited.

**PDG.MURUGANANDAM. M ( MMM )**
Chairman | +91 - 93825 50001

**PDG.SURENDRA BOMMIREDDY**
Co-Chair | +91 - 98481 05690

**PDG.KANNAN.RVN**
Chair - Registration | +91 - 73737 66666

**PDG.MADHAV CHANDRAN.R**
Secretary | +91 - 98460 31667

**PDG.PINKY PATEL**
Chair - Promotion | +91 - 9376210325



# HOW TO REGISTER

1. Visit www.riinstitutemahabs21.org
2. Select your District Number and your name
3. Check programmes that you will be attending
4. Select choice of hotels / Check in - Check out dates
5. Select your preferred payment option and complete your registration.

Mahabs 2021
FEEL THE HERITAGE

www.riinstitutemahabs21.org

**Register Now**

## Programme Schedule

| Date | Program | Venue | Single (INR) | Couple (INR) |
|---|---|---|---|---|
| 7-9/12-2021 | DG Elect Training Seminar (Incl Accommodation @ Raddison Blu for 7th & 8th Night Only) | @ Raddison Blu | -- | 75,000 |
| 9/12/2021 | DG Nominee Training Seminar ( Includes Accommodation @ Raddison Blu / Chariot Beach Resort - for 9th Night Only) | @ Raddison Blu | -- | 25,000 |
| 9/12/2021 | DG Mid-Year Review Meet | @ Raddison Blu | 4,000 | 7,000 |
| 9/12/2021 | District Trainers Seminar | @ Raddison Blu | 4,000 | 7,000 |
| 9/12/2021 | Council on Legislation | @ Raddison Blu | 4,000 | 7,000 |
| 9/12/2021 | The Rotary Foundation Dinner | @ Raddison Blu | 4,000 | 6,000 |
| 10/12/2021 | The Rotary Foundation Seminar | @ Raddison Blu | 3,000 | 6,000 |
| 10-12/12/2021 | Rotary Institute 2021 - Mahabs 21 | @ Four Points Convention Centre | 19,000 | 30,000 |

## Accommodation Choice


| Hotel Name | Room Type | Tariff |
|---|---|---|
| Four Points | Deluxe / Garden View | 8,500 |
| GRT Radisson Blu | Deluxe Garden View | 10,400 |
| Chariot Beach Resort | Standard Room | 8,000 |
| | Deluxe Room | 8,500 |
| | Deluxe Sea View | 9,500 |
| | Deluxe Cottage | 10,500 |
| Ideal Beach Resort | Garden View Room | 6,800 |
| | Deluxe Rooms | 9,500 |
| | Sea view Villas | 14,800 |



Four Points Resorts, Mahabalipuram



GRT Radisson Blu, Mahabalipuram



Chariot Beach Resort, Mahabalipuram



Ideal Beach Resort, Mahabalipuram

**SUPPORT ( MMM'S OFFICE )**

**PRIMARY SUPPORT:**

Rtn.Sareesh Agarwal : +91 - 90255 05051

**SECONDARY SUPPORT:**

Rtn.Ruthi Rani : +91 - 93825 50006

Kaneeza : +91 - 98416 77403

# அன்னபூர்ணா மலையில் பறந்த ரோட்டரிக் கொடி

ஜெய்ஸ்ரீ

உலகின் 10வது மிக உயர்ந்த மலையாகிய Mt. அன்னபூர்ணா-வில் சமீபத்தில் ஏறிய பக்வான் சாவலெ (39) அவர்களைச் சந்தியுங்கள். இவர் RC புனே காந்தி பவன், RID 3131, உறுப்பினர் ஆவார்.

Mt அன்னபூர்ணா என்பது, நேபாள இமய மலைப் பகுதியில் உள்ள ஒரு மலை முகட்டுத் திரள் ஆகும். இதன் ஓர் உச்சி 8,091 மீ உயரம் கொண்டது, மற்ற தொடர்கள் 7,000 மீ உயரம் கொண்டவை. நாங்கள் 87 உறுப்பினர்களைக் கொண்ட குழுவாகச் சென்றோம். ஆனால், எங்களில் 67 பேர்தான் உச்சியை எட்டினோம், மற்றவர்கள் உடல் நலம் உபாதைகளால் பாதியில் நிற்க வேண்டியிருந்தது என்கிறார் சாவலெ. இந்த மலையேற்றத்தில் இரண்டு தனித்துவமான சாதனைகள் இருந்தன: சதாராவைச் சேர்ந்த பிரியங்கா மொஹிதெ என்ற மலையேற்ற வல்லுனர் இந்த மலையில் ஏறிய முதல் இந்தியப் பெண் ஆனார், மேலும், எட்டு இந்தியர்கள் உச்சியை எட்டியதால், முன்பு நான்கு பேர் உச்சியை எட்டிய சாதனையை நாங்கள் முறியடித்தோம்.

இதற்குமுன் 2018ல் சாவலெ எவரெஸ்ட் உச்சியை எட்டினார். ஆனால், அதற்கு முந்தைய ஆண்டு அவருடைய முயற்சி தோல்வியடைந்திருந்தது. 2017ல் நான் உச்சிக்கு 100 மீ பக்கம்வரை சென்றேன். கடுமையான வானிலை காரணமாக, அவர் கடைசிப் பகுதிப் பயணத்தைக் கைவிடவேண்டியிருந்தது, அத்துடன், அவருடைய அறைத் தோழர்கள் இருவர் இறந்துவிட்டதும் அவருக்குக் கூடுதல் துயரத்தை அளித்தது.

சமீபத்திய மலையேற்றத்துக்காக, அவரும் அவருடைய சக மலையேறுவோரும் மே மாத நிறைவில், நேபாளத்தில் உள்ள பொக்ரா-விலிருந்து கிளம்பினார்கள், ஒரு வாரத்துக்கு ஒவ்வொரு முகாமிலும் பழக்கப்படுத்திக் கொள்ளுதல் சுழற்சிகளை நிறைவு செய்தார்கள், ஏப்ரல் 16ல் உச்சியை எட்டினார்கள். இந்த முறை யாருக்கும் எந்த ஆபத்தும் ஏற்படாதது அதிர்ஷ்டம் தான். ஏனெனில், Mt அன்னபூர்ணா மிகவும் கடினமான மலை. அதன் உச்சியில் நின்றபோது நான் உணர்ந்த மகிழ்ச்சியைச் சொற்களால் விவரிக்க இயலாது. ஏமாற்றுகிற சரிவுகள், குளிர்க் காற்று, பனிச் சரிவு, பனிக் கடிகள் என அனைத்துச் சிரமங்களும் அந்தக் கணத்தில் காணாமல் போய்விட்டன. உலகின் உச்சியில் இருப்பதுபோன்ற உணர்வு ஏற்பட்டது. நம் ரோட்டரி மற்றும் இந்தியக் கொடியை அங்கு நட்டபோது எனக்கு மெய் சிலிர்த்தது என்று மிகுந்த பெருமையுடன் கூறுகிறார் சாவலெ.

அதே நேரம், இந்த மலைகளில் உள்ள குப்பைக் குவியல்கள் வருத்தம் அளிக்கின்றன. இந்த




*ரோட்டரி கொடியுடன் Mt அன்னபூர்ணா உச்சியில் பக்வான் சாவலே.*

மென்மையான சூழலைத் தூய்மையாக வைத்துக்கொள்வதில் மக்கள் சற்றுக் கூடுதல் கவனம் செலுத்தவேண்டும், குறைந்தபட்சம், அடித்தள முகாமுக்குக் கீழிறங்கும்போது தங்கள் குப்பைகளைக் கையோடு எடுத்துச் சென்றுவிடவேண்டும் என்கிறார் இவர். கைவிடப்பட்ட ஆக்சிஜன் புட்டிகள், கூடாரங்கள், கேன்கள், உறைகளைத் திரட்டி அடிவாரத்துக்குக் கொண்டுவருவதன்மூலம் இவர் தன் கடமையைச் செய்துள்ளார். நாம் $1,000ஐத் திரும்பப் பெறக்கூடிய குப்பைக் கட்டணமாக இட்டுவைக்கவேண்டும்; நம் குப்பையை நாம் கொண்டு வராவிட்டால், அந்தத் தொகை நமக்குத் திரும்பக் கிடைக்காது. ஆனால், மலையேறுவோர் அந்த இட்டுவைப்பைத் திரும்பப் பெறுவதற்காக ஒரு சிறிய அளவு குப்பையைமட்டும் திரும்பக் கொண்டுவருகிறார்கள் என்று தொடர்ந்து கூறுகிறார் இவர்.






தூய்மைப்படுத்தும் பரப்புரைகள் தொடர்ச்சியாக நடத்தப்படுகின்றன; சில நேரங்களில், குப்பையுடன் இறங்கி வருகிறவர்களுக்குப் பணமும் கிடைக்கிறது.

செலவைப்பற்றிப் பேசும் சாவலெ, இந்தப் பயணத்துக்குத் தான் சுமார் ரூ.14 லட்சம் செலவழித்ததாகக் கூறுகிறார். அவருடைய ரோட்டரி சங்கம் ரூ.50,000 அளித்து உதவியது. நண்பர்கள், குடும்பத் தினருடைய ஆதரவுடன், நான் கடனும் பெற்றேன், என் சேமிப் பையும் பயன்படுத்தினேன். நான் மலையேற்றத்துக்குத் திட்டமிடும் போதெல்லாம், செலவைக் குறைத்து இயன்றவரை சேமிப்பேன்'' என்று சிரிக்கிறார் இவர், தொடர்ந்து, எவரெஸ்ட் மலையேற்றத்துக்கு நேபாள மலையேற்றக் கழக அனுமதிக்கு $11,000 மற்றும் ஒட்டுமொத்தமாக ரூ.30 லட்சம் செலவானது என்கிறார். இவருடைய அன்றாட உடற்கட்டுப் பழக்கம்: மூன்று மணி நேர ஓட்டம், மிதிவண்டி ஓட்டுதல் மற்றும் வலிமை உடற்பயிற்சிகள்.

புனெ LICல் மேம்பாட்டு மேலாளராகப் பணியாற்றும் சவாலெ



*தேசிய கொடியுடன் Mt எவலெஸ்ட் உச்சியில்.*

கல்லூரி நாட்களில் NCC பயிற்சி வீரராக இருந்தவர், அப்போதுதான் மலையேற்றம், பிற துணிகரச் செயல் களுக்கான பேரார்வத்தை வளர்த்துக் கொண்டார். தேசிய அளவில் துப்பாக்கி சுடுதலில் தங்கப் பதக்கம், படகோட்டத்தில் வெண்கலப் பதக்கம் வென்றவர். இவர் டிரையத்லான் தடகள வீரர் ஆவார், வார நிறைவு நாட்களில் துணிகர முகாம்களை நடத்துகிறார். இவருடைய பிற மலையேற்றச் சாதனைகள்: இமய மலையில் உள்ள கஞ்சன்ஜங்கா, தௌலகிரி, ஸ்டோக் கங்க்ரி மற்றும் பாகீரதி-2 உச்சிகள், சஹ்யாத்ரி மலைத் தொடரில் உள்ள வனர்லிங்கி, வஜிர், லிங்கனா மற்றும் டைல்பைலா ஆகியவற்றில் ஏறியது.



என் மகள் ராஜ் நந்தினி என்னுடைய மிகப் பெரிய விசிறி; சிறு பயணங்களில் அவர் என்னுடன் வருவார். என் மனைவிக்குத் தொடக்கத்தில் இதைக்கண்டு தயக்கம் இருந்தது. ஆனால் இப்போது, என்னை மிகக் கூடுதலாக ஊக்குவிப்பவர் அவர்தான் என்று சிரிக்கிறார் சாவலெ. செப்டம்பர் 4ல் தொடங்கி நேபாள-இமய மலைப் பகுதியில் உள்ள Mt மனஸ்லு-வில் 40 நாட்கள் மலையேற்றத்துக்குத் தயாராகிவிட்டார் இவர்.■

# 4 வயது சிறுவனுக்கு சிக்கலான இதய அறுவைச்சிகிச்சை

ரஷீதா பகத்

மும்பையின் குடிசைப் பகுதியான காட்கோபரில் 4 வயது சிறுவன் ஹேமந்த் நாயக்குக்கு சிக்கலான இதய அறுவைச்சிகிச்சை தேவைப்பட்ட போது, RC மும்பை காட்கோபர், அவரை மும்பை ரோட்டரி சங்கத்தை தொடர்பு கொள்ள பரிந்துரைக்கப் பட்டது. ஏனெனில் மும்பை ரோட்டரி சங்கத்திடம் குழந்தைகள் அறுவைச் சிகிச்சைக்கான சர்வதேச மானிய நிதி இருந்தது. இதையடுத்து சிக்கலான அறுவைச்சிகிச்சைக்காக அந்த சிறுவன், கோகிலாபென் அம்பானி மருத்துவமனைக்கு பரிந்துரைக்கப் பட்டார். ஏற்கெனவே அந்த சிறுவனுக்கு நான்கு முறை பலூன் சிகிச்சையும், திறந்த முறை இதய அறுவைச்சிகிச்சை ஒரு முறையும் வாடியா மருத்துவமனையில் நடத்தப்பட்டிருந்தது என்கிறார் மும்பை ரோட்டரி சங்கத்தின் முன்னாள் தலைவரும், சர்வதேச நிதியுதவித் திட்டத்தின் இயக்குநருமான V K ஜாட்டியா.

அந்தச் சிறுவன் Hypoplastic left heart syndrome (HLHS) என்னும் சிக்கலான பிரச்னையுடன்தான் பிறந்தார். இதற்கு சிகிச்சை அளிக்கா விடில் சிறுவன் பிழைப்பதே கஷ்டம். இடது பக்க இதயத்தை மாற்றியமைக்க முடியாது. எனவே அறுவைச் சிகிச்சையின் மூலம் இதயத்தின் பாகங்களை பொருத்துவதும், இரத்தம் பாயும் வழியை மாற்றியமைப்பது தான் அறுவைச்சிகிச்சையின் முக்கிய நோக்கமாக இருந்தது என்றார் DGE சந்தீப் அகர்வலா.

ஃபான்டன் செயல்முறை என்னும் கடைசி அறுவைச்சிகிச்சை மட்டுமே செய்யவேண்டியிருந்தது. ஃபான்டன் நடைமுறை என்பது இரத்தத்தை உடலின் கீழ் பகுதியிலிருந்து நேரடியாக நுரையீரலுக்குச் செல்ல வைப்பதுத் தான் முக்கிய நோக்கம். இரத்தம் இதயம் வழியாகச் செல்லாமல் ஆக்சிஜன் பெற இது உதவுகிறது என்றார் ஜாட்டியா.

இதுபோன்ற பிரச்னைகள் உள்ள குழந்தைகளுக்கு உடலின் கீழ் பகுதியிலிருந்து வரும் ஆக்சிஜன் குறைந்த இரத்தம், ஆக்சிஜன் அதிகம் உள்ள இரத்தத்துடன் கலக்கிறது. ஃபான்டர் நடைமுறைப்படி அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டால் குறைந்த ஆக்சிஜன் உள்ள இரத்தமும், அதிக ஆக்சிஜன் உள்ள இரத்தமும் கலப்பதற்கு வாய்ப்பில்லை. இதன் மூலம் இதயத்திலிருந்து அதிக ஆக்சி ஜன் கலந்த இரத்தம் மட்டுமே உடல் முழுவதும் செல்லும் என்றார் அவர்.

ஹேமந்தை தங்களிடம் பரிந்துரைத்தற்காக காட்கோபர் ரோட்டரி சங்கத்துக்கும், இந்த விஷயத் தில் ஒருங்கிணைந்து செயல்பட்ட மும்பை லேக்கர்ஸ் ரோட்டரி சங்கத்தின் ஆன் நடாஷா சேஜ்பல்லுக்கும் ஜாட்டியா நன்றி தெரிவித்தார். அறுவைச்சிகிச்சைக்கான தொகை ரூ.2.75 லட்சம் RC மும்பை சர்வதேச மானிய உதவி திட்ட நிதியிலிருந்து வழங்கப்பட்டது. அறுவைச் சிகிச்சைக்கு முந்தைய பரிசோதனைகள் மற்றும் தனிநபர் பாதுகாப்பு கவசங்களுக்கு ஆன செலவு ரூ.40,000 சிறுவனின் பெற்றோர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மும்பை ரோட்டரி சங்கம் இதுவரை 270 குழந்தைகளுக்கான இதய அறுவைச் சிகிச்சைகளுக்கு நிதியுதவி செய்துள்ளது. அதாவது மும்பையிலுள்ள மருத்துவமனைகள் மற்றும் குஜராத்தில் வாபியில் உள்ள ஹரியா ரோட்டரி மருத்துவ மனைக்காக மொத்தம் ரூ.2.36 கோடி செலவிடப்பட்டுள்ளது என்று ஜாட்டியா மேலும் கூறினார்.■



*4-வயது ஹேமந்த் நாயக்*

Rotary PEOPLE OF ACTION

# கோவிட் நோயாளிகள் பதற்றத்தை வெல்ல உதவுதல்

கிரண் ஜெஹ்ரா




RC *பெங்களூர் மான்யதாவின் முன்னாள் தலைவர் முகம்மது தஸ்லீல் ஏழை குடும்பங்களுக்கு மளிகை சாமான்கள் அளிக்கிறார்.*

பல சூழ்நிலைகளில், கோவிட் நோயாளிகள் தனிமைப் படுத்தப்படும் போது மன வேதனையையும் மனச்சோர்வை யும் சந்திக்கிறார்கள், இதனால், அவர்களுக்கு ஆலோசனைகளும் பொழுதுபோக்கும் தேவை, அப்போதுதான் அவர்களால் உளவியல் அழுத்தத்தை வெல்ல இயலும் என்கிறார் RC பெங்களூர் மான்யதா, RID 3190 முன்னாள் தலைவர் முகம்மது தஸ்லீல். இந்தச் சங்கம் பெங்களூரு பிரசிடென்சி பல்கலைக்கழகம், குளோபல்ஸ் என்ற நிறுவனத்துடன் "இணைந்து, குணமாதல்"என்ற திட்டத்தின்கீழ் ராஜீவ்காந்தி மருத்துவமனையில் ஒரு கோவிட் பராமரிப்பு மையத்தை அமைத்துள்ளது. ரூ.1.75 கோடி மதிப்புள்ள இந்த மையத்தின் தனித்துவம், மிதமான பாதிப்பு கொண்ட நோயாளிகளுக்குத் தொடக்க நிலைப் பராமரிப்பு வழங்குவதற்கான ஒரு பொழுது போக்கு மையமும் இங்கு உள்ளது.

இந்த மையம் கோவிட் நோயாளிகளுக்கு முழுமையான சிகிச்சை வழங்குகிறது. வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்குத் தனிமைப்படுத்தல் அவசியம். ஆனால், கோவிடுடன் இணைந்துள்ள தவறான கருத்துகள், களங்கத்தால் நோயாளிகள் மன வேதனையைச் சந்திக்கக்கூடாது. சிலர் தாங்கள் இறக்கப்போகிறோம் என்று எண்ணுகிறார்கள். இந்த எண்ணங்கள் அவர்கள் குணமாவதைப் பாதிக்கின்றன என்று விளக்குகிறார் தஸ்லீல். இந்த அதிநவீன வளாகம் 70 ஆக்சிஜன் படுக்கைகள், 15 பொதுப்படுக்கைகள், 15 உயர் சார்ந்திருத்தல் பிரிவுகள் (HDU), BiPAP இயந்திரங்கள், ஆக்சிஜன் செறிவூட்டிகள், மருத்துவர் பிரிவு, ஆய்வகம், மருந்தகத்துடன் அமைக்கப்பட்ட போது, தனிமைப்படுத்தல் காலகட்டத்தில் நோயாளிகள் தங்களைச் சுறுசுறுப்பாக வைத்துக் கொள்வதற்கான ஒரு பொழுது போக்கு மையத்தையும் நாங்கள் அமைத்தோம்."

RC பெங்களூர் பிளாட்டினம் சிட்டி உறுப்பினரான Dr ஷோபா இந்த மையத்தில் நோயாளிகளுக்கு ஆலோசனை வழங்கிவருகிறார். உளவியல் அறிகுறிகளால் துன்பப்படும் நோயாளிகளுக்கு எந்த மாயச்சிகிச்சையோ மருந்துகளோ இல்லை. அவர்களுடைய பரிசோ தனையில் "பாசிட்டிவ்" என்று தெரியவந்தால், அவர்கள் உறுதியற்ற சூழ்நிலையில் மூழ்கத் தொடங்குகிறார்கள், இதனால் வேறு பல சிக்கல் கள் வரலாம் என்று சுட்டிக் காண்பிக்கிறார் இவர்.

தன்னுடைய 10 வயது மகன் நிருதா-வுடன் இந்த மையத்தில் அனுமதிக்கப்பட்ட சாகர், என் மகனைப்பற்றி நான் கவலை கொண்டேன் என்கிறார். அவனுடைய நிலையைப் பற்றி மருத்துவர்கள், செவிலியர் களை நான் கேட்டுக் கொண்டே இருந்தேன். இணைய ஆலோசனை நிகழ்ச்சிகள், யோகாசனம், மூச்சுவிடுதல்

மற்றும் மனநல வலுப்படுத்தல் பயிற்சிகளுக்குப்பிறகு, நான் இன்னும் நன்றாக உணர்ந்தேன். இந்த நிகழ்ச்சிகள், பதற்றத்தை வெல்வதற்கு எனக்கு உதவின. நான் என் மகனுடன் கேரம் அல்லது செஸ் விளையாட்டையும் விளையாட இயன்றது என்றார்.

பெங்களூரு சுகாஸ் பொது மற்றும் தொண்டு மருத்துவமனை இந்த வளாகத்தின் செயல்பாடு களை மேற்பார்வை செய்கிறது. ரோட்டரி சங்கம் தன்னுடைய அறக்கட்டளையின் வழியாக நோயாளிகள், ஊழியர்களுக்கு உணவு வழங்குகிறது. இந்த மையம் மருத்துவ மற்றும் மருத்துவம் அல்லாத ஊழியர்களுக்கான தங்கும் வசதியையும் அளிக்கிறது என்கிறார் தஸ்லீல்.



*சங்கம் அமைத்துள்ள கோவிட் சிகிச்சை மையத்தில் நோயாளிகள்.*

கர்நாடக முதல் அமைச்சர் பசவராஜ் பொம்மை இந்த மையத் தைத் தொடங்கிவைத்தார். கோவிட் தடுப்பு மருந்து வழங்கலுக்குப் பொதுமக்கள் பதிவு செய்துகொள்வ தற்காக இச்சங்கம் www.healthdiaries.org என்ற இணையத்தளம் ஒன்றை உருவாக்கியுள்ளது.■

# பார்வையற்றோரும் இனி WhatsApp, SMS அனுப்பலாம்

ரோட்டரி செய்திக்குழு




**(அமர்ந்திருப்போர், இடமிருந்து)** *ஸ்நேகன்கிட் நிறுவனர் பரிமளா பட், RC தானே வெஸ்ட் தலைவர் கேதர் வித்வான், DGE கைலாஷ் ஜெத்தானி மற்றும் சங்க செயலர் ஜெயந்த் ஜோஷி, பயனாளிகளுடன்.*

RID 3142வைச் சார்ந்த தானே வெஸ்ட், தானே க்ரீன் சிட்டி, கார்கர் மிட்-டவுன் மற்றும் க்ரீக்சைட், 15 பார்வை குறைபாடுள்ளோருக்கு 'Braille Me' என்னும் கருவியை மும்பை மற்றும் தானேயில் அளித்தனர்.

இந்த பன்மொழி கருவி மூலம் பார்வையற்றோர் புத்தகங்கள் படிக்கலாம் மற்றும் கம்ப்யூட்டரில் பல வேலைகளை செய்யலாம். இவர்கள் WhatsApp மற்றும் SMS கணிணி, கைபேசி மூலம் அனுப்பலாம் என்று திட்டத்தலைவர் சாதனா வாஸ் தெரிவித்தார். 50ம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் RC தானே வெஸ்ட் இந்த கருவியை 50 பார்வையற்றோர்களுக்கு அளித்துள்ளது. இந்த கருவியின் விலை ரூ.30000 ஆகும்.■

# கிராமப்புறப் பொருளாதாரத்தை உயர்த்துவதற்கு ரோட்டரி உத்தராகண்ட் மாநிலத்துக்கு உதவும்

ரோட்டரி செய்திக்குழு



*உத்தராகண்ட் முதலமைச்சர் புஷ்கர் சிங் தாமியுடன் RI தலைவர் சேகர் மேத்தா. ராஷி, RID மகேஷ் கோட்பாகி, PRID கமல் சங்வி, PDGs விவேக் தன்கா மற்றும் ஹேமந்த் அரோரா மற்றும் DG அஜய் மதன் ஆகியோரும் உடன் உள்ளனர்.*

மலை மாநிலமான உத்தராகண்ட் இளைஞர்களுக்குச் சுய வேலை வாய்ப்பு வழங்குவதில், அதன் மூலம், கிராமப்புறப் பகுதிகளில் இருந்து மக்கள் நகரங்கள், பிற மாநிலங்களுக்கு இடம் பெயர்கிற போக்கைத் தடுப்பதில் ரோட்டரியின் உதவியை அம்மாநில முதல் அமைச்சர் புஷ்கர் சிங் தாமி கோரியுள்ளார். டெஹ்ராடூனில் உள்ள CM தாமி-யின் இல்லத்தில் RI தலைவர் சேகர் மேத்தா தலைமையிலான குழுவினர் அவரைச் சந்தித்தபோது அவர் இதைத் தெரிவித்தார்.

இந்த விவாதத்தின் போது, கல்வி, நலன், சுற்றுச்சூழல், நீர்ப்பாதுகாப்பில் இம்மாநிலத்துக்கு உதவும்படி தாமி ரோட்டரியைக் கேட்டுக்கொண்டார். உத்தராகண்ட் மாநிலத்தின் எல்லைப் புறப்பகுதிகளில் வாழும் மக்கள் இடம் பெயர்வதைத் தடுப்பது முக்கியம் என்றார் அவர். ஏனெனில், இந்த மக்கள் எல்லைக் காவலர்களாக ஒரு சிறப்புப் பணி ஆற்றுகிறார்கள்.''

தொலைதூரக் கிராமங்களுக்குத் மருத்துவ வசதிகளை வழங்குதல், மின்கற்றல், பெண்களுக்கான தற்காப்புக் கலைகள், எழுத்தறிவுப் பரப்புரை உள்ளிட்ட விஷயங்களும் இங்கு பேசப்பட்டன. பூங்கொத்துகளுக்குப் பதிலாக, மரக்கன்றுகளைப் பரிசளிக்கக் கேட்கும் தாமியைப் பாராட்டிய மேத்தா, உத்தராகண்ட் மாநிலத்தில் ரோட்டரி சங்கங்கள் 10,000க்கும் மேற்பட்ட மரங்களை நடும், மாநில அரசுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்குச் சங்கங்கள் அனைத்து முயற்சிகளையும் செய்யும் என்றார்.

ராஷி, RID மகேஷ் கோட்பாகி, PRID கமல் சங்வி, மாநிலங்கள் அவை உறுப்பினர் PDG விவேக் தன்கா, ITV மீடியா நெட்வொர்க் நிறுவனர், கார்த்திகேய சர்மா, DG அஜய் மதன், PDGகள் ஹேமந்த் K அரோரா, அருண் சர்மா, ரவி லாங்கர், Rtnகள் ராஜீவ் அகர்வால், சுனிதா தர்மா, சவிதா மதன், பவித்ரா அரோரா, சுஷாந்த் அஹுஜா ஆகியோரும் மேத்தாவுடன் இந்தச் சந்திப்பில் பங்கேற்றார்கள்.■

# நாட்டைக் கட்டமைக்கும் ரோட்டரியைப் பாராட்டுகிறார் யோகி ஆதித்யநாத்



*உத்தரபிரதேச முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் அவர்களுடன் RI தலைவர் சேகர் மேத்தா. அமைச்சர்கள் ஜெய் ப்ரதாப் சிங் (வலது), சதீஷ் சந்திர த்விவேதி (இடதிலிருந்து 2வது) மற்றும் RC கோரக்பூர் உறுப்பினர் விக்ரம் சௌத்ரியும் உள்ளனர்.*

உத்தரப்பிரதேச முதல் அமைச்சர் யோகி ஆதித்யநாத், நாட்டைக் கட்டமைப்பதில் ரோட்டரியின் ஈடுபாட்டை, சமூக முன்னேற்றத்தில் அதன் பங்களிப்பைப் பாராட்டினார். லக்னோ-வில் RI தலைவர் சேகர் மேத்தா-வைச் சந்தித்த போது அவர் இவ்வாறு கூறினார். மேத்தா-வை CM பெருமைப்படுத்தினார், மாநிலத்தின் அதிகாரப்பூர்வ விருந்தினர் நிலையை வழங்கினார்.


இந்தக் கூட்டத்தின் போது, இந்தியாவில் மிகக் கூடுதலான மக்கள் தொகை கொண்ட மாநிலத்தில் ரோட்டரி அரசுடன் இணைந்து பணியாற்றக்கூடிய நலன், எழுத்தறிவு, நீர், தூய்மை போன்ற பகுதிகளில் விரைவான முன்னேற்றம் பற்றித் தாங்கள் விவாதித்ததாக மேத்தா கூறினார். நலன் மற்றும் குடும்ப நலத்துக்கான மாநில அமைச்சர் ஜெய்பிரதாப் சிங், தொடக்கக் கல்விக்கான மாநில அமைச்சர் சதீஷ் சந்திர த்விவேதி, RC கோரக்பூர், RID 3120 முன்னாள் தலைவர் Rtn அர்விந்த் சிக்ரம் சௌதரி ஆகியோரும் இந்தச் சந்திப்பின் போது இருந்தனர்.■

# டோக்கியோ ஒலிம்பிக்ஸில் சிறந்து விளங்கிய ரோட்டரியன்கள்

ரோட்டரி செய்திக்குழு

டோக்கியோ ஒலிம்பிக்ஸில் நடைபெற்ற ஆண்கள் இரட்டையர் இறகுப்பந்து இறுதிப் போட்டியில் ரோட்டரியன் வாங் சி-லின், அவருடைய கூட்டாளர் லீ சங் ஆகியோர் சீனாவைச் சேர்ந்த லீ ஜுன்ஹுய், லியு யுசெனை வென்று தங்கப் பதக்கம் பெற்றார்கள். வாங், RC யுனைட்டி தாய்பெய், RID 3521, உறுப்பினர் ஆவார். 1912 ஸ்டாக்ஹோம் ஒலிம்பிக்ஸின் 100-மீட்டர் ஃப்ரீஸ்டைல் நீச்சலில் தங்கம் வென்ற, RC ஹொனலுலு, ஹவாய், USAஐச் சேர்ந்த ட்யூக் கஹானமொகு, 1988 சியோல் ஒலிம்பிக்ஸில் ஈட்டி எறிதலில் தங்கம் வென்ற, RC லபுவா கிவிரிஸ்டி, ஃபின்லாந்தைச் சேர்ந்த டபியோ கொர்ஜுலைசத் தொடர்ந்து, ஒலிம்பிக்ஸில் தங்கப் பதக்கம் வெல்லும் மூன்றாவது ரோட்டரியன் இவர்.

ஒலிம்பிக்ஸில் வெண்கலப் பதக்கம் வென்ற இந்திய ஹாக்கி அணியின் கோல் காப்பாளர், ரோட்டரியன் PR ஸ்ரீஜேஷ், இந்த ஆட்டத்தின் கடைசி 50 விநாடிகளில் இரண்டு பெனால்ட்டி கார்னர்களைத் தடுத்து ஆட்டத்தின் நட்சத்திரமாக ஆனார். இவர் RC கிழக்கம்பளம், RID 3201ன் உறுப்பினர் ஆவார். UAEஐச் சேர்ந்த இந்தியத் தொழில்முனைவோர் டாக்டர் ஷம்ஷீர் வயலில், கோல் காப்பாளருக்கு ரூ.1 கோடி விருது அறிவித்துள்ளார்.■




P R *ஸ்ரீஜேஷ்*

# சென்னையில் அதிநவீன டயாலிசிஸ் மையம்



DG J *ஸ்ரீதர் (வலதிலிருந்து 4வது),* DRFC M *அம்பலவானன், சங்கத் தலைவர் ராஜீவ் சம்பத்,* Rtn *வினோத் சரோகி ஆகியோருடன் டயாலிஸிஸ் மையத்தில்.*

ஏழைகளுக்குக் குறைந்த செலவில் டயாலிசிஸ் சேவைகளைக் கிடைக்கச் செய்யும் நோக்கத்துடன் RC சென்னை கேபிடல், RID 3232, மெட்ராஸ் வெஸ்ட் ரவுண்ட் டேபிள் 10, சத்யலோக் தொண்டு அறக்கட்டளை ஆகியோர் இணைந்து சென்னையில் உள்ள போரூரில் ரூ.3 கோடி செலவில் சத்யலோக் தொண்டு அறக்கட்டளை டயாலிசிஸ் மையத்தை அமைத்துள்ளார்கள். இந்த மையம் ஒரு முறைக்கு ரூ.375 கட்டணத்தில் இதை வழங்கவுள்ளது.

அதிநவீன டயாலிசிஸ் கருவிகள் உள்ள இந்த 5,000 சதுர அடி கொண்ட கட்டடத்தைத் தமிழ் நாடு சிறுநீரக ஆராய்ச்சி (TANKER) அறக்கட்டளை இயக்கி நிர்வகிக்கும். 20 படுக்கை களைக் கொண்ட இந்த மையம் ஒரு நாளைக்கு 40 நோயாளிகளுக்குச் சேவை வழங்கும்.

இந்த மையத்தின் தொடக்க விழாவில் DG J ஸ்ரீதர், RID 3232, கலந்துகொண்டார்.■

# ரோட்டரி ஆளுநர்



**A R ரவீந்திர பட்**
**உணவக, கட்டுமானத்துறை வல்லுனர்,**
**RC சென்ட்ரல் மைசூர், RID 3181**

## இவர் புத்தூரைத் தூய நகரமாக மாற்றுவார்

ஆகஸ்ட் நிறைவுக்குள், நாங்கள் 10 சங்கங்களையாவது பதிவு செய்வோம், இந்த ரோட்டரி ஆண்டுக்குள் 20 புதிய சங்கங்களைச் சேர்க்க இயலும் என்று எனக்கு நம்பிக்கை உள்ளது. என்னுடைய ஆண்டில் 1,400 உறுப்பினர்களைச் சேர்த்து மொத்த உறுப்பினர் எண்ணிக்கையை 4,000க்குக் கொண்டு செல்ல இயலும் என்று நான் நம்புகிறேன் என்கிறார் ரவீந்திர பட்.

இவருடைய மிகப் பெரிய திட்டம், புத்தூரை ஒரு மிகப் பெரிய "தூய, சுற்றுச்சூழலுக்கு இதமான நகரமாக" மாற்றுவது. இங்கு ஈர, உலர் மற்றும் ஆபத்தான கழிவுகள் பிரிக்கப்பட்டு, ஓர் உயிரியல் கூட்டெருவாக்கல் செயல்முறையின் வழியாக மறுசுழற்சி செய்யப்பட்டு, விவசாயம், மற்ற பயன்பாடுகளுக்கான பல டன் இயற்கை உரம் உருவாக்கப்படும். நாங்கள் புத்தூர் நகராட்சியுடன் ஓர் MoUல் கையொப்பமிட்டுள்ளோம். இயந்திரங்களை நிறுவவும் மறு சுழற்சிச் செயல்முறையைத் தொடங்கவும் அவர்கள் எங்களுக்கு இரண்டு ஏக்கர் நிலம் வழங்கியுள்ளார்கள். இந்த நகரைப் பசுமையாகவும் அழகாகவும் ஆக்குவதற்காக, இந்த வெள்ளோட்டத் திட்டத்தின் கீழ் (GG: ரூ 8.92 கோடி) உள்ளூர் மக்களும் ரோட்டரியும் கை கோப்பார்கள் என்கிறார் இவர். இது செயல்படுத்தப்பட்டபிறகு, குப்பை மேடுகளோ குப்பைகளைக் கொட்டிவைக்கிற இடங்களோ இருக்காது."

இவருக்குப் பிடித்த இன்னொரு திட்டம், இந்த மாவட்டம் முழுவதும் உள்ள இடுகாடுகளை மேம்படுத்துவது. DDF மற்றும் பன்னாட்டு நல்கை ஆகியவற்றின் கலவையால் 40 இடுகாடுகள் இறந்தவர்களுடைய உறவினர்களுக்கான வசதிகளுடன் மேம்படுத்தப்படும் என்கிறார் இவர். TRF வழங்கலுக்கு இவருடைய இலக்கு, 500,000. முன்னாள் ரோட்டராக்டரான இவர், 2002ல் தன்னுடைய உணவக வல்லுனர் நண்பரான Rtn N P விஸ்வநாத் ஆதரவில் ரோட்டரியில் இணைந்தார்.



**பங்கஜ் ஷா**
**பொறியாளர், RC புணே சரஸ்பாக், RID 3131**

## உறுப்பினர்களை ஈர்ப்பதற்காக ரோட்டரி செயல் குழுக்களை முன்னிறுத்துதல்

உறுப்பினர் எண்ணிக்கையைப் பெருக்குவதற்கும், புதிதாக இணைந்த ரோட்டரியன்களைச் சேவைச் செயல்பாடுகளில் பங்கேற்கச் செய்வதற்கும் ஒரு வழி, RI ஊக்குவிக்கும் பல செயல் குழுக்களை முன்னிறுத்துவது என்கிறார் பங்கஜ் ஷா. நெடுந்தொலைவு நடத்தல், மிதிவண்டி ஓட்டுதல் போன்ற தனித்துவமான செயல்பாடுகள், உறுப்பினர்களிடையே பிணைப்பை மேம்படுத்துகிற பிற இணைச் செயல்களை நடத்துகிற இந்தச் செயல் குழுக்களைப்பற்றிய விழிப்புணர்வை நாம் உருவாக்கவேண்டும்.

இவருடைய இலக்குகள், 30 புதிய சங்கங்கள், 1,000 புதிய உறுப்பினர்களின் மூலம் உறுப்பினர் எண்ணிக்கையை 4,700க்கு மேல் உயர்த்துவது. இளம் தொழில் வல்லுனர்களுடைய தேவைகளுக்குப் பொருந்தும் நெகிழ்வுத்தன்மை கொண்ட செயற்கைக் கோள் சங்கங்களிலும் இவர் கவனம் செலுத்துகிறார்.

இவர் முன்னெடுக்கவிருக்கும் பகுதிகளில் ஒன்று, GG மற்றும் CSR நிதியளித்தலின் கலவை வழியாக 10–12 டயாலிசிஸ் மையங்களைத் தொடங்குதல். இப்போது நடந்துவரும் 12 மகிழ்ச்சிகிராமங்கள் திட்டம் நிறைவடைந்ததும், நாங்கள் ஒரு சமூக மதிப்பீட்டை நடத்துவோம், உள்ளூர் மக்களுடைய தேவைகளின் அடிப்படையில், கிராமப்புற மாற்றத்துக்காக 10 மகிழ்ச்சி கிராமங்களின் இன்னொரு தொகுப்பு தொடங்கப்படும் என்று விளக்குகிறார் ஷா. TRF வழங்கலுக்கான இவருடைய இலக்கு, 2 மில்லியன். ஷா, "சமூக சேவை செய்யவேண்டும் என்று சுய ஊக்கம் பெற்றவர்", அதற்காக, 2009ல் ரோட்டரியில் இணைந்தார்.

# கவர்னர்களுடன் சந்திப்பு

V முத்துகுமரன்





**ஃபஜல் மஹ்மூத்**
**கட்டுமானக் கலைஞர்,**
RC பெங்களூர் மெட்ரோ, RID 3190

## நோய்ப்பரவலில் புதிய வாய்ப்புகளைத் தேடுதல்

மாவட்ட ஆளுநராகியுள்ள இன்னொரு ரோட்டராக்டர் இவர்.

ஒரு பணி இன்னும் கடினமாகும் போது, கடினமாக உழைப்பவர்கள் தொடர்ந்து உழைப்பார்கள் என்கிறார் ஃபஜல் மஹ்மூத். சங்கங்கள் மற்றும் மாவட்டக் குழு பரந்து சென்று, நோய்ப் பரவல் சவால்களையும் மீறிக் கிராமங்களில் தாக்கம் மிகுந்த சேவைத் திட்டங்களை நடத்த வேண்டும் என்று ஊக்குவிக்கத் தயாராகிறார் இவர். இந்த நல நெருக்கடி, சமூகத் திட்டங்களில் பங்கேற்பதற்கான பல வாய்ப்புகளையும் ரோட்டரியன்களுக்குத் திறந்துள்ளது. இதன்மூலம், ரோட்டரியின் பொதுத் தோற்றம் மேம்பட்டுள்ளது.

இவர் 25 புதிய சங்கங்களைப் பதிவு செய்யவும், உறுப்பினர் எண்ணிக்கையை 30% வளர்க்கவும் இலக்கு நிர்ணயித்துள்ளார். Zero Hunger என்ற திட்டம், இடம் பெயர்ந்தவர்கள் மற்றும் நலிந்தவர்களுடைய குடும்பங்களுக்கு மளிகைப் பொருட்கள், உணவுப் பொட்டலங்கள், பிற தேவையான பொருட்களை நாள்தோறும் வழங்குகிறது. ரோட்டரியன்களும் அவர்களுடைய குடும்பத்தினரும் பிறந்த நாட்கள், திருவிழாக்கள், சிறப்பு நேரங்களில், பெங்களூரில் உள்ள மருத்துவமனைகளில் உள்ள நோயாளிகள், அவர்களைக் கவனித்துக் கொள்வோருக்கான உணவுகளை ஆதரிக்கிறார்கள்.

சஹயோகா (உடனுழைப்பு) என்ற இன்னொரு புதுமையான திட்டத்தின்படி, இரண்டு நகரச்சங்கங்கள் ஒரு கிராமச் சங்கத்துடன் கூட்டுச் சேர்ந்து, அந்தக் கிராமத்தில் ஏழு கவனப்பகுதிகளின் கீழ் திட்டங்களை நடத்தும். நாங்கள் உருவாக்கிய அனைத்து வசதிகளையும் பராமரிப்பதற்காக, அந்தச் சிறு கிராமத்தில் ஓர் RCCஐ நாங்கள் அமைப்போம். இந்த மாவட்டம் இப்படிப்பட்ட ஒவ்வொரு திட்டத்துக்கும் 1,000 DDFஐ வழங்கும். 1979 முதல் 1988 வரை ரோட்டராக்டராகச் செயல்பட்டபின், தன் கனவுகளுக்கு இறக்கைகளை வழங்குவதற்காக இவர் 1993ல் ரோட்டரியனாக மாறினார்.

**சந்தோஷ் பிரதான்**
**ஏர்-கன்டிஷனிங்,** RC உத்னா, RID 3060

## குஜராத் நகரங்கள், பேரூர்களில் நகர்ப்புறக் காடுகள் மலரவுள்ளன

ஒவ்வொருவரும் ஒவ்வொருவரை அழைத்துவாருங்கள் என்பது RI தலைவர் சேகர் மேத்தா உருவாக்கியுள்ள ஒரு புரட்சிகரமான கருத்து. இந்த EOBO கருத்து ஏற்கெனவே என் மாவட்டத்தில் பல அதிசயங்களை நிகழ்த்தியுள்ளது என்கிறார் சந்தோஷ் பிரதான். ஜூலை மாதத்தில் மட்டும் இந்த மாவட்டம் 500 புதிய உறுப்பினர்களைச் சேர்த்துள்ளது, இந்த ரோட்டரி ஆண்டின் நிறைவுக்குள் நாங்கள் 1,500 பேரைச் சேர்ப்போம், இது எங்கள் உறுப்பினர் எண்ணிக்கையைச் சுமார் 6,400க்குக் கொண்டு செல்லும். இவர் 5–6 புதிய சங்கங்களைப் பதிவு செய்வார், சங்கங்களின் மொத்த எண்ணிக்கையை 118க்குக் கொண்டு செல்வார்.

இந்த மாவட்டம், குறைந்தது 50,000 கிராமப்புறப் பெண்களுடைய வாழ்வாதாரத்துக்காக அவர்களுக்குக் குறுங்கடன்களை வழங்குவதற்காகக் குஜராத் அரசுடன் ஓர் MoUல் கையொப்பமிட்டுள்ளது. பெண்களுக்கு ஆற்றல் அளிப்பதற்காக, PDG தீபக் அக்ரவால் தலைமையின்கீழ் தாக்கம் மிகுந்த திட்டங்கள் தொடங்கப்படும்.

ரோட்டராக்டைப் பொறுத்தவரை, 15–20 புதிய சங்கங்களை, 250 ரோட்டராக்டர்களைச் சேர்க்கலாம், மொத்த எண்ணிக்கையை 75 சங்கங்கள், 2,250க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் என ஆக்கலாம் என்று இவர் நம்புகிறார். TRFக்காக இவர் 1.5 மில்லியன் திரட்ட இலக்கு அமைத்துள்ளார். 1990ல் இவர் ரோட்டராக்டராக ஆனபோதும், குஜராத்தில் இந்த இடத்துக்கு நான் மாறிய போது, ரோட்டரியுடன் இடைவெளி உண்டாகிவிட்டது. அதே நேரம், பயிற்சி வகுப்பின் போது, Rtn தர்மேஷ் கச்சிவாலா என்ற முன்னாள் தலைவரைப் பார்த்து நான் ஊக்கம் பெற்றேன், 2008ல் என் இல்லச் சங்கத்தில் இணைந்தேன் என்றார் இவர்.

வடிவமைப்பு: N. கிருஷ்ணமூர்த்தி

# ரோட்டரி அமைதி மைய மாணவர்கள்

ஜெஃப் ரூபி

பிப்ரவரி மாதத்தில், உகாண்டாவில் உள்ள கம்பாலா-வில் இருக்கும் மகெரெரெ பல்கலைக்கழகத்தில் RIன் புதிய அமைதி மையத்தின் தொடக்க நிகழ்வு நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில், 11 நாடுகளின் பிரதிநிதிகள் பல்வேறு மொழிகளில் பேசினார்கள். பல பின்னணிகளில் இருந்து வருகிற இவர்கள் ஆப்பிரிக்காவில் அமைதி என்னும் ஒரு விருப்பத்தில் இணைகிறார்கள் என்றார் கம்பாலா நால்யா ரோட்டரி சங்க உறுப்பினர், அமைதி மைய ஒருங்கிணைப்பாளர் அன்னெ நகுடு.

திட்டத்தில் சேர்ந்தபோது இவர்களுடைய சராசரி வயது 40, அமைதி, இவர்கள் முன்னேற்றத்தில் குறைந்தது 5 ஆண்டு அனுபவம் கொண்ட தொழில் வல்லுனர்கள். இவர்கள் தங்கள் பணியிடம் அல்லது சமூகத்தில் அமைதி அல்லது சமூக மாற்றத்தை முன்னிறுத்தும் முயற்சியில் ஏற்கெனவே ஈடுபட்டு வருகிறவர்கள். இவர்கள் அமைதி உருவாக்கத்தின் எதார்த்தப் பகுதியில் ஆர்வம் கொண்டவர்கள் என்றார் அமைதி மைய இயக்குநர் ஹெலென் நம்பலிர்வா நகபாலா. மாணவர்கள் பொதுவாகக் கருத்துகளில் ஆர்வம் காண்பிப்பார்கள், இவர்கள் அதை எப்படிச் செய்வது என்று காண விரும்புகிறார்கள். இதனால், இவர்கள் அமைதியை உருவாக்குகிறவர்கள்.''

இதற்குமுன் இந்தத் தோழர்கள் ரோட்டரியின் புதிய ஓராண்டு அமைதி உருவாக்கம், முரண் மாற்றம், முன்னேற்றச் சான்றிதழ் திட்டத்தின் முதல் நிலையாகிய இணைய நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்றார்கள். (பாங்காக் சுலாலாங்கார்ன் பல்கலைக்கழகம் இதற்குமுன் இந்தச் சான்றிதழ் திட்டத்தின் மூன்று மாத வடிவத்தை வழங்கியது. அதுவும் இப்போது புதிய மாதிரிக்கு மாறிவிட்டது.)

கம்பாலா-வில் 10 வார நிகழ்ச்சியைத் தொடர்ந்து, அவர்கள் வீடு திரும்பிச் சமூக மாற்றங்களைத் தொடங்குவார்கள், அவ்வப்போது ஆசிரியர்கள், சக மாணவர்களுடன் பேசுவார்கள். 2022ன் தொடக்கத்தில் இவர்கள் மீண்டும் மகெரெரெ-வுக்கு வந்து திட்டத்தை நிறைவு செய்வார்கள்.

இவர்கள் கம்பாலா-வுக்குக் கிளம்பு முன், ரோட்டரி இதழ் இணையம் வழியாக இவர்களில் 6 பேரிடம் பேசியது. அந்த உரையாடல்கள் ஆப்பிரிக்க வரலாறு, அரசியலை நன்கு விளக்கின. இவர்கள் தாங்கள் கற்றுக்கொண்டதைப் பகிர்ந்து கொள்ளும் போது ஆப்பிரிக்கா எப்படி வளமாகும் என்பதையும் இவர்கள் சுட்டிக் காண்பித்து ஊக்கம் அளித்தார்கள்.

### பேஷன்ஸ் ருசாரெ

ஜிம்பாப்வே-வைச் சேர்ந்த இவர், முதல் வகுப்பு படிக்கும்போதே பழங்குடிவாதத்தை எதிர்கொண்டார். வேறோர் இனத்தால் ஆதிக்கம் செலுத்தப்படும் ஒரு நகரத்தில் வாழ்ந்த இவருடைய குடும்பம் உள்ளூர் மொழியையும் சரியாகப் பேசவில்லை.

25 ஆண்டுகளுக்குப்பின், ஹராரெ செய்தித்தாள் ஒன்றில் ஆசிரியர், மூத்த இதழாளர் ருசாரெ. பல ஆண்டு தொழில்துறைக் கதைகளை எழுதியபின், 2013ல் அவர் தன் கவனத்தை மாற்றினார். அவர் முரண்களைப் பதிவு செய்யத் தொடங்கினார், இப்போதைய சூழலை விளக்கப் பல ஆண்டுகள் பின்னோக்கிச் சென்றார்.

தான் எழுதிய ஒரு கட்டுரையின் தாக்கத்தால் ஒரு நல்ல தீர்வு விளைந்தது என்று அவர் நினைவுகூர்கிறார். உலகில் நான் ஒரு நல்ல மாற்றத்தைக் கொண்டுவந்தேன் என்று நான் உணர்ந்தேன் என்கிறார்



இவர். இதனால் லெசொதோ-வில் நீடித்த அமைதி உண்டாகியுள்ளது.

2019ல், இவர் அமைதி, தலைமைப் பண்பு மற்றும் முரண் தீர்வில் முதுநிலைப் பட்டம் பெற்றார். இன்னும் நியாயமான, அமைதியான ஓர் உலகை உருவாக்க ஊடகத்தைப் பயன்படுத்துவதாக நான் எனக்கு வாக்களித்துக் கொண்டேன் என்கிறார் ருசாரெ.

ஜிம்பாப்வே-வில் தேர்தல்கள் வரப்போகின்றன, ருசாரெ சிறு வயதில் சந்தித்த அதே முரண் இப்போதும் உள்ளது. ருசாரெ தன்னுடைய சமூக மாற்ற முன்னெடுப்பின் மூலம் ஜிம்பாப்வே இதழியல் அணுகுமுறையை மாற்ற விரும்புகிறார். நாம் அமைதியைப் பின்பற்றுகிறவர்களாகப் பணியாற்ற வேண்டும் என்கிறார் இவர். நல்ல மனிதர்களுடைய கதைகளுடன் நேர் விதமான அமைதிச் செய்திகளைச் சொன்னால், மக்கள் செய்தித்தாளை வாங்குவார்கள். இவருடைய திட்டம், 20 இதழாளர்களுக்கு முரண் பதிவுசெய்தல் கலையைக் கற்றுத்தருவது, அவர்கள் இன்னும் பலருக்கு வழிகாட்டுவது, இதன்மூலம் நாடுமுழுவதும் அதற்கு வெளியிலும் இந்த அணுகுமுறையை நீட்டிப்பது.

ருசாரெ-க்கு இரண்டு குழந்தைகள். நான் சந்தித்த துன்பங்களை அவர்கள் சந்திக்கக்கூடாது என்று நான் விரும்புகிறேன். மக்கள் எல்லாரும் ஒருவரை ஒருவர் நேசிக்கும் ஒரு சூழலில் அவர்கள் வளரவேண்டும் என்று நான் விரும்புகிறேன். நாம் வெவ்வேறுவிதமாக இருந்தாலும், நாம் அனைவரும் ஒருவர்தான் என்று அவர்கள் அறியவேண்டும்.''



### பீட்டர் பால்

அதிர்ச்சியைப்பற்றிப் பேசப் பீட்டர் பால் விரும்புவதில்லை. தன் சொந்த நாடான சூடானில் உள்நாட்டுப் போர் ஏற்பட்டது, அன்புக்குரியவர்கள், நண்பர்கள் இறந்ததைப் பார்த்தது, 1989ல் அங்கிருந்து தப்பி எத்தியோப்பியாவில் தஞ்சமடைந்தோர் முகாமில் உயிர் பிழைத்தால் போதும் என்று 11 ஆண்டுகள் வாழ்ந்தது போன்ற கொடுமையான நிகழ்வுகளை அவர் இயல்பாக விளக்குகிறார். இதையெல்லாம் சந்திக்கும்போது நீங்கள் இன்னும் வலுவாகிறீர்கள் என்கிறார் இவர்.

நான் தெற்கு சூடானுக்கு உறுதித்தன்மையை அளிக்க, அங்குள்ள மக்களின் வாழ்க் கைகளை மேம்படுத்த விரும்புகிறேன் என்கிறார் பால் (52). தென்கிழக்கு ஆஸ்திரேலியாவில் கல்வியாளராகப் பணியாற்றும் பால் அமைதி உருவாக்கம், அரசியல் உறவுகளில் பயிற்சி பெற்றுள்ளார். நல்ல அரசுக்கு, சரியான தலைவரைத் தேர்ந்தெடுக்க, மக்களாட்சியைப் பயன்படுத்தத் தேர்தல் முறை முக்கியம் என்கிறார் இவர். தங்களுக்கு எது சரி என்று தீர்மானிக்கும் உரிமை மக்களுடையது.'' ரோட்டரி அமைதித் தோழமைபற்றி இவர் கேள்விப்பட்டபோது, பன்னாட்டு அளவில் தன் திறமையைப் பயன்படுத்தி, அதைத் தன் சொந்த நாட்டுக்குக் கொண்டு செல்லலாம் என்று இவர் எண்ணினார்.

2017ல் பால் தெற்கு சூடான் சென்றபோது, முன்பு நலத்துடன் இருந்த கிராமப்புறப் பகுதிகள் தேவையான நல வசதிகள், கல்வி வாய்ப்புகள் இன்று நகர் மயமாக்கப்பட்டிருப்பதைக் கண்டு அதிர்ந்தார். சிறு ஊர்களை அரசு முழுக்க அலட்சியப்படுத்தியிருந்தது. இந்த அலட்சியத்தை வெல்வதற்கு அமைதியை முன்னிறுத்தவேண்டும் என்று இவர் எண்ணுகிறார்: போர், உள் சண்டைகள் இல்லாத நிலை போதாது, நலப் பராமரிப்பு, உணவு, நீர் போன்ற அடிப்படைச் சேவைகள் அன்றாடம் தொடர்ந்து கிடைக்கவேண்டும். இவை இல்லாவிட்டால், மக்கள் தங்களுக்குள் தொடர்ந்து சண்டையிடுவார்கள் என்கிறார் பால். இவ்வகை அமைதி கிடைத்தால்தான் கல்வி விதைகளை ஊன்றும் வாய்ப்பு அமையும்.''

தன் சமூக மாற்ற முயற்சிக்காக, மாற்று முரண் தீர்ப்புக்காகத் தொழில் முறை அமைதி உருவாக்குவோருடன் உரையாடத் திட்டமிடுகிறார் பால். இதில் முக்கியமான கவனம் தெற்கு சூடானின் தொடர் நெருக்கடியால் மிகவும் பாதிக்கப்பட்ட தாய்மார்கள், குழந்தைகளுடைய கண்ணியத்தை மீட்பதில் செலுத்தப்படவேண்டும். அறியாமையால் இவர்கள் தொடர்ந்து மனிதத்தன்மையின்றி நடத்தப்படுகிறார்கள் என்கிறார் பால். பெண்கள் தொடர்ந்து குழந்தை பெறுகிறார்கள், அந்தக் குழந்தைகள் நன்கு வளர்வதில்லை. இவர்கள் அரசியலில் பங்கேற்காவிட்டாலும், போரால் மக்கள் இறக்கும்போது துன்பப்படுவது இவர்கள்தான்.

இத்தனைக்குப்பிறகும், பால் நம்பிக்கையுடன் உள்ளார். அது நியாயமான நம்பிக்கைதான். 20 ஆண்டுகளுக்குமுன், அவர் இங்கிருந்து தப்பிச் சென்றார், இப்போது, அமைதியைக் கட்டமைக்கத் திரும்பி வந்துள்ளார். நாம் நம்பிக் கையோடு இல்லாவிட்டால், சமூகத்தை முன்னேற்றும் வழிகளைச் சிந்திக்கமாட்டோம் என்கிறார் இவர். தெற்கு சூடானில்மட்டுமில்லை, ஆப்பிரிக்காவில், உலகெங்கும் இந்த மேம்பாடு தேவை.''

### ஜ்யூ மூன்டெ

தெற்கு ஆப்பிரிக்காவிலுள்ள மக்களாடி நாடான ஜாம்பியாவில் பெண் உரிமைகள் அவ்வளவாக இல்லை. ஜ்யூ மூன்டெ விளக்குவதுபோல், இங்கு ஆணாதிக்க மதிப்பீடுகள் ஆழமாக உள்ளன, பெண்களை வன்முறையான, அமைப்பு அடிப்படையிலான பல வழிகளில் அடக்குகின்றன. ஜாம்பியச் சமூகத்தில் பாலினப் பாகுபாடு வேரூன்றியுள்ளது என்கிறார் இவர். இதனால், தேர்தல் நேரத்தில் பெண் குரல்கள் கேட்பதில்லை.

தேர்தல் முறையில் பெண்கள் நியாயமான பங்கேற்பைப் பெறவில்லை' என்கிறார் ஜாம்பியா தேர்தல் ஆணையத்தின் அமைதி, முரண் மேலாளர் மூன்டெ (50). பெண்கள் அரசியல் செயல்முறையில் பங்கேற்காவிட்டால், அவர்களுடைய பிரச்சனைகள் இன்னும் பெருகும். பெண்கள் அரசியல் நிலை எடுக்க வேண்டிய நேரம் இது.''

ஜாம்பியா-வின் சமீபத்திய தேர்தல்களில் வன்முறை, அச்சுறுத்தல் மிகுந்திருந்தது, இது மூன்டெ-யை வருந்தச்செய்கிறது. லுசாகா-வைச் சேர்ந்த இவர், பல ஆண்டுகளாக ஜாம்பியக் கட்சிகளுக்கிடையிலான உரையாடல் மையம் (ZCID) அமைப்பில் ஓர் ஆலோசகராகச் செயல்பட்டுவருகிறார், சுதந்தரமான, நியாயமான தேர்தல்களை உறுதி செய்யும் ஓர் உள்கட்டமைப்பைக் கட்டமைக்க விரும்புகிறார், அரசியல் வாதிகளைச் சந்தித்துப் பாலினச் சமநிலையின்மைபற்றிச் சொல்வது அல்லது தேர்தல் செயல்முறையில் முரண்களைக் கையாள்வதுபற்றி மக்களுக்குப் பயிற்சியளிப்பது ஆகிய வழிகளில் இதைச் செய்ய எண்ணுகிறார். ZCID முன்வைத்த பல சட்டச் சீர்திருத்தங்களைப் பாராளுமன்றம் சட்டமாக்கியுள்ளது.

ஆனால், அரசியல் செயல் முறையில் பெண்களை ஈடுபடச் செய்வது மூன்டெ-யின் நோக்கத்தில் ஒரு பகுதி தான். அவர் இளைஞர்களையும் இதில் ஈடுபடச்செய்ய விரும்புகிறார். ஜாம்பியாவில் அரசியல் என்பது பெரும்பாலும் முதியவர்களுக்கானது என்கிறார் உளவியல் மற்றும் அமைதி மற்றும் முரண் கல்விகளில் பட்டங்கள் பெற்றுள்ள மூன்டெ. வேலை இல்லாத இளைஞர்கள் வன்முறையில் ஈடுபடுகிறார்கள், அதில் பாதிக்கப்படுவதும் அவர்கள்தான்.'' இதற்காக, ZCID சமூக ஊடக எட்டுதல், இளைஞர்களை மையமாகக் கொண்ட சமூக வானொலி நிலையங்களில் கவனம் செலுத்துகிறது; இளைஞர்கள் தங்களுக்கு நல்ல வேலையைப் பெற உதவக்கூடிய திறன்களை மேம்படுத்தவும் உதவுகிறது. நீங்கள் மாற்றத்தை விரும்பினால், தங்களுக்கு எதற்கோ உரிமை உள்ளது என்று



*ஃபிகிரி ந்ஜோயிசெங்கா*



*காத்தரின் பெய்ன்-ஓமுகிஷா*



*அமைதி மைய மாணவர்கள் கம்பாலா அருகே உள்ள ஒரு குடிசை பகுதியில் மக்களுடன் விவாதிக்கின்றனர்.*



பால் முஷாஹோ



பேஷியன்ஸ் ருசாரே

மக்களுக்குச் சொல்லிக்கொடுங்கள் என்கிறார் மூன்டெ.

இந்த அமைதித் தோழமையின் போது, ZCIDI ஒரு சட்டப்பூர்வமான அமைப்பாக மாற்ற உதவும் அறிவைப் பெற விரும்புகிறார் மூன்டெ, இந்த அமைப்பு ஜாம்பிய அரசியல் உரையாடல்களுக்கான ஓர் அலுவல் தளத்தை வழங்கும். அரசியல்வாதிகள், இளைஞர்கள் உரையாடுவதை, தங்கள் வெளிப்பாட்டு உரிமைகளைப் பயன்படுத்துவதைப்பற்றி நான் கேள்விப்படத் தொடங்கியுள்ளேன் என்கிறார் மூன்டெ. இதன் பொருள், நாம் செய்வது மக்களிடம் ஒரு தாக்கத்தைக் கொண்டுள்ளது. ஜாம்பியன்களுக்கு யாரும் உதவ மாட்டார்கள், அவர்களேதான் இதைச் செய்யவேண்டும்.''

### பால் முஷாஹோ

உலகெங்கும் 11,000க்கும் மேற்பட்ட ரோட்டராக்ட் சங்கங்கள் உள்ளன; அதில் ஒன்று, ஆப்பிரிக்காவிலுள்ள ஒரு தஞ்சமடைந்தோர் குடியிருப்பில் உள்ளது. 2016ல், தென்மேற்கு உகாண்டாவில் உள்ள ஒரு பெரிய கிராமப்புற முகாமாகிய நகிவாலெ-யில் நிறுவப்பட்ட இந்தச் சங்கத்தில் பல ஆப்பிரிக்க நாடுகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் உள்ளார்கள். நகிவாலெ என்பது ஒரு சிறு ஐக்கிய நாடுகள் அவையைப்போன்றது என்கிறார் இந்தச் சங்கத்தின் இணை நிறுவனர் பால் முஷாஹோ. மக்கள் போரால் தங்கள் வீடுகளில் இருந்து வெளியேறுகிறார்கள், பல அதிர்ச்சி களைச் சந்தித்து இங்கு வருகிறார்கள்.''

2016ல், ஒரு மாய்-மாய் போராளிக் குழுவின் கொலை மிரட்டலைப் பெற்றார் தொழில் தகவல் அமைப்புகள், கணினிப் பொறியியலில் பட்டங்களைக் கொண்ட மாணவரான முஷாஹோ, தன்னுடைய சொந்த நாடான காங்கோ மக்களாட்சிக் குடியரசிலிருந்து தப்பி வந்தார். நகிவாலெ-வுக்கு வந்தவுடன், அங்கிருந்த தஞ்சமடைந்தோருடைய வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் வாய்ப்புகளை முஷாஹோ கண்டார். அவருடைய தொடக்கத் திட்டங்களில் இரண்டு, பணம் பரிமாறும் சேவை, தேனீ வளர்ப்பு. இந்த 2வது திட்டம் கம்பாலா-விலிருந்த ரோட்டரியன்களுடைய கவனத்தை ஈர்த்தது.

விரைவில், அமெரிக்கத் தஞ்ச மடைந்தோர் குழு, உகாண்டா, மினசோட்டா ரோட்டரி சங்கங்கள் உதவியுடன் முஷாஹோ நகிவாலெ-யில் தன் ரோட்டராக்ட் சங்கத்தைத் தொடங்கினார். அதன் உறுப்பினர்கள் பண்ணை, வீடு கட்டும் திறன்களைக் கற்றுத்தந்துள்ளார்கள், மரம் நட்டுள்ளார்கள், பெண்கள் சமூக மையம் ஒன்றை அமைத்துள் ளார்கள், ஆதரவற்ற குழந்தைகளை ஏற்கும் மக்களுக்குப் போர்வைகள், மெத்தைகளை வழங்கியுள்ளார்கள். நான் அவர்களுக்குச் சொல்வது: இதை வழங்கக் காரணம், சமூகத்தில் நீங்கள் செய்யும் அனைத்தையும் நாங்கள் பாராட்டுகிறோம் என்கிறார் முஷாஹோ (29).

உதவி செய்யும் வழிகளைக் கண்டறிவதில் முஷாஹோ மிகச் சிறந்த திறமையாளர். முகாமின் முதியவர்கள் ஓரங்கட்டப்பட்டுவிட்டதாக உணர்வதை அறிந்த அவர், சில மதிய உணவு நிகழ்ச்சிகளை நடத்தினார், அந்த முதியவர்கள் தங்களுடைய முந்தைய திறமைகளை, அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளும்படி செய்தார். வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்த இளம் தஞ்சமடைந்தோர் ஒருவரோடு ஒருவர் உரையாடாததைக் கவனித்த அவர், ஒரு கால்பந்துப் போட்டியை நடத்த உதவினார். சமீபத்தில், முஷாஹோ-வின் குழு நகிவாலெ-யில் Covid-19 பரவலைத் தடுக்க 14,000 முகமூடிகள், 8,000 சோப்களைச் செய்து வழங்கியது. தாங்கள் பெறவேண்டியதைப் பெற்று, அதற்காக மகிழும் மக்களை நான் பார்க்கிறேன் என்கிறார் முஷாஹோ. நம்பிக்கையை இழந்த மக்களிடம் நாங்கள் நம்பிக்கையை உருவாக்குகிறோம்.

2018ல், நைரோபியிலுள்ள ஐக்கிய நாடுகள் ஆப்பிரிக்கத் தலைமையகம் முஷாஹோவை அழைத்தது, ரோட்டரி செயல் மக்கள்: இளம் புதுமைச் சிந்தனையாளர்கள் என்ற விருதை வழங்கிப் பெருமைப்படுத்தியது. எங்கள் தஞ்சமடைந்தோர் சமூகம், எங்கள் உள்ளூர்ச் சவால்களுக்கு உள்ளூர்த் தீர்வுகள் தேவை என்று புரிந்துகொண்டது என்று தன் பேச்சில் கூறினார் இவர். நாங்கள்



*ஜ்யூ மூன்டே (வலது) கம்பாலாவில்.*

பிச்சைக்காரர்கள் இல்லை; நாங்கள் மாற்றம், ஊக்கத்தின் தலைமுறை.''

மகெரெரெ-யில், நகிவாலெ-யில் தன்னுடைய சூழலின் ஒரு பிரதி பலிப்பைக் காண்கிறார் முஷாஹோ: அவரைச் சுற்றிப் புதுமைச் சிந்தனை கொண்ட, பல பண்பாடுகளைச் சேர்ந்த, யோசனைகள், ஆற்றல் நிறைந்த மக்கள், அமைதியைத் தடுக்கும் தடைகளை உடைக்க வழி தேடும் மக்கள். இந்தத் தோழமை முகாமில் என் பணியுடன் மிகவும் பொருந்துகிறது என்கிறார் முஷாஹோ. நான் திரும்பிச் செல்லும்போது, வெவ்வேறு சமூகங்களின் சவால்களை அவர்களுடைய இயல்புகள், நம்பிக்கைகள் அடிப்படையில் கையாள்வது எப்படி என்பது எனக்குத் தெரியும். என் கனவுகள், நம்பிக்கைகள் மகிழ்கின்றன.''

## கேதரின் பைனெ-ஒமுகிஷா

மக்கள் அமைதியாக இல்லாவிட்டால், யாரும் எங்கும் செல்ல இயலாது என்கிறார் கேதரின் பைனெ-ஒமுகிஷா (45). இச்சொற்றொடர், கம்பாலா-வைச் சேர்ந்த இந்த வழக்கறிஞருடைய சிறப்பு அம்சத்துக்கும் (முரண் தீர்த்தல், குடும்பப் பிரச்சனை களுக்கான தீர்வு) பொருந்தும், இவருடைய சொந்தப் பாதைக்கும் பொருந்தும்.

அமைதியான போக்கு, நடை முறைக்கேற்ற அணுகுமுறை கொண்ட பைனெ-ஒமுகிஷா, உகாண்டா-வின் ஆணாதிக்கம் மிக்க உலகில் வளர்ந்தார், பல முக்கியப் பொறுப்புகளை வகித்தார்.

இவை அனைத்திலும், அவருடைய அணுகுமுறை ஒன்றுதான்: அமைதிகாத்தல். கவனித்தல், பிறரை ஊக்குவித்தல், தீர்வுகளை நாடுதல். விஷயங்களை ஒரு புதிய வழியில் செய்வதற்கு மனத்தைத் திறந்துவைத்தல். அதைப் பரிசோதித்தல். அது வேலை செய்தால், ஏற்றுக் கொள்ளுதல். 2000ல், சங்கிலி இணைப்பு முன்னெடுப்பு என்ற ஒரு வெள்ளோட்டத் திட்டத்தில் இணைந்தார் பைனெ-ஒமுகிஷா. இது, குற்றவியல் நீதி அணுகலை மேம்படுத்துவதற்காகக் காவல் துறை, வழக்கறிஞர்கள், சிறைகள், நன்னடத்தைச் சோதனை அலுவலர்கள், நல அமைப்புகள், நீதித் துறையினருடைய உடனுழைப்பை ஊக்குவித்தது. இந்தத் திட்டம் மிக நன்றாக வேலை செய்ததால், நாடுமுழுக்கச் செயல்படுத்தப்பட்டது.

இப்போது, தன் தோழமையால் அந்த ஒத்துழைப்பு எண்ணத்தை இன்னும் பெரிய அளவில் செயல் படுத்தலாம் என்று நம்புகிறார் இவர். உகாண்டாவில் இப்போது சட்ட விதிமுறைக்கான மதிப்பு, மனித உரிமைகளுக்கான மதிப்பு, ஊழல் பிரச்சனைகள் பெருகியுள்ளன என்கிறார் பைனெ-ஒமுகிஷா. இவருடைய முதன்மைக் கவலை, இல்ல வன்முறை, இது பல காரணிகளால் தொடர்கிறது: பண்பாட்டு, பாலினச் சாய்வு நிலைகள், பொருளாதாரச் சிரமங்கள், இல்ல வன்முறைபற்றிய விழிப்புணர்வு இல்லாமை. இல்ல வன்முறையின் தூண்டிகள், தாக்கங்கள், அதன் சட்ட, கொள்கைக் கட்டமைப்புகளைப்பற்றிக் சமூகத் தலைவர்களுக்குக் கற்றுத் தந்தால், அதைத் தடுக்க இயலும் என்று இவர் நம்புகிறார்.

## ஃபிகிரி ந்ஜோயிசெங்கா

வளரும் வயதில் ஃபிகிரி ந்ஜோயிசெங்கா பாத்திரங்களைக் கழுவும்போதெல்லாம், அவருடைய நண்பர்கள் சிரிப்பார்கள்: நீ ஏன் பாத்திரங்களைக் கழுவுகிறாய்? அது பெண்களின் வேலை. இதற்கு அவர் எந்தப் பதிலும் சொல்லமாட்டார். அவருடைய வீட்டில் பெண்கள், பையன்கள் இருவரும் வேலை செய்வார்கள். அவருடைய தந்தை, மாற்றாந்தாய் இருவரும் சமையல், பிற வீட்டுப் பணிகளைப் பகிர்ந்து கொள்வார்கள். அது இயல்பு

## ஒரு புதிய அமைதி மையம் என்னும் பரிசு

*ஏப்ரலில், மகெரெரெ பல்கலைக்கழகம் தன்னுடைய தொடக்க அமைதித் தோழர்கள் வகுப்பை நடத்தியபோது, மத்திய கிழக்கு அல்லது வடக்கு ஆப்பிரிக்காவில் ஒரு ரோட்டரி அமைதி மையத்தைத் தொடங்க ஒட்டோ மற்றும் ஃப்ரான் வால்டெர் அறக்கட்டளை $15.5 மில்லியன் உறுதியளித்திருப்பதாக ரோட்டரி அறக்கட்டளை அறிவித்தது.*

*அமைதி பிடிபடாமல் இருப்பதாகத் தோன்றுகிற ஓர் உலகப் பகுதியில் நாம் குறிப்பிடக்கூடிய பங்களிப்பைச் செய்வது எப்படி என்று ரோட்டரி நெடுநாட்களாகச் சிந்தித்து வந்துள்ளது'' என்றார் 2020–21 ரோட்டரி அறக் கட்டளை அறங்காவலர் தலைவர் K R ரவீந்திரன். இப்போது, அந்த வாய்ப்பு நம்மைத் தேடி வந்துள்ளது. இதன்மூலம், நம் அமைதித் தோழர்களுடைய எண்ணத்தைத் தூண்டி, அமைதி, நல்லெண்ணத்தைக் கொண்டுவரும் செயலை ஆதரிக்கிற ஒரு மையத்தை நாம் உருவாக்குவோம்.*

*2024ல் இந்த அமைதி மையத்தை நிறுவுவதற்கான ஒரு கூட்டாளர் கல்வி அமைப்பை ரோட்டரி அறக் கட்டளை தேர்ந்தெடுக்கும். 2026ன் தொடக்கத்திலிருந்து அங்கு ரோட்டரி அமைதித் தோழர்கள் பயிலத் தொடங்குவார்கள் என்று எதிர்பார்க்கலாம். புதிய மையம், இந்தப் பகுதியில் அமைதியைக் கட்டமைத்தல், வளர்ச்சிப் பிரச்சனைகளில் கவனம் செலுத்தும் ஒரு தொழில்முறை முன்னேற்றச் சான்றிதழ் திட்டத்தை வழங்கும். பூத்பே ஹார்பர், மைனெ-யை அடிப்படையாகக் கொண்ட வால்டெர் அறக்கட்டளையின் பரிசு, இந்த மையத்தின் தொடக்கச் செலவுகள், இயக்கச் செலவுகளுக்கு நிதியளிக்கும். இத்துடன், ஒவ்வோராண்டும் 40 மாணவர்கள்வரை ஆதரவு அளிக்கப்படும்.*

*ஒட்டோ வால்டெர் 1907ல் ஜெர்மனியில் பிறந்தார், வழக்கறிஞராகப் பணியாற்றினார். நாஜி அரசின் கட்டுப்பாடுகளால், வால்டெர் தடை செய்யப்பட்டார். அவர் 1936ல் அமெரிக்காவில் குடியேறி நியூ யார்க்கில் வசிக்கத் தொடங்கினார். இங்கு அவருடைய சட்டப் பட்டப்படிப்பு அங்கீகரிக்கப்படாததால், வால்டெர் சான்று பெற்ற பொதுக் கணக்காளராக ஆனார், கணக்கு நிறுவனம் ஒன்றைத் தொடங்கினார்.*

*தன் தொழிலில் பல சட்டச் சிக்கல்களை எதிர்கொண்ட வால்டெர், நியூ யார்க் சட்டக் கல்வி நிறுவனத்தின் மாலை வகுப்புகளுக்குச் செல்லத் தொடங்கினார். 1954ல் அவர் J.D. பட்டம் பெற்றார். அடுத்த ஆண்டு, அவர் ஒரு சட்ட நிறுவனத்தைத் தொடங்கினார், தன் மனைவி ஃபிரான்செஸ் டூனன் வால்டெர் ஆதரவுடன் அதை 40 வழக்கறிஞர்கள் கொண்ட நிறுவனமாக வளர்த்தார். 1971ல் அவர் நியூ யார்க் ரோட்டரி சங்க உறுப்பினர் ஆனார்.*

*பிறகு, ஒட்டோ மற்றும் ஃப்ரான் தங்கள் தொண்டு அறக்கட்டளையில் கவனம் செலுத்தினார்கள், தாங்கள் நிதியளித்த நல்கைகளில் நேரடியாகப் பங்குபெறத் தொடங்கினார்கள். 2003ல் வால்டெர்கள் இறந்தபிறகு, அவர்களுடைய சட்டச் சக ஊழியர், நண்பர் ஃப்ராங்க் ஹெல்மன் அவர்களுடைய அறக்கட்டளையின் தலைவர், இயக்குநர் ஆனார். அவரும், அறக்கட்டளையின் இப்போதைய தலைவரான மார்த்தா மார்ட்டி ஹெல்மனும் ரோட்டரி அறக்கட்டளைக்கு $15.5 மில்லியன் பரிசு அளித்தலுக்கு வழிசெய்தார்கள். ஹெல்மன்கள் பூத்பே ஹார்பர் ரோட்டரி சங்க உறுப்பினர்கள் ஆவர்.*

*ஒட்டோ மற்றும் ஃப்ரானின் பணியை நினைவுகூரச் சிறந்த வழி, முரணால் பாதிக்கப்பட்ட மத்திய கிழக்கில் ரோட்டரி அமைதி மையத்தை நிறுவுவது என வால்டெர் அறக்கட்டளை உறுதியாக நம்புகிறது என்றார் மார்ட்டி ஹெல்மன். இவர் ரோட்டரி அறக்கட்டளையின் அமைதி மையங்கள் மிகப் பெரிய பரிசுகள் முன்னெடுப்புக் குழுவின் தலைவராகச் சேவையாற்றுகிறார். வால்டெர் அறக்கட்டளை என்பது ஒரு சிறிய குடும்ப அறக்கட்டளை. உலகத் தரத்திலான ஓர் அமைதி மையத்தை உருவாக்க, எங்களுக்கு ரோட்டரியின் கூட்டு தேவைப்பட்டது.''*

*ரியான் ஹைலண்ட்*

இல்லை என்கிறார் ந்ஜோயிசெங்கா. மற்ற வீடுகளைவிட என் வீட்டில் நிலைமை மிகவும் மாறியிருந்தது.'' இன்னொரு விதத்திலும் அது மாறியிருந்தது: அவருடைய தந்தை பெரும்பான்மைக் குழுவைச் சேர்ந்தவர், அவருடைய மாற்றாந் தாய் வேறு குழுவைச் சேர்ந்தவர், அவர்களுடைய திருமணம் தடை செய்யப்பட்டிருந்தது. எனினும், அவர்கள் மணந்துகொண்டார்கள் என்கிறார் அவர்களுடைய மகன், அதில் எந்தப் பிரச்சனையும் இல்லை என்பதைக் காண்பிப் பதற்காக.

ஆணாதிக்கம் மிகுந்த புருண்டி-யில் இவர்களுடைய எடுத்துக்காட்டு பெரிய தாக்கம் கொண்டுவந்தது. என் தந்தை, மாற்றாந்தாய் என்னை வளர்த்த விதம், இன்றைய என்னை உருவாக்கியது என்கிறார் ந்ஜோயிசெங்கா (36). இவர், புஜும்புரா-வை அடிப்படையாகக் கொண்ட, புருண்டி-யில் 3 பகுதிகளில் பாலின அடிப்படையிலான வன்முறைக்கு எதிராக இயங்கும் செமெரெரா என்ற இளைஞர் கூட்டமைப்பை நிறுவியவர்.

புருண்டி, காங்கோ மக்களாட்சி குடியரசு உள்நாட்டுப் போர்களால் பாதிக்கப்பட்ட குழந்தைப்பருவத்தைக் கொண்ட ந்ஜோயிசெங்கா சட்டம் படித்தார், பெண்களுக்கு ஆற்றல் அளிக்கும் அமைப்புகளில் தன்னார்வத்துடன் பணி யாற்றத் தொடங்கினார். விரைவில், அவர் ஒரு சமூகச் செயல்பாட்டாளர் ஆனார். ஸ்பார்க் நுண்நல்கைகளின் வழியாக, புருண்டியில் உள்ள பல கிராமங்களைச் சேர்ந்த கிட்டத்தட்ட 3,000 வீடுகளுக்கு ஆற்றலளிக்கும் திட்டங்களை இவர் வழிநடத்தினார். செமெரெரா-வில், 14 பேர் குழு ஒன்று 8,200க்கும் மேற்பட்ட பெண்கள், சிறுமிகளுக்கு உதவி யுள்ளது, சமூகப் பொருளாதார முயற்சிகள், தலைமைப்பண்பு ஆற்றல் அளித்தல், தவறாகப்

பயன்படுத்தப்படுதல், பாகு பாட்டால் பாதிக்கப்பட்டவர் களுக்கு இலவசச் சட்ட ஆதரவு வழங்கியுள்ளது.

ந்ஜோயிசெங்கா மாற்றத்தின் இன்னொரு முக்கிய அம்சத் தையும் சுட்டிக்காட்டுகிறார்: பாலினச் சமநிலையின்மைபற்றி ஆண்களுக்குக் கற்றுத்தருதல். கண்ணியத்துடன் வாழ்கிற, தங்கள் சமூகத்தின் மேம்பாட்டுக்குப் பங்களிக்கிற வாய்ப்பை எல்லா மக்களுக்கும் வழங்காமல் அமைதி வராது என்கிறார் இவர். நாம் பிரச்சனையின் ஒரு பகுதி, அதனால், நாம் தீர்வின் ஒரு பகுதியாகவும் இருக்கவேண்டும்.''

ந்ஜோயொசெங்கா தன் ரோட்டரி தோழமையை நிறைவுசெய்தபின், புருண்டியில் மேலும் 2 பகுதிகளுக்குத் தன் பணியை விரிவாக்கத் திட்ட மிடுகிறார், அங்கு இவர் பிற இளைஞர் களுக்கு அமைதி, இணைந்து வாழ்தல், மனித உரிமைகளைப்பற்றி வழிகாட்டுவார். சகிப்புத்தன்மை, ஏற்றுக்கொள்ளுல், எல்லாரையும் மதித்தல் ஆகியவற்றை என் தந்தை எனக்குக் கற்றுத்தந்தார் என்கிறார் இவர். புருண்டியில் இன்னும் பல ஆண்கள், பெண்கள் மாற்றத்தின் தேவையை உணரத் தொடங்குவார்கள் என்று நாங்கள் நம்புகிறோம்.''

மகெரெரெ பல்கலைக்கழகத்தில் 10 வார நிகழ்ச்சியை நிறைவு செய்தபின், அதுபற்றி அமைதித் தோழர்கள் பேசினார்கள். அல்லது, அவர்கள் பேச முயன்றார்கள். இந்தச் சிறந்த அனுபவத்தை என்னால் சொற்களால் விவரிக்க இயலாது என்றார் ருசாரெ. அமைதி இதழியலில் என் சமூக மாற்றத்தைத் தொடரவேண்டும் என்று நான் மேலும் உறுதி பெற்றுள்ளேன். ஒருவழியாக, இதற்கான வடிவமைப்பு என் மனத்தில் உருவாகிறது.''

நோய்ப்பரவல் கட்டுப்பாடு களால் ர்வாண்டா பயணம் ரத்து செய்யப்பட்டாலும், அமைதித் தோழர்களுக்குப் பல களப்பணி வாய்ப்புகள் கிடைத்தன. இந்தப் பயணங்களில்மூலம், இடமாற்றம், சுற்றுச்சூழல் பேரழிவுகளால், பாலின அடிப்படையிலான வன்முறையால் பாதிக்கப் பட்ட சமூகங்களில் அமைதி உருவாக்கல், முரண் மாற்றங்களில் எங்களுக்கு நேரடி அனுபவம் கிடைத்தது என்கிறார் பைனெ-ஒமுகிஷா.

இந்தத் தோழர்கள் உள்ளூர் ரோட்டரியன்களுடனும் உரையாடினார்கள். அவர்கள் தோழர்களுக்குக் கம்பாலா வைச் சுற்றிக் காண்பித்தார்கள், தங்கள் வீடுகள், சங்கங்களுக்கு அழைத்தார்கள் என்கிறார் ந்குடு. முரண் வரலாறு கொண்ட நாட்டில் வாழ்ந்த போதும், தாங்கள் எப்படிப் பங்கேற்பது என்பது ரோட்டரியன் களுக்குத் தெளிவாக இல்லை. அமைதி மையம் ரோட்டரியன்கள் அமைதியை முன்னிறுத்தக்கூடிய, முரணைத் தடுக்கக்கூடிய பல வழிகளைப்பற்றிக் கற்றலில் ஆர்வத்தை உண்டாக்கியுள்ளது.

தொடக்கக் கூட்டு மிக நன்றாக அமைந்தது என்கிறார் நம்பலிர்வா ந்கபாலா. இவர்கள் விரைவில் ஒருவரையொருவர் புரிந்துகொண்டார்கள். இவர்கள் தங்களுடைய ஆளுமை, பண்பாட்டு வேறுபாடுகளை மறந்து ஒருவருக் கொருவர் ஆதரவு அமைப்பாக இருந்தார்கள். அமைதித் தோழர்களுக் கிடையிலான இந்த நட்பு, 2021 முழுக்க இவர்கள் தங்கள் சொந்த நாடுகளில் முயற்சிகளை நடத்தும் போது தொடரும். மகெரெரெ-க்கு வரும் அடுத்த குழுவுக்கும் இது ஒரு மாதிரியாக இருக்கும்.

மகெரெரெ பல்கலைக்கழகத்தில் அமைதி மையம் இருப்பது ஆப்பிரிக்காவுக்குப் பெருமை என்றார் மஷாஹோ. அமைதி என்பது ஒவ்வொரு முன்னேற்றத்தின் அடிப்படை என்பதை ஆப்பிரிக்கர்கள் கற்றுக்கொள்ள, புரிந்துகொள்ள இது ஒரு மிகச் சிறந்த வாய்ப்பு.

புகைப்படங்கள்: டோபின் ஜோன்ஸ்
©ரோட்டரி

## *மற்ற மகெரெரெ அமைதித்தோழர்களைச் சந்தியுங்கள்*

**ஒலுசினா அஜாவ்**
*நைஜீரியா; பாதுகாப்பு மற்றும் நெருக்கடி மேலாண்மை*

**எலியனார் கர்ல்**
*யுனைட்டெட் கிங்டம்; உளவியல் சமூக ஆதரவு மற்றும் அதிர்ச்சிச் சிகிச்சை*

**சன்னி தாதா**
*நைஜீரியா; முரண் மாற்றம் மற்றும் வன்முறையைத் தடுத்தல்*

**ரொனால்ட் கசுலெ**
*உகாண்டா; மாற்றுத் திறனாளிகளின் உரிமைகள் மற்றும் உள்ளடக்கல் உரையாடல்*

**பிங்கீ மோதிபெடி**
*போட்ஸ்வானா; சமூக ஆற்றல் அளித்தல் மற்றும் சமூக நீதி*

**ஸ்டீஃபன் செம்பான்டெ**
*உகாண்டா; இளைஞர் பாதுகாப்பு மற்றும் சமூக சேவை மேம்பாடு*

**தாமஸ் சிட்ஹோலெ**
*ஜிம்பாப்வே; ஊடகம் மற்றும் தகவல் எழுத்தறிவு*

**நொபன்டு டெய்லர்**
*லிபேரியா; குடிமையியல் சமூக ஊடாடல் மற்றும் திறன் மேம்பாடு*

**அமினா வார்சமெ**
*சோமாலியா; பாலினச் சமநிலை மற்றும் மனித உரிமைகள் கொள்கை*

*ரோட்டரி அமைதி மையங்கள் அனைத்துக்குமான 2023–34 விண்ணப்பம் ஃபிப்ரவரி 2022ல் கிடைக்கும். விண்ணப்பம் செய்வோர் ரோட்டரி அறக்கட்டளைக்குத் தங்களுடைய நிறைவுசெய்த விண்ணப்பங்களை அனுப்புவதற்கு 15 மே 2022வரை நேரம் இருக்கும். 1 ஜூலைக்குள் மாவட்டங்கள் தங்கள் வலியுறுத்தல்களை ரோட்டரி அறக்கட்டளைக்குச் சமர்ப்பிக்க வேண்டும். மேலும் தகவல்களுக்கு, இங்கு செல்லுங்கள்:* rotary.org/peace-fellowships.

Rotary | JCI

# JCI - ன் சர்வதேச துணைத்தலைவர் ரோட்டரி சங்கத்தில் இணைந்தார்



JCI - ன் சர்வதேச துணைத்தலைவராக இருந்த கவின் குமார் குமாரவேல் அவர்கள், சர்வதேச ரோட்டரியின் தலைவர் சேகர் மேத்தா அவர்கள் முன்னிலையில் ஈரோடு சென்ட்ரல் ரோட்டரி சங்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டார். ரோட்டரியின் RI டைரக்டர் A.S. வெங்கடேஷ், EPNC DR. சகா, ரோட்டரி மாவட்டம் 3203 - ன் கவர்னர் MD.K. சண்முக சுந்தரம் மற்றும், ஈரோடு சென்ட்ரல் ரோட்டரி சங்கத்தின் தலைவர் Rtn. MD. V. ராஜமாணிக்கம் ஆகியோர் உடன் இருந்தனர்.



116 வருட சேவை பாரம்பரியம், பெருமை, நம்பகத்தன்மை, நேர்மை, நட்புணர்வு, தொழில் தொடர்பு மற்றும் உலகளவிலான தலைமைத்துவ வாய்ப்பு ஆகிய இந்த ரோட்டரியின் தனித்துவங்களே என்னை நான் ரோட்டரியில் இணைத்துக்கொள்ள காரணம் - கவின் குமார் குமாரவேல்.

ரோட்டரி உலக சாதனை படைத்த
பெருந்துறை பலதுறை
மருத்துவமனையின்
No.1. பங்களிப்பாளர்
ஈரோடு சென்ட்ரல் ரோட்டரி கிளப்.



Rtn. MD. V. ராஜமாணிக்கம்
ஈரோடு சென்ட்ரல் ரோட்டரி சங்க தலைவர்
ரோட்டரி மாவட்டம் 3203
ரோட்டரி இரத்த வங்கி - ஈரோடு சென்ட்ரல்
93630 26986, 99441 15000

ரோட்டரியில் இணையுங்கள்.. நற்சேவைக்கென...

# காற்றின் ஆற்றல்

ப்ரீதி மேஹரா

*காற்றின் ஆற்றலால் இயங்கும் ஓர் எளிய கருவி, வீட்டின் ஆற்றல் தேவைகளை நிறைவு செய்யும்.*

முந்தைய இதழில், வீட்டில் சூரிய ஒளி ஆற்றல் அமைப்பு ஒன்றை அமைப்பதற்கான, சூரியன் வழங்கும் வாழ்த்துகளில் குளிப்பதற்கான மிக எளிய வழியைப்பற்றி நாம் பேசினோம். இப்போது, மற்ற வழக்கமல்லாத ஆற்றல் மூலங்களைப்பற்றிப் பேசுவோம். இவற்றில் சில, ஒரு நகர இல்லத்துக்குப் பொருந்தாமல் இருக்கலாம், ஆனால், மற்றவை நன்கு பொருந்தும். எடுத்துக் காட்டாக, காற்று ஆற்றல். இது இப்போது வீட்டுப் பயன்பாட்டுக்கான ஒரு தெரிவாகக் கருதப்படுகிறது, இந்தப் புதுமைச் சிந்தனையை நம் வீடுகளுக்குக் கொண்டுவருவதற்காக இளம் மனங்கள் பணிபுரிந்து கொண்டிருக்கின்றன.

ஆனால், காற்று ஆற்றலைப்பற்றிப் பேசுவதற்குமுன்னால், கிராமப்புற பீகாரில் என்னுடைய அனுபவம் ஒன்றைச் சொல்கிறேன், பசுமை வழியில் செயல்படுவதற்கான ஒரு சுவையான குறிப்பாக அது இருக்கும் என்று நினைக்கிறேன். சில ஆண்டுகளுக்கு முன்னால், மேற்கு சம்பாரண் மாவட்டத்தின் சில பெரிய பகுதிகள் மின் விநியோக அமைப்பிலிருந்து விலகியிருந்தன, பல கிராமவாசிகளுக்கு மின்சாரம் கிடைக்க வில்லை. பகல் நேரத்தில் அவர்கள் மின்சாரம் இன்றிச் சமாளித்தார்கள், இரவில் மண்ணெண்ணெய் விளக்கு களை ஏற்றினார்கள் அல்லது, பெரிய கருவிகளுக்கு டீசல் ஜென்செட்களைப் பயன்படுத்தினார்கள். குழந்தைகளால் மாலை நேரத்தில் படிக்க இயல வில்லை, பொழுதுபோக்குக்கு TV இல்லை, மக்கள் தங்கள் மொபைல் களுக்கு மின்னேற்றுவதற்குப் பல மைல் தூரம் நடந்தார்கள்.

ஒருநாள், சில இளைஞர்கள் அந்தப் பகுதிக்கு வந்தார்கள், தொழில்முறை வல்லுனர்களாகிய இவர்கள், புதுப்பிக்கக்கூடிய ஆற்றலின்மூலம் இந்தப் பகுதிக்கு ஒளி வழங்கத் தீர்மானித்தார்கள். இதற்காக ஆராய்ச்சி செய்த அவர்கள், அங்கு பரவலாகக் கிடைத்த அரிசி உமியைப் பயன்படுத்தத் தீர்மானித்தார்கள். உடனடியாக, அந்தப் பகுதியில் உமியின்மூலம் ஆற்றல் பெறும் சிறிய மின் ஆலைகள் பலவற்றை அவர்கள் அமைத்தார்கள், அவற்றை எப்படி நிர்வகிப்பது என்று உள்ளூர் மக்களுக்குப் பயிற்சி தந்தார்கள், மின்சாரத்தை உருவாக்கிக் கிராமங்களுக்கு இரவில் ஒளி அளித்தார்கள். இந்த மின் ஆற்றலால் தொலைபேசிகள் மின்னேற்றம் பெற்றன, தொலைக்காட்சி கள் இயங்கின, கடைகள்கூட இரவு நெடுநேரம்வரை திறந்திருந்தன. நான் இந்தப் பகுதிக்குச் சென்றபோது, இந்த முன்னெடுப்பு மக்களுடைய வாழ்க்கைகளை எப்படி மாற்றியது என்பதை நேரடியாகக் கண்டேன்.

காலப்போக்கில், கிராம மக்களுடைய தேவைகள் கூடின, அவர்கள் நாள்முழுவதும் மின் சாரத்தை எதிர்பார்த்தார்கள். இதனால், அந்த இளைஞர்கள் ஒரு கலவை அமைப்பை உருவாக்கினார்கள்: பகல் நேரத்தில் சூரிய அமைப்பின் வழியாக மின்சாரம், இரவில் உமி வழியாக மின்சாரம். அந்தப் பகுதியில் வேலைக்குச் செல்லாமல் இருந்த பெண்களுக்கு, உமியில் எஞ்சும் பகுதியைக் கொண்டு ஊதுவத்தி களை உருவாக்கும் தொழிலை இவர்கள்



கற்றுத்தந்தார்கள், அதன் மூலம் அவர்களுக்கு ஒரு வாழ்வாதாரத் தையும் உருவாக்கினார்கள். இன்று, ஹஸ்க் பவர் சிஸ்டம்ஸ் என்ற அந்த நிறுவனம் பிற மாநிலங்கள், நாடுகளுக்கும் தன்னுடைய வீச்சை விரிவாக்கியுள்ளது. சவால்கள் இருந்தபோதும், அது தன்னுடைய புதுப்பிக்கக்கூடிய ஆற்றல் திட்டத்தைத் தொடர்ந்து நிறைவேற்றுகிறது.

இந்தக் கதை, யோசனைகளின் ஆற்றலைப் படம் பிடித்துக் காண்பிக்கிறது, தூய ஆற்றலின் வழியாகப் பிரச்சனையைத் தீர்க்கும் முன்னெடுப்பை விவரிக்கிறது. அதேபோல், வீடுகளில் காற்று ஆற்றல் அமைப்புகளை அமைக்கும் சவாலைக் கையில் எடுத்துக் கொண்டுள்ள இளைஞர்கள் உள்ளார்கள். ஏனெனில், கடற்கரையோரப் பகுதிகள், மலைப் பகுதிகள், காற்றின் விரைவு நன்றாக உள்ள இடங் களிலெல்லாம் இதன் மிகுந்த சாத்தியத்தை அவர்கள் காண்கிறார்கள். கேரளத்தைச் சேர்ந்த அருண், அனுப் ஜார்ஜ் என்ற இரு சகோதரர்கள் தங்களுடைய சொந்தத் தயாரிப்பை உருவாக்கியுள்ளார்கள், இது 2019ல் UN புதுமைச் சிந்தனை மாநாட்டில் இடம்பெற்றது. அவர்கள் “இந்தியாவில் செய்யப்பட்ட”, வழக்கமான மின் விநியோக அமைப்பிலிருந்து விலகிய, 1kW அவதார் சிறு காற்று விசையாழியைத் தொடக்க நிலையிலிருந்து உருவாக்கு கிறார்கள். இது, 5.5 ட்/ண் (சராசரிக்) காற்று விரைவுகளில் நாள்தோறும் 5kWh வெளியீட்டை வழங்குகிறது, இதைப் பெரிய அல்லது சிறிய கூரைகள் எதில் வேண்டுமானாலும் நிறுவலாம், ஏனெனில், இதற்கு இணையான சூரிய ஒளி அமைப்புக்குத் தேவைப்படும் இடத்தில் 25% இருந்தால் இதற்குப் போதும்.



அவன்ட் கார்ட் இன்னொ வேஷன்ஸ் CEOஆன அருணுடன் நான் இந்தப் பத்திக்காகப் பேசினேன், 5.5 m/s சராசரிக் காற்று விரைவில் நாள்தோறும் 5kWhI உருவாக்கும் அவதார்-1ஆல் தலா 10W கொண்ட 14 LED விளக்குகள், தலா 50W கொண்ட இரண்டு மடிக்கணினிகள், இரண்டு LED TVக்கள் (100W), 165 லிட்டர் குளிர்பதனப் பெட்டி, தலா 75W கொண்ட நான்கு மின்விசிறிகள் மற்றும் ஒரு நீர்த் தூய்மைப்படுத்தி (100W) ஆகியவற்றுக்கு மின்னாற்றலை வழங்க இயலும் என்றார் அவர். இன்னும் மேம்பட்ட ஆற்றலை உருவாக்குகிற, நாளொன்றுக்கு 25 kWh வரை செல்கிற வேறு மாதிரி களும் உள்ளன. நாடுமுழுவதும் பல இடங்களில் (அடுக்கக வீடுகள், பண்ணைகள், இந்திய ராணுவத்துக்காக லே-யில்கூட) அவதார் நிறுவப்பட்டுள்ளது.

சூரிய ஒளியுடன் ஒப்பிடும் போது காற்றின் நன்மைகளை அருண் வலியுறுத்தினார்: காற்று பகலிலும் இரவிலும் மின்சாரத்தை உருவாக்குகிறது, இதன் இடப் பயன்பாடு குறைவு, செயல்திறன் மிகுதி, மின்கலன்கள் நீண்ட நாள் உழைக்கும், பராமரிப்பு குறைவு, மழைப் பொழிவு பனிப் பொழிவு அல்லது மேகங்களால் பாதிக்கப்படாது. கூரைகளின்மீது நிறுவப்படுகின்ற சூரிய ஒளி அமைப்புகளுடன் அவதார் எளிதில் போட்டியிடுவதாக இவர் உணர்கிறார், ஏனெனில், இதன் விலை ரூ.60,000ல் தொடங்குகிறது, கட்டுப்படியாகும் நிலையில் அமைகிறது.

அதே நேரம், சந்தையில் வேறு பிராண்ட்களும் உள்ளன, காலநிலை மாற்றத்துக்கான ஐக்கிய நாடுகளின் அரசுகளுக்கு இடையிலான குழு சமீபத்தில் மனித குலத்துக்கான சிவப்பு அடையாள எச்சரிக்கையை வெளியிட்டுள்ளது. இதைத் தொடர்ந்து, மாற்று ஆற்றல் மூலங்கள் மிகுந்த கவனத்துக்கு வந்துள்ளன. இந்த எச்சரிக்கையின் நேரடிப் பொருள், நாடுகளும் குடிமக்களும் காலநிலைப் பேரழிவைத் தடுப்பதற்காக உடனடியாகச் செயல்படவேண்டும்.

*ஆசிரியர், சுற்றுச்சூழல் பற்றி எழுதுகிற மூத்த இதழாளர்.*

இசையும் & இனிமையும்

# கிஷோரி அமோன்கர்:

(1932–2017)

# புரியாத புதிர்!

V ராமநாராயணன்



“கீத் கயா பதரோன் நீ” இந்த அற்புதமான பாடல் 1960களில் இதே பாடலின் பெயரிலான ஹிந்திப்படத்தில் வந்தபோது இதைப் பாடியது யார் என்று அடையாளம் காண முற்பட்டபோது இது ஆஷா போஸ்லே குரலாக அல்லது கீதா தத் குரலாக இருக்கலாம் என நினைத்து ஆச்சரியப்பட்டேன். ஆனாலும் குரலில் சிறிது வித்தியாசம் இருந்ததால் என்னாலேயே ஒரு முடிவுக்கு வர முடியவில்லை. கீதா தத் இன்னும் உயிருடன் இருக்கிறாரா என்பதுகூட எனக்குத் தெரியாது. ஹிந்தி படஉலகில் இசைக்குயில் லதா மங்கேஷ்கராக இருக்குமோ என்றால் அந்தக் காலத்தில் என்னால் பதிலைத் தேடி கூகுள் செய்ய முடியவில்லை. நான் ஒரு காரியம் செய்தேன். அதாவது வானொலிக்கு அருகில் உட்கார்ந்து விவிதபாரதியின் பாடல்களைக் கேட்பதற்காக காத்திருந்தேன். நான் அதற்காக நீண்ட நேரம் காத்திருக்கவில்லை. ஒருவாரத்தில் அதற்கான விடை கிடைத்தது. அந்தப் பாடலைப் பாடியவர் கிஷோரி அமோன்கர். அந்தப் பெயரே நான் கேட்டதில்லை. ஆனால், நான் அந்தப் பாடலால் ஈர்க்கப்பட்டேன். ஒரு அற்புதமான புதிய பின்னணி பாடகரின் குரலாக அது இருந்தது.

கிஷோரி அமோன்கர் ஒரு வழக்கமான பின்னணிப் பாடகர் அல்ல என்பதைப் புரிந்துகொள்ள எனக்கு இரண்டு வருடங்களானது. அவர் ஒரு சிறந்த பாரம்பரிய கர்நாடக இசைப் பாடகர், ஜெயப்பூர் கரானா பாடல்களுக்கு பெயர்போன மொகுபாய் குர்டிகரின் மகள் என்பதும், தாயார்தான் அவருக்கு

முதல் குரு என்பதும் பின்னர் தெரியவந்தது. அவர் ஒரு சிறந்த கரானா பாடகர் என்பதை மோகன் நட்கர்னி மற்றும் தீபக் ராஜா போன்றவர்களின் எழுத்துகளின் மூலம் தெரிந்துகொண்டேன். ராஜாவின் கூற்றுப்படி கிஷோரி அமோன்கர் வல்லமைமிக்க இசை க்கலைஞராக மட்டுமல்ல, காதல் இயக்கத்தின் முக்கிய சிந்தினையாளராகவும் இருந்தார். அவர் ஆங்கிலம் உள்ளிட்ட மூன்று மொழிகளில் புலமை பெற்றிருந்தார். அவரிடம் இசைக்கலை மற்றும் அழகியல் துறையில் தனி நூலகமே இருந்தது.



*இசையமைப்பாளர் பண்டித் ஹரிப்ரசாத் சௌராசியாவுடன்*



இசைக் கச்சேரி மேடையைப் போலவே, கருத்தரங்குகளிலும் பார்வையாளர்களை மயங்கவைக்கும் அளவுக்கு அவரது பேச்சுகள் இருந்தன. கிஷோரி அமோன்கருக்கு சினிமாவில் அதிக நாட்டம் இருந்தாலும், அவருடைய தாயார் அவர், அதில் முழுமையாக இறங்கி விடாமல் தடுத்து நிறுத்தி விட்டார்.

என்னைக் கவர்ந்த கிஷோரி அமோன்கரின் அடுத்த பாடல் பூபாலி ராகத்தில் அமைந்த “பாண்டிஷ் சஹேலா ரே” என்ற பாடல். அவருக்கு பிடித்த பாகேஷ்ரீயுடன் இணைந்த பாடல். இந்த பாடல் தலைமுறை தலைமுறையாக ரசிகர் களை கட்டிப்போடும் பாடலாகும். அவரது வழக்கமான கரானா பாடல்களைவிட இது வித்தியாசமான முறையில் அமைந்திருந்தது. விதிகளை மீறி பாடியதாக அவர் மீது குற்றச் சாட்டுகளும் எழுந்தன. ஆனால், அதை அவர் மறுத்தார். ராகத்தின் இலக்கண எல்லைகளை மீறாமல், எந்தத் தடையும் இல்லாமல் அதன் அழகு குலையாமல் வித்தியாசமாகப் பாடுவதில் எந்த தவறும் இல்லை என்று அவர் வாதிட்டார். இசைக் கலைஞர்கள் முற்றிலும் சுதந்திரமாக இருக்க வேண்டும் என்று அவர் விரும்பினார்.

கிஷோரியின் சஹேலா ரேயின் பாடலை அவருடையை மென்மையான குரலுக்காக நான் விரும்பினாலும், அவர் அதற்கு காதல் நயத்துடன் அளிக்கும் விளக்கமும் எனக்கு பிரபல கர்நாடக இசைக் கலைஞர்களான மகாராஜபுரம் விஸ்வநாதய்யர் மற்றும் M L வசந்தகுமாரியை நினைவுபடுத்தியது. எல்லாவற்றுக்கும் மேலாக 1950களில் வெளிவந்த பாஹிகி சுதியான் படத்தில் லதா மங்கேஷ்கர் பாடிய யோதிகலஷ்சால்கி பாடலை நினைவு படுத்தியது.

சமீபகாலமாக

*கிஷோரி ஓர் இசைக்கலைஞராக உருவானபோது ராகங்களை உணர்வுபூர்வமாக பாடவேண்டும் என்று விரும்பினார். ராகத்தை உணர்வுபூர்வமாக பாடாவிட்டால் அதில் ஆழம் இருக்காது என்பது அவரது கருத்தாகும்.*



*சந்தூர் வித்வான் சிவகுமார் சர்மாவுடன்.*

*கச்சேரிக்கு சில மணி நேரங்களுக்கு முன்னால் தனி அறையில் அவர் பாடலைத் தொடங்கியவுடன் ராகங்களை இசையுடன் ஒருங்கிணைப்பதில் முழு கவனம் செலுத்துவார். ரசிகர்களோ அல்லது வேறு நபர்களோ அந்த சமயத்தில் குறுக்கிடுவதை அவர் விரும்பமாட்டார்.*



பன்முகத்தன்மை கொண்ட ஸ்ரீராம் பரசுராமன் பூபாளம், மோகனம் ராகங்களை அழகாக வெளிப்படுத்தும் விதத்தை நினைவு படுத்தியது. கிஷோரி ஓர் இசைக்கலைஞராக உருவானபோது ராகங்களை உணர்வுபூர்வமாக பாடவேண்டும் என்று விரும்பினார். ராகத்தை உணர்வுபூர்வமாக பாடாவிட்டால் அதில் ஆழம் இருக்காது என்பது அவரது கருத்தாகும். இசை என்பது வெறும் தொழில்நுட்பம் சார்ந்ததாக இல்லாமல் தனித்துவமான ஆளுமையைக் கொண்டிருக்க வேண்டும் என்பார். கிஷோரி அமோன்கரின் பாடல்களை கேட்பவர்கள், அவரது மேடைக் கச்சேரிக்கு செல்வதை வழக்கமாகக் கொண்டிருப்பவர்கள் ராஜாவின் கருத்துக்கு உடன்படுவார்கள்.

கச்சேரிக்கு சில மணி நேரங்களுக்கு முன்னால் தனி அறையில் அவர் பாடலைத் தொடங்கியவுடன்

ராகங்களை இசையுடன் ஒருங்கிணைப்பதில் முழு கவனம் செலுத்துவார். ரசிகர்களோ அல்லது வேறு நபர்களோ அந்த சமயத்தில் குறுக்கிடுவதை அவர் விரும்பமாட்டார். அவரது கவனம் எல்லாம் ராகங்களை ஒருங்கிணைப்பதிலேயே இருக்கும். சாதனை என்பது புனிதமானது. அது வெறும் பயிற்சி மட்டும் அல்ல, இசையோடு ஒன்றிவிட வேண்டும் என்பார். அதேபோல குரு என்பவர் வழிகாட்டி, மற்றும் ஆசான். குரு வழியைத்தான் காட்டுவார். அதன்பிறகு திறமையை நாம்தான் வெளிப்படுத்த வேண்டும் என்பார். மேடையில் தன்னை மறந்து பாடுவது என்பது எப்போதுமே எளிதானதாக இருக்காது. எந்த ஒரு நிகழ்ச்சியானாலும் அவர், தன்னை தயார்படுத்திக் கொள்வதற்கு நீண்ட நேரம் எடுத்துக் கொள்வார். மேலும் கச்சேரியில் ஸ்ருதி சுத்தமாக பாட வேண்டும் என்று நினைப்பார். அப்படி அவர் செய்ய நினைக்கும்போது சில விளக்கங் களையும் கொடுப்பார். அந்த சமயங்களில் பார்வை யாளர்களுக்கு குறிப்பாக அவருடைய ரசிகர்களுக்கு பொறுமையே போய்விடும். ஆனால், அவர் முற்றிலும் அதை சிறப்பாகச் செய்யும் போது ஆனந்தத்துடன் அதை ரசிப்பார்கள். அதன் பிறகு யார் புகார் செய்வார்கள்?

மீண்டும் தீபக் ராஜாவின் மேற்கோளை கேட்டவுடன், கிஷோரி அமோன்கரின் பாடலை கேட்பவர்கள் தனிமை உணர்வில் ஆழ்ந்து விடுவார்கள். அந்த தனிமையின் அழகு தாங்கக்கூடியதாகவும், இசையுடன் இழைந்த தாகவும் இருக்கும். மேலும் மேலும் கேட்க வைப்பதாகவும் இருக்கும்.

இந்த தனிமையும் ஒரு பெண் வளரும்போது தனது தாய்க்கு ஏற்பட்ட அவமானத்தை பார்க்கும் போதெல்லாம் ஏற்பட்ட வலியையும், வேதனையையும் அவரை இந்த நிலைக்கு ஆளாக்கியுள்ளது. ஒரு முறை அவர் பெங்களூருக்கு கச்சேரிக்காக செல்லும்போது ஏற்பாட்டாளர்களிடம் எனக்கு மெர்சிடிஸ் பென்ஸ் கார் வேண்டும், தங்குவதற்கு ஐந்து நட்சத்திர ஹோட்டலில் சொகுசான அறை வேண்டும் என்று கிஷோரி அமோன்கர் வற்புறுத்தினார். மேலும் நிகழ்ச்சியை தொடங்குவதற்கு முன் தம்புராவில் இசையை சீரமைக்க, பக்க வாத்தியங்களில் ஒலியை சீரமைக்க அதிக நேரம் எடுத்துக் கொள்வார். ரசிகர்களின் பொறுமையை சோதிக்கும் அளவுக்கு



*கிஷோரி அமோன்கரின் பாடலை கேட்பவர்கள் தனிமை உணர்வில் ஆழ்ந்துவிடுவார்கள். அந்த தனிமையின் அழகு தாங்கக்கூடியதாகவும், இசையுடன் இழைந்ததாகவும் இருக்கும்.*



*ரசிகர்களின் பொறுமையை சோதிக்கும் அளவுக்கு அவரது செயல்பாடுகள் இருக்கும். ஆனாலும், அவரது இசை நிகழ்ச்சி ரசிகர்களுக்கு முழு விருந்தாக இருக்கும்.*



அவரது செயல்பாடுகள் இருக்கும். ஆனாலும், அவரது இசை நிகழ்ச்சி ரசிகர்களுக்கு முழு விருந்தாக இருக்கும். தனிப்பட்ட முறையில் அவரது இசை திறமையை வெளிப்படுத்துவது போலவும், பிரபா ஆத்ரே அல்லது வீணை சஹஸ்ரபுத்தே போல ஓங்கி ஒலிக்கும். சில சமயங்களில் கங்குபாய் ஹங்கல், கர்நாடக இசைக்கலைஞர்களான M S சுப்புலெட்சுமி, D K பட்டம்மாள், M L வசந்தகுமாரி அல்லது T பிருந்தாவுக்கு இணையாக இருக்கும். என்னுடைய இந்த பார்வை நிச்சயமாக அவரது ரசிகர்களால் ஏற்றுக்கொள்ளப்படாமல் இருக்கலாம்.

கிஷோரி அமோன்கர் நான்கு ஆண்டுகளுக்கு முன்பு நம்மை விட்டுப் பிரிந்துவிட்டார். தனது திறமையான இசைக்காக பத்ம விபூஷண் உள்ளிட்ட பல்வேறு விருதுகளையும் பெற்றுள்ளார். இந்திய அரசு தனக்கு பாரத் ரத்னா விருது வழங்கி கௌரவிக்கவில்லை என்ற கோபத்தை தனது நெருக்கமான ரசிகரிடம் ஒரு முறை தனது மனக்குமுறலை வெளிப்படுத்தியுள்ளார். தான் மதிக்கும் கலைஞர்களிடம் அங்கீகாரம் பெறுவது வேறு விஷயம். அதுதான் உண்மையானது என்று ஜாகிர் ஹுசைனுடன் ஒரு முறை சொல்லியதைக் கேட்டதும் அவர் வெட்கத்துடன் புன்னகைத்தார். நான் அவரை விரும்புகிறேன் என்று மிகவும் காதல்வயப்பட்டு கிஷோரி அமோன்கர் கூறினார்.



*தபலா வித்வான் ஜாகீர் ஹுசைனுடன்.*

வடிவமைப்பு:
S கிருஷ்ணப்ரதீஷ்

# உறுப்பினர் பரிந்துரை விருதுப் பின்

இந்த ஆண்டு, நம்முடைய கவனம் உறுப்பினர் எண்ணிக்கையை வளர்த்தலில் உள்ளது, நம் இலக்கு, 1.3 மில்லியன் உறுப்பினர்கள். RI தலைவர் சேகர் மேத்தா EOBO (ஒவ்வொருவரும் ஒவ்வொருவரை அழைத்து வாருங்கள்) பரப்புரையைத் தொடங்கியுள்ளார்; உறுப்பினர்கள், சங்கங்கள் மற்றும் மாவட்டங்களின் செயல்திறன் அடிப்படையில் அவற்றுக்கு உறுப்பினர் விருதுப் பின்களை ரோட்டரி இந்தியா சிறப்பாக வடிவமைத்துள்ளது.

இதற்காக, ஒவ்வொரு சங்கமும் தலைவர்/செயலர் மூலம், *Rotary.org*லிருந்து *Rotaryindia.org*க்கு உறுப்பினர் எண்ணிக்கைத் தரவு ஒத்திசைவை இயக்கவேண்டும், இதற்கு அவர்கள் *rotary.org*ல் *Roster on Wheels* தேர்ந்தெடுக்க வேண்டும்.

**Who can sync data:** Club president/ secretary/executive secretary is authorised to enable this feature in *rotary.org*

**Steps for data sync**

1. Login to *www.rotary.org*
2. Manage> Club & District Administration > Club Administration
3. Scroll down to > Club & Member Data > Designate a club management vendor
4. Scroll down > Club Management Systems > Edit
5. Edit Club Management> Scroll Down> Add Vendor
6. Select Vendor > Drop down list > Roster on wheels > Vendor Access Level > View only access> Club Intends to use Vendors service
7. Scroll Down>tick the box of Certification > Click 'I Agree'

ஏதேனும் சிரமம் இருந்தால், தயவு செய்து, *support@rotaryindia.org*ல் தொடர்புகொள்ளுங்கள்.

**குறிப்பு:**சங்கத்தலைவர் *www.rotaryindia.org*ல் உள்நுழையும்போது, சங்கத்தின் ரோட்டரி ஒத்திசைவு இயக்கப்பட்டுள்ளதா, முடக்கப் பட்டுள்ளதா என்பதை டாஷ்போர்டில் பார்க்கலாம்.

**உறுப்பினர் பரிந்துரை விருதுப் பின்**

தன்னுடைய சங்கம் அல்லது மாவட்டம் அல்லாத இன்னொரு சங்கம் அல்லது மாவட்டத்துக்கு ஓர் உறுப்பினரை முதன்முறையாகப் பரிந்துரைக்கும் ரோட்டரியன்கள் ஒரு பின் மூலம் அங்கீகரிக்கப் படுவார்கள். உறுப்பினர் பரிந்துரை விருதுப் பின்னைக் கோருவதற்கான இணைப்பு: *https://eobo.rotaryindia.org/*. ரோட்டரியன், அவருடைய கூட்டாளர் அல்லது ரோட்டராக்டர் இந்த இணைப்பைப் பயன்படுத்திப் பரிந்துரை விருதைக் கோரலாம்

**உறுப்பினர் பரிந்துரை விருதுப் பின்னைப் பெறும் படிநிலைகள்**

ரோட்டரியன் தான் பரிந்துரைத்த நபரை, மாவட்டம், சங்கத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும், சங்கத்திலிருந்து முறையான ஆதரிப்பவரை மூன்று முயற்சி களுக்குள் தேர்ந்தெடுக்கவேண்டும்.■


THE ALL-MEMBER SURVEY IS COMING IN NOVEMBER

This is your chance to tell us what you like, what you don't like, and what you want from your Rotary membership.

To make sure you receive the survey, update your email address at my.rotary.org/profile/me.

WE WANT YOUR FEEDBACK

Rotary

# சிறுவயது உணவு நினைவுகளில் மூழ்கும் சமையல் வல்லுனர்கள்

சர்மிளா சாந்த்

*சமையல் வல்லுனர்கள் பழைய நினைவுகளைத் திரும்பிப் பார்க்கிறார்கள், ஆர்வமூட்டும் சமையல் குறிப்புகளின் வடிவத்தில் தங்கள் அன்புக் கதைகளைப் பகிர்ந்து கொள்கிறார்கள். அவர்களுடைய நினைவுகளையும், சுவையான வீட்டு உணவுகளையும் அனுபவியுங்கள்.*

## நோலென் குர் பாயெஷ்



**சுவரஞ்சன் பானர்ஜி,**
*செயல்நிலைச் சமையல் வல்லுனர்,*
*கோபாலன் மாலில் உள்ள கிராண்ட் மெர்குரெ பெங்களூரு*

வளரும் வயதில் எனக்கு மிகவும் பிடித்த இனிப்பு உணவு, நோலென் குர் பாயெஷ்தான். எனக்கு மிகவும் பிடித்த சமையல் நினைவுகளில் ஒன்று, என் தாய் இந்தப் பாயெஷைச் சமைப்பதைப் பார்ப்பது. இது குளிர்காலத்தில்தான் கிடைக்கும் என்றபோதும், ஆகஸ்ட் மாதத்தில் வரும் என்னுடைய பிறந்தநாளுக்காக அதில் ஒரு சிறு ஜாடியை என் தாய் பாதுகாத்து வைப்பார். ஒருவருடைய மகிழ்ச்சிக்காகச் சற்றுக் கூடுதலாக உழைப்பதன் முக்கியத்துவத்தை அவர் எனக்குக் கற்றுத்தந்தார். நான் என்னுடைய சமையல் பயணத்தைத் தொடங்கும்போது, என்னுடைய விருந்தினர்களுக்கு நான் செய்ய விரும்பியதும் அதைத்தான்.

**உட்பொருள்கள்**

- பால்-1 லிட்டர்
- கோபிந்தோபோக் அரிசி-50 கிராம்
- அடர் பனை வெல்லம்-1/2 கோப்பை
- ஏலக்காய்-1–2 காய்கள்
- பிரியாணி இலை-1 இலை
- முந்திரிப் பருப்பு மற்றும் உலர் திராட்சை-10–12
- நெய்-1/2 தேக்கரண்டி

**செய்முறை:**

- அரிசியை நீரில் கழுவி ஊற வையுங்கள். 30 நிமிடங்களுக்குப் பிறகு, அரிசியை வடிகட்டிப் பரப்பி உலரச் செய்யுங்கள்.
- பாத்திரத்தில் 1/2 தேக்கரண்டி நெய் விட்டுச் சூடாக்குங்கள், உலர் அரிசியைச் சேர்த்து 1 நிமிடம் வறுங்கள், ஓரமாக வைத்துவிடுங்கள்.
- அடிப்பகுதி கனமான பாத்திரத்தில் பாலைக் காய்ச்சி அதனுடன் ஏலக்காய், பிரியாணி இலையைச் சேருங்கள், குறைந்த வெப்பத்தில் 5 நிமிடம் கொதிக்கவையுங்கள்.
- அரிசியைப் பாலில் சேருங்கள், அரிசி நன்கு வேகும்வரை குறைந்த வெப்பத்தில் சமையுங்கள். பால் அடிப்பகுதியில் ஒட்டிக் கொள்ளாதபடி அவ்வப்போது கிளறுங்கள்.
- அரிசி முழுக்கச் சமைக்கப்பட்டு மென்மையாக ஆனதும், முந்திரிப் பருப்பு, உலர் திராட்சை சேருங்கள், வெல்லத்தை சேருங்கள். நன்கு கலக்குங்கள், நல்ல பதத்தில் வரும் வரை 5–10 நிமிடங்களுக்குச் சமைத்து விட்டு அடுப்பை அணைத்துவிடுங்கள்.
- பாயசம் முழுமையாக ஆறியபிறகு, அறை வெப்பநிலையில் அல்லது குளிர்வாகப் பரிமாறுங்கள்.

## சட்டு பராத்தா

**நீலப் சகாய்,**
*செயல்நிலைச் சமையல் வல்லுனர், நோவோடெல் கொல்கத்தா ஹோட்டல் அன்ட் ரெசிடென்சஸ்*

என் தாய்க்கு வழக்கமான இந்திய உணவுகளில் தன்னுடைய சொந்தப் புதுமையைச் செய்யும் திறமை இருந்தது. எங்கள் குடும்பத்தில் அவர் மிக நன்கு அறியப்பட்டிருந்த, மிகப் புகழ் பெற்ற உணவுவகைகளில் ஒன்றை நான் இங்கு பகிர்ந்து கொள்கிறேன்: சட்டு பராத்தா மற்றும் உருளைக் கிழங்கு தக்காளி சப்ஜி.

**உட்பொருள்கள் மாவுக்கு**

- 100 கிராம் கோதுமை மாவு
- 100 கிராம் அனைத்துப் பயன்பாட்டு மாவு
- 1/2 தேக்கரண்டி உப்பு
- 1/2 தேக்கரணி ஓம விதைகள்
- 2 மேசைக்கரண்டி எண்ணெய்
- வெதவெதவென்ற நீர், மாவு பிசையத் தேவையான அளவு

**உள்ளே வைக்கும் பொருளுக்கு**

- 1/2 கோப்பை வறுக்கப்பட்ட பழுப்புக் கொண்டைக்கடலை மாவு
- 1 சிறு வெங்காயம், நன்கு நறுக்கப்பட்டது
- 1 அங்குலம் இஞ்சி, துருவப்பட்டது
- 1 தேக்கரண்டி பூண்டு, நன்கு நறுக்கப்பட்டது
- 2 பச்சை மிளகாய், நன்கு நறுக்கப்பட்டது
- 1/2 மேசைக்கரண்டி மாங்காய் ஊறுகாய், குவிக்கப்பட்டது
- 1 தேக்கரண்டி கடுகு எண்ணெய் உப்பு, தேவையான அளவு
- மேசைக்கரண்டி தண்ணீர் எண்ணெய், பராத்தாக்களைப் பொறிக்க

**செய்முறை:**

மாவைத் தயாரிக்க, அனைத்து உலர் உட்பொருள்களையும் அளவிடுங்கள், பெரிய கிண்ணத்தில் போட்டு நன்கு கலந்து விடுங்கள். எண்ணெய், நீரைச் சேர்த்து மென்மையான மாவை உருவாக்குங்கள். மாவின் மீது ஒரு சமையலறைத் துண்டு அல்லது மஸ்லின் துணியை மூடி அரை மணி நேரம் அப்படியே விட்டுவிடுங்கள்.

உள்ளே வைக்கும் பொருளைத் தயாரிக்க, வறுக்கப்பட்ட கொண்டைக் கடலை மாவை ஒரு கிண்ணத்தில் எடுத்துக்கொள்ளுங்கள், நறுக்கிய வெங்காயம், பூண்டு, துருவிய இஞ்சி, பச்சை மிளகாயைச் சேருங்கள். நன்கு கலக்குங்கள். உப்பு, நறுக்கப்பட்ட கொத்தமல்லி, மாங்காய் ஊறுகாய், கடுகு எண்ணெயைச் சேருங்கள்.

பராத்தா தயாரிக்க, மாவை ஒரு நிமிடம் பிசையுங்கள், பின்னர் அதைச் சம அளவுகளாகப் பிரியுங்கள். ஒவ்வொரு பகுதியையும் நம்முடைய கைகளின் உள்ளங்கைக்கு நடுவில் மெல்ல உருட்டுங்கள், மேற்பகுதியில் அழுத்தம் தந்து தட்டையான உருண்டைகளாக ஆக்குங்கள். உள்ளே வைக்கும் பொருளை நான்கு பகுதிகளாகப் பிரியுங்கள். மாவின் நீட்டப்பட்ட வட்டத் தட்டின் மையத்தில் உள்ளே பொருளை வைத்து. எல்லாப் பக்கங்களையும் சேர்த்து, நன்கு மூடுங்கள். பராத்தா இடும் பலகையில் சிறிது கோதுமை மாவைத் தூவுங்கள். உள்ளே பொருள் வைத்த மாவைக் கவனமாக இட்டு தடிமனான பராத்தாவாக ஆக்குங்கள்.

பாத்திரம் சூடானதும், பராத்தாவை அதில் இடுங்கள், இரு பக்கங்களிலிருந்தும் உலர்ந்த முறையில் வறுங்கள். மேலேயும் சிறிது எண்ணெயைத் தூவி, அதைப் பரப்புங்கள். பராத்தாக்களை இரு பக்கங்களிலிருந்தும் ஆழம் குறைவான முறையில் பொறியுங்கள். பராத்தா நன்றாகச் சமைக்கப்பட்டு இரு பக்கங்களிலும் தங்கப் புள்ளிகள் தோன்றும் வரை, மிதமான வெப்பத்தில் அதைச் சமையுங்கள்.

பராத்தாவை உருளைக் கிழங்கு சப்ஜியுடன் ருசித்துச் சாப்பிடுங்கள்.



## உருளைக் கிழங்கு சப்ஜி

**உட்பொருள்கள்:**

- 500 கிராம் உருளைக் கிழங்கு
- 1 தேக்கரண்டி சீரகம்; நறுக்கப் பட்ட இஞ்சி; 1 தேக்கரண்டி மஞ்சள்; 2 தேக்கரண்டி சிவப்பு மிளகாய்த் தூள்; 1 தேக்கரண்டி கொத்தமல்லி விதைத் தூள்
- 100 கிராம் நறுக்கப்பட்ட தக்காளி உப்பு, தேவையான அளவு
- 2 மேசைக்கரண்டி நறுக்கப்பட்ட கொத்தமல்லி
- 50 மிலி கடுகு எண்ணெய்

**செய்முறை:**

உருளைக்கிழங்கை கழுவி, ஒரு பக்கமாக வைத்துவிடுங்கள். பாத்திரத்தில் எண்ணெயைச் ஊற்றி சூடாக்குங்கள், முழுச் சீரகத்தையும், நறுக்கிய இஞ்சியுடன் சேர்த்துச் சிறிது நேரம் வறுங்கள். இஞ்சி பொன்னிறமாக மாறும்போது தக்காளி, உப்பு, பொடியாக்கப்பட்ட அனைத்து மசாலாக்களையும் சேருங்கள். எண்ணெய் பரப்பில் மிதக்கும் வரை மசாலாவைச் சமையுங்கள்.

இப்போது, உருளைக் கிழங்கைச் சேர்த்து 5 நிமிடம் கலக்குங்கள். தேவையான அளவு நீரைச் சேர்த்து பாத்திரத்தை மூடிவிடுங்கள். உருளைக் கிழங்கு போதுமான அளவு மென்மையாகி, உடையக்கூடிய நேரம் வரை சப்ஜியைச் சமைத்து நறுக்கப்பட்ட கொத்தமல்லியை சேருங்கள்.

## லசூனி பாலக் பனீர்



**கௌரவ் லாவ்னியா**
*செயல்நிலைச் சமையல் வல்லுனர், ஷெரட்டன் புது தில்லி ஹோட்டல்*

மசாலாக்களை அரைப்பதில் தொடங்கி, அந்தப் பருவத்துக்கான காய்கறிகளை வாங்குவதுவரை தான் சமைக்கும் உணவின்மீது என் தாய் காண்பிக்கும் பேரார்வத்தை நான் எப்போதும் கவனித்துள்ளேன்.

**உட்பொருள்கள்**

- 30 கிராம் நெய்
- 2 கிராம் சீரகம்
- 2 கிராம் முழுச் சிவப்பு மிளகாய்
- 40 கிராம் பனீர், துண்டாக்கப்பட்டது
- 1 கிராம் பெருங்காயம்
- 30 கிராம் நறுக்கப்பட்ட பூண்டு
- 30 கிராம் நறுக்கப்பட்ட வெங்காயம்
- 3 கிராம் கருப்பு மிளகுத் தூள்
- 2 கிராம் சீரகத் தூள்
- 3 கிராம் உப்பு
- 450 கிராம் கழுவப்பட்டு நறுக்கப்பட்ட கீரை
- 100 கிராம் கீரைக் கூழ்
- 2 கிராம் கீறப்பட்ட பச்சை மிளகாய்
- 10 கிராம் பூண்டு

- 2 கிராம் இஞ்சி துருவியது
- 8 கிராம் வெண்ணெய்

**செய்முறை:**
கீரையை வெளிர்வாக்கி ஓரமாக வைத்துவிடுங்கள். வறுக்கும் பாத்திரம் ஒன்றில் நெய்யைச் சூடாக்குங்கள், பெருங்காயம், சிவப்பு மிளகாயைச் சேருங்கள். அது படபடவென்று வெடிக்கும் போது, நறுக்கிய பூண்டு சேர்த்துப் பழுப்பாக்குங்கள். வெங்காயம் சேர்த்து, அது ஒளி ஊடுருவும் வகையில் அமையும்வரை வறுங்கள். பிறகு, சீரகத் தூள், கருப்பு மிளகு, உப்பைச் சேருங்கள். நறுக்கப்பட்ட பனீர், வெளிர்வாக்கப்பட்ட கீரையைச் சேர்த்து வறுங்கள். கீரைக் கூழைச் சேர்த்து 2 நிமிடங்கள் மெல்லக் கொதிக்கவிடுங்கள். கீறப்பட்ட பச்சை மிளகாய், துருவிய இஞ்சி ஜூல்லியெனெ-யைச் சேருங்கள்.

நன்கு கலக்கிப் பரிமாறுங்கள். வெண்ணெய், பழுப்பாக்கப்பட்ட பூண்டின்மூலம் அலங்கரியுங்கள்.

## செயின்சூ (உத்தரகாண்ட் பாணி கருப்பு உளுந்து)

**சுதெர்சன் பண்டாரி**
*செயல்நிலைச் சமையல் வல்லுனர், ஈரோஸ் ஹோட்டல், புது தில்லி நேரு ப்ளேஸ்*

என் தாய் எனக்கு, ஊக்குவிப்பவராக இருந்துவந்துள்ளார். அவருடைய சமையல் குறிப்புகள் என் இதயத்துக்கு மிக நெருக்கமானவை. என்னுடைய சிறிய மற்றும் சில நேரங்களில் குறிப்பிடக்கூடிய வெற்றிகளின் போது என் தாய் எனக்காகச் சமைத்த சமையல் குறிப்பு, செயின்சூ. இந்தச் சமையல் குறிப்பு, அவரைப்பற்றிய இனிய நினைவுகளைக் கொண்டுவருகிறது, அவற்றை நான் என்றென்றும் கொண்டாடுவேன்.

**உட்பொருள்கள்**
- 1/2 கோப்பை உளுத்தம் பருப்பு (முழு)
- 1/2 தேக்கரண்டி கொத்தமல்லித் தூள்
- 1/2 தேக்கரண்டி சீரகத் தூள்
- 1/2 தேக்கரண்டி சிவப்பு மிளகாய்த் தூள்
- 1/2 தேக்கரண்டி மஞ்சள் தூள்
- 1/2 தேக்கரண்டி முழுக் கருப்பு மிளகு
- 2 தேக்கரண்டிக் எண்ணெய்
- 1–1/4 கோப்பை நீர்
- 2 உலர்ந்த சிவப்பு மிளகாய்கள்
- உப்பு, தேவையான அளவு

**சமைக்கும் முறை**
பாத்திரத்தைச் சூடாக்குங்கள், கருப்பு உளுந்தைச் சில நிமிடங்களுக்கு நறுமணம் வரும்வரை உலர்ந்த முறையில் வறுத்து, ஆறியவுடன் அரைத்து நல்ல, உலர்ந்த கலவையாக ஆக்குங்கள். கனமான அடிப்பகுதி கொண்ட பாத்திரத்தை எடுத்துக் கொள்ளுங்கள். காய்கறி எண்ணெயைச் சூடாக்குங்கள், உலர் சிவப்பு மிளகாய், மிளகு சேர்த்து உறுதியாக்குங்கள். கொத்தமல்லித் தூள், சீரகத் தூள், சிவப்பு மிளகாய்த் தூள், மஞ்சள் தூள், உப்பு ஆகியவற்றை 2 மேசைக்கரண்டி நீருடன் சேர்த்து ஒரு நிமிடம் வறுங்கள். அரைக்கப்பட்ட கருப்பு உளுந்தைச் சேருங்கள், நன்கு கலக்குங்கள், பிறகு, நீரைச் சேருங்கள். அது தடிமனாகும்வரை, 20–30 நிமிடங்களுக்கு நடுத்தரத் திலிருந்து குறைந்த வெப்பத்தில் சமையுங்கள், அவ்வப்போது கிளறிவிடுங்கள். அடுப்பை அணைத்துவிடுங்கள், சாதத்துடன் சூடாகப் பரிமாறுங்கள்.



## பட்டா கோபி கீர்



**கௌரவ் மாத்தூர்,**
*செயல்நிலைச் சமையல் வல்லுனர், வெல்கம்ஹோட்டல் த்வாரகா*

காயஸ்த மாத்தூர் குடும்பத்தில் வளர்ந்த நாங்கள், வாரத்துக்கு ஒருநாள், அநேகமாகச் செவ்வாய்க்கிழமைகளில் உண்ணா நோன்பு இருக்கிற பண்பாட்டைப் பின்பற்றினோம். எங்கள் உண்ணா நோன்புகளின் போது, என் பாட்டி இரும்புச்சத்து, ஊட்டச்சத்துகள் நிறைந்த முழுமையான பாயசத்தைச் சமைப்பார். அது பட்டா கோபியில் (பச்சை முட்டைக்கோஸ்) செய்யப் பட்டது.

**உட்பொருள்கள்**
- நறுக்கப்பட்ட பச்சை முட்டைக் கோஸ்-500 கிராம்
- முழுப் பாலேட்டுப் பால்-1.5 லிட்டர்.
- சர்க்கரை-200 கிராம்; குங்குமப் பூ நீர்-5 மிலி; நெய்-15 மிலி; உலர் திராட்சை-20 கிராம்
- புளிமா விதைகள் (சிரொஞ்சி)-10 கிராம்
- தாமரை விதை-20 கிராம்

**முறை**
- முட்டைக்கோஸை வெளிர் வாக்கி நீரை அழுத்தி எடுத்து ஒரு பக்கமாக வைத்துவிடுங்கள்.
- பாலைச் சூடாக்குங்கள், 25–30 நிமிடங்களுக்கு மெல்லக் கொதிக்க விடுங்கள். முட்டைக்கோஸ், சர்க்கரையைச் சேருங்கள். மேலும் 10–12 நிமிடங்களுக்கு மெல்லக் கொதிக்கவிடுங்கள்.
- நெய்யில் வறுக்கப்பட்ட உலர் பழங்களின்மூலம் நிறைவு செய்யுங்கள்.
- குங்குமப் பூ நீர் கொண்டு அலங்கரியுங்கள், வெத வெதப்பாகப் பரிமாறுங்கள்.

வடிவமைப்பு: S. கிருஷ்ணப்ரதீஷ்







# District Wise TRF Contributions as on July 2021

(in US Dollars)

| District Number | Annual Fund | PolioPlus Fund | Endowment Fund | Other Funds | Total Contributions |
|---|---|---|---|---|---|
| | | | India | | |
| 2981 | 11,223 | 486 | 0 | 135,135 | 146,844 |
| 2982 | 12,686 | 260 | 0 | 0 | 12,946 |
| 3000 | 177 | 11 | 0 | 0 | 188 |
| 3011 | 2,205 | 280 | 0 | 2,027 | 4,512 |
| 3012 | 10,907 | 3,734 | 19,000 | 0 | 33,641 |
| 3020 | 308 | 253 | 0 | 4,620 | 5,181 |
| 3030 | 2,218 | 0 | 0 | 0 | 2,218 |
| 3040 | 71 | 0 | 0 | 2,701 | 2,773 |
| 3053 | 565 | 0 | 0 | 0 | 565 |
| 3054 | 1,400 | 84 | 0 | 500 | 1,984 |
| 3060 | 6,042 | 28 | 0 | 47,014 | 53,084 |
| 3070 | 336 | 0 | 0 | 738 | 1,074 |
| 3080 | 2,486 | 154 | 0 | 0 | 2,640 |
| 3090 | 3,956 | 0 | 0 | 0 | 3,956 |
| 3100 | 4,157 | 0 | 0 | 0 | 4,157 |
| 3110 | 35 | 0 | 0 | 0 | 35 |
| 3120 | 2,167 | 0 | 0 | 0 | 2,167 |
| 3131 | 97,807 | 8,885 | 30,000 | 4,151 | 140,843 |
| 3132 | 5,832 | 137 | 5,000 | 0 | 10,969 |
| 3141 | 134,315 | 27 | 0 | 148 | 134,490 |
| 3142 | 27,709 | 105 | 0 | 24 | 27,838 |
| 3150 | 5,241 | 1,050 | 0 | 1,764 | 8,055 |
| 3160 | 4,120 | 321 | 17,264 | 0 | 21,704 |
| 3170 | 17,473 | 2,248 | 1,196 | 1,227 | 22,144 |
| 3181 | 1,113 | 0 | 0 | 0 | 1,113 |
| 3182 | 1,266 | 0 | 0 | 0 | 1,266 |
| 3190 | 20,286 | 3,266 | 0 | 0 | 23,552 |
| 3201 | 8,020 | 526 | 0 | 1,848 | 10,394 |
| 3203 | 2,944 | 1,070 | 2,072 | 119,060 | 125,147 |
| 3204 | 245 | 0 | 0 | 1,036 | 1,281 |
| 3211 | 10 | 280 | 0 | 0 | 290 |
| 3212 | 3,220 | 133 | 1,036 | 0 | 4,389 |
| 3231 | 3,263 | 28 | 0 | 0 | 3,291 |
| 3232 | 18,122 | 8,329 | 1,500 | 26,857 | 54,808 |
| 3240 | 9,101 | 267 | 0 | 401 | 9,769 |
| 3250 | 367 | 0 | 1,036 | 0 | 1,403 |
| 3261 | 2,183 | 14 | 0 | 0 | 2,197 |
| 3262 | 1,623 | 0 | 0 | 0 | 1,623 |
| 3291 | 1,865 | 39 | 5,541 | 0 | 7,444 |
| **India Total** | **427,066** | **32,014** | **83,644** | **349,249** | **891,974** |
| 3220 **Sri Lanka** | 5,949 | 473 | 1,510 | 0 | 7,932 |
| 3271 **Pakistan** | 308 | 316 | 0 | 1,155 | 1,780 |
| 3272 **Pakistan** | 707 | 60 | 0 | 0 | 767 |
| 3281 **Bangladesh** | 5,244 | 825 | 0 | 0 | 6,069 |
| 3292 **Nepal** | 10,395 | 1,100 | 0 | 2,155 | 13,650 |
| **South Asia Total** | **449,669** | **34,789** | **85,154** | **352,559** | **922,171** |

*Figures may not be accurate as the system is being migrated to ERP platform.

Source: RI South Asia Office

Wordsworld

# Books can be like a hockey team




Sandhya Rao

Random picks, varied styles, absorbing yarns… each uniquely examining the fundamental human need to belong.

We've been uplifted, and the icing on the cake was the calm, confident, graceful gold medal-winning demeanour of Neeraj Chopra. So young, so dignified in execution and victory. Then came news of some people 'celebrating' the defeat of the women's hockey team in the semi-final. They stood outside the Haridwar home of a player and hurled offensive remarks against the family, apparently 'protesting' the presence of dalits in the Indian team. Yet, this team is quintessential India: a representation of the myriad-hued multitude that is this nation.

The package of books laid out today is, in a way, like the Indian women's hockey team — each selection is unique, and together they convey a sense of belonging in different ways. Importantly, each voice sings its own song. *The Woman in the White Kimono* by Ana Johns, based on the true experiences of the author's father, unravels the story of the central character, Tori Kovac, whose father dies, leaving behind a life-changing letter for her: she has a half-sister in Japan. Tori's search for this sibling is the crux of this debut novel. Admittedly, it is not always great writing, but the story is emotional and evokes images of Japan that seem almost Indian. That's the thing about 'real' stories, even when fictionalised — they bring you home.

The second book — they've been listed in random order, no preferences intended -— is *The Dutch House* by Ann Patchett. Slow, unremarkable, emotionless, '*yaar*, nothing happens!' — these were some of the comments in our book club. But everybody agreed the writing was lucid. The book is named after the house in which the central characters live. The mother runs off to India, leaving bereft her husband and two children, Maeve and Danny in the care of housekeepers. Eventually, the father remarries, bringing Andrea and her two children into the narrative.





It's not as if Maeve and Danny particularly love their house, but to Andrea the house is a trophy and any previous thing connected to it, unpalatable. She orders M and D to leave. This is about as dramatic as the novel gets as it goes on to explore relationships: between people, between people and things; people and memories; the past and the present; between hope and expectation. The writing compels you to read every word and, especially if you have a 'house' in your personal history, reflect upon it and the stories that may lie hidden in its walls.

You wouldn't be off the mark if you thought 'Hamlet!' upon reading the name *Hamnet* by Maggie O' Farrell. This is a story inspired by Shakespeare's son who died young; four years later, Shakespeare wrote *Hamlet*. Rooted in fact, it dramatically reveals a broad canvas of sixteenth century England even as it tunnels deep into details so minute you hear every breath exhaled, feel the juice ooze from plums, hear the scratch of every word paper. Read for yourself: 'Hamnet starts awake, the mattress rustling beneath him. Something has woken him — a noise, a bang, a shout — but he doesn't know what. He can tell, by the long reaches of the sun into the room, it must be near evening. What is he

doing here, asleep on the bed? He twists his head and then he remembers everything. A form lies flat, next to him, head twisted to one side. Judith's face is waxen and still, a sheen of sweat making it glimmer like glass. Her chest rises and falls at uneven intervals. Hamnet swallows, his throat closed and tight. His tongue feels furred, ungainly, too large to fit in his mouth. He scrambles upright, the room blurring around him. A pain enters the back of his head and crouches there, snarling, like a cornered rat.'

Nothing is known about the real Hamnet but he is heroed here, in 'a great work of imaginative recreation and a great story,' writes Dominic Dromgoole. 'It is also a moral achievement to have transformed that young child from being a literary footnote into someone so tenderly alive that part of you wishes he had survived, and *Hamlet* never been written.' In the end, you cannot help but wonder how on earth Maggie O'Farrell created this masterpiece.

Right now, though, I am under the spell of *North of Dawn* by Somali writer Nuruddin Farah: 'As his eyes move from the face of a Caucasian woman to a man with Middle Eastern features, and from a woman in a sari to an African man




in an agbada, Mugdi is sad that scenes such as this, where a variety of races congregate at a public arena, are unavailable in Mogadiscio. As he watches the expressions on the faces of some of the Norwegians, he can spot some whose gentle features stiffen, turning ugly when they come face-to-face with a Muslim woman in full Islamic gear. Maybe a woman with a Muslim headscarf is seen as a threat, whereas a sari-wearing woman is viewed as unusual and fascinating in this part of the world. Mugdi remembers reading about a judge in the state of Georgia in the US who barred a woman with a headscarf from entering his court. Would the same judge turn away a Jewish man with a yarmulke or a nun in her habit?'

It is very much a story of our times, beset with conflicts and confusion particularly around ideas of faith and fundamentalism. Farah tackles the subject head-on by premising the story on the experiences of a Somali couple, Mugdi and Gacala, having escaped from troubles in their country, now well-adjusted to living in Oslo, Norway, with their two children.

However, when their son grows up to become a jihadist, and dies in a terrorist attack, and they are forced to look after his wife and her two children, everything changes for them. As *The Oprah Magazine* observed, 'The political becomes personal in this beautifully affecting tale.' In tone, tale and telling, it's completely different from the other books laid out today.

The fifth book is a completely different cup of tea. This is *Cousin Bazilio* by the Portuguese novelist Eca de Queiroz, in English translation by Margaret Jull Costa. Although first published in 1878, it never feels dated. Richly




descriptive, languorously sensuous, and exuding the languidness of siestas on humid afternoons, as in: 'Luiza yawned and stretched. It was such a bore having to get dressed! She would have liked simply to be dozing off in a pink marble bath full of warm, perfumed water! Or else to be rocking gently in a silken hammock, with all the windows closed, listening to music! She shook off one slipper and sat looking fondly at her small, milk-white foot with its tracery of blue veins, thinking about all kinds of things …'

In its own way, this tale parading cuckolds and mistresses, hypocrisy and deceit, blackmail and sentimentality, is also founded on a yearning to belong — to somebody, to a set, to high society. The characters materialise before your eyes and even if you have never visited Lisbon, the city comes alive.

Lucky you; so many books to choose from! What you read, how much, and when, is your privilege. What matters is that you take a shot. After all, like in sport, it doesn't matter if you win or lose, it's how you play the game.

*The columnist is a children's writer and senior journalist.*

Designed by Krishnapratheesh

# நன்றியுணர்வு — ஒரு சிறந்த அமுதம்

பரத் - ஷலன் சவூர்

கோவிட் வந்து விடுமோ, அல்லது அன்புக்குரிய ஒருவரை இழந்து விடுவோமோ என்கிற தொடர்ந்த அச்சம் சூழ்ந்திருப்பதால் பலர் பதற்றக் குறைபாடுகளை, பெருவிருப்பக் கட்டாயக் குறைபாடுகளைச் சந்தித்துவருவது நம் அனை வருக்கும் தெரியும். மனச்சோர்வுக்கு எதிரான மருந்துகள், அமைதிப்படுத்திகள், உளவியல் பிரச்சனைகளுக்கு எதிரான மருந்துகள், ஒற்றைத் தலைவலிக்கு எதிரான மருந்துகள் போன்றவற்றின் விற்பனை பெருமளவு உயர்ந்துள்ளது.

இது ஒரு மிகச் சிறந்த சூழ்நிலை இல்லை, ஆனால், இதுதான் நம் சூழ்நிலை, இந்தத் தெளிவான, உறுதியான நம்பிக்கையுடன் நாம் இந்த ஒட்டுமொத்தத் தகவல் புதிர்ப் பாதையிலும் நடந்து வரவேண்டும்: “இருள் மிகுந்த மனத்தில் வெளிச்சத்தைக் கொண்டுவந்தால், அந்த மனம் மாறும்.” மாற்றம் ஒரு மகிழ்ச்சியான செயல்முறை; நீங்கள் ஏதேனும் தடையை எதிர்கொண்டால், ஏதேனும் ஓர் எதிர்மறைச் சிந்தனை உங்களைத் தடுத்து நிறுத்தினால், உங்களுக்கு நீங்களே மென்மையாகச் சொல்லிக் கொள்ளுங்கள், “அன்பு என்னைச் செலுத்தட்டும்.” அறிஞர்கள் சொல்கிறார்கள், “அன்பு என்பது உடலில் எழும் உணர்வு. அந்த எழும் உணர்வு, நீங்கள்.” அப்படிப்பட்ட உண்மை, தன்னுடைய பெரிய தன்மையுடன் உங்களுக்கு மிகுந்த ஆற்றலை அளிக்கிறது, அது தரும் தாக்கம் மிக விரைவானது.

உடலில் உள்ள எந்தவொரு வலி தரும் களைப்பையும், மனத்தில் உள்ள எந்தவொரு கவலையையும், நீங்கள் சந்திக்கக் கூடிய எந்தவோர் எண்ணத் தாழ்வையும் விலக்குங்கள். மீண்டும் பிறப்பெடுங்கள். உங்கள் வாழ்க்கையில், மற்றவர்கள் வாழ்க்கைகளில் அழுத்தத்தைக் குறைக்கும் ஒருவராக இருங்கள். உடலைத் தளர்வாக்குங்கள். படுக்கையில் மெதுவாகப் படுத்துக் கொள்ளுங்கள். கைகளை மேலும், கால்களைக் கீழும் நன்கு நீட்டுங்கள், இரு முனைகளிலும் பிடித்து இழுக்கப்படுகிற ஒரு வியப்புக்குறியைப்போல. உச்சிமுதல் பாதம்வரை சுமைத் தணிவை உணருங்கள். மல்லாக்கப் படுத்துக்கொண்டு, உங்கள் கையை மெதுவாக உங்கள் வயிற்றின்மீது வட்டங்களாக நகர்த்துங்கள், உங்கள் உடல் தளர்வாவதை நீங்கள் உணரும்வரை இவ்வாறு செய்யுங்கள். வட்டம் என்பது உருவாக்குபவரை, உருவாக்கத்தைக் குறிப்பிடுவதாகச் சில பழங்காலப் பண்பாடுகள் நம்புகின்றன. இப்போது, கால் விரல் நுனியிலிருந்து தலைவரை உங்கள் உடலின் ஒவ்வொரு பகுதிக்கும் அமைதியாகக் கட்டளையிடுங்கள், அவற்றை அமைதி பெறச் சொல்லுங்கள். அல்லது, யூட்யூபில் யோக நித்ரா தியானப் பதிவு ஒன்றைக் கேளுங்கள், உங்கள் உடலைத் தளர்வாக்குங்கள், தூங்கச் செல்லுங்கள்.



மனத்தை அமைதியாக்குங்கள். மனம் களைப்பாக உணரும்போது, அது ஓய்வை வேண்டுவதில்லை, அமைதி நிலையை வேண்டுகிறது. அது சிந்திப்பதை நிறுத்தவேண்டும். மனம் என்பது பந்தயப் பாதை இல்லை, எண்ணங்கள் பந்தயக் குதிரைகள் இல்லை. ஆனால், அவை எவையாக இல்லையோ அவையாக நடந்துகொள்ளத் தொடங்கினால், பனிமூட்டமும் களைப்பும் வருகின்றன. ஒருவர் தான் செய்யவேண்டியதைச் செய்யாததுபற்றி, ஒருவர் விரும்புவதைப் பெறாதது பற்றி, ஒரு வாக்குறுதியை நிறைவேற்றாததுபற்றி, இன்னும் 101 விஷயங்களைப்பற்றிப் பதற்றம் ஏற்படுகிறது. உலகெங்கும் ஒரு வைரஸ் இருப்பது இந்த நிலையை இன்னும் மோசமாக்குகிறது. பதற்றம் மிகுந்த ஆற்றலை எடுத்துக் கொண்டு விடுவதால், நம்மால் ஓர் இடத்தில் அமரவோ நம் வேலையில் கவனம் செலுத்தவோ இயலுவதில்லை, அதற்குப்பதிலாக, நாம் அங்குமிங்கும் அமைதியின்றி நகர்கிறோம், இன்னும் களைப்பாகிறோம்.

வசதியாக அமர்ந்து கொள்ளுங்கள், தலை, கழுத்துக்கு ஆதரவு இருக்கும்படி பார்த்துக் கொள்ளுங்கள். மெதுவாக, ஆழமாக மூச்சு விடுங்கள். எட்டுவரை எண்ணிய படி உங்கள் நாசித்துளைகளின் வழியாக மூச்சை உள்ளிழுங்கள், மீண்டும் எட்டு வரை எண்ணியபடி உங்கள் வாயின் வழியாக மூச்சை வெளியில் விடுங்கள். நீங்கள் தளர்வாக உணரும்வரை இதைச் செய்யுங்கள்.

படிப்படியாக, நீங்கள் உங்களுக்குள் ஒரு பரந்து விரிந்த தன்மையை உணர்வீர்கள். மனநிலையை வலுவாக்குங்கள். பல நேரங்களில், எதுவும் நாம் நினைப்பதுபோல் நடப்பதில்லை என்றும் உலகம் நமக்கு எதிராகச் செயல்படுகிறது என்றும் உணர்வதால் மனநிலை சோர்வாகிறது. இதனால், எப்போதும் போதுமான அளவு கிடைப்பதில்லை என்ற உணர்வு எழுகிறது. பொட்டலத்தில் போதுமான பிஸ்கட்கள் இல்லை. வங்கியில் போதுமான பணம் இல்லை.

மக்களில் போதுமான நல்ல பழக்கங்களும் செயல் திறனும் இல்லை. தயவு செய்து புரிந்து கொள்ளுங்கள், ஒழுங்கற்ற மனத்திலிருந்து இது வருகிறது, மனநிலையைச் சோர்வாக்குகிறது. அப்படிப்பட்ட ஒரு மனத்தை, விஷயங்களை ஒழுங்குபடுத்துவதில் பரபரப்பாக வைக்கவேண்டும்: அன்றாடக் கணக்குகள், பில்களுக்குப் பணம் செலுத்துதல், வழக்கமான உணவு, உடற்பயிற்சி நிகழ்வு, படுக்கை நேரம், எழுதல். அன்றாட வாழ்க்கையில் அது ஒழுங்கைக் காணும்போது, மனநிலை வலுவாகிறது.

மனநிலைக்கு ஒரு மிகச் சிறந்த அமுதமும் தேவை: நன்றியுணர்வு. நன்றியுணர்வு என்பது, நாம் அனுபவிக்கும் நல்ல வாழ்க்கையின் ஒரு மிகச் சிறந்த அங்கீகாரமாகும். அது நம்முடைய பார்வையைச் சுமையிலிருந்து வரமாக மாற்றுகிறது, மனநிறைவின்மை யிலிருந்து பாராட்டாக மாற்றுகிறது. அது மனநிலையை எப்படி வலுவாக்கிக் கட்டமைக்கிறது என்பது உங்களுக்குப் புரிகிறதா? முடக்கத்தின்போது, எப்போதும் வீட்டுக்குள் இருப்பதால், குறை சொல்கிற பலர் விடுதலையின் மதிப்பைக் கற்றுக்கொண்டார்கள்; வெளியில் ஓடிச் சென்று சூரிய வெளிச்சத்தை, மழையை எந்த அச்சமும் இல்லாமல் சந்திக்கும் நாளில், அவர்கள் நன்றியுணர்வை அறிவார்கள்.

நாம் கவனிக்க வேண்டிய ஒரு விஷயம், பேராயர், தலாய் லாமா ஆகியோர் தாங்கள் சந்திக்கும் ஒவ்வொருவருக்கும் தொடர்ந்து நன்றி சொல்கிறார்கள். பேராயர் ஒவ்வொரு புதிய அனுபவத்தையும் மிகச்சிறப்பு! என்று உளமார அழைக்கிறார்.

சகோதரர் டேவிட் ஸ்டெய்ன்ட்ல்-ரஸ்ட் என்ற துறவி இதைச் சரியாகச் சொல்கிறார், "மகிழ்ச்சி நம்மை நன்றியுணர்வு கொள்ளச்செய்வது இல்லை. நன்றி யுணர்வுதான் நம்மை மகிழ்ச்சி கொள்ளச்செய்கிறது."

சமீபத்தில் எனக்கு அனுப்பப் பட்ட, மனநிலையை வலுவாக்கும் இன்னொரு விஷயம், இதோ. இது ஒரு மிகச் சிறந்த வலுவாக்கும் பயிற்சியைப் பற்றியது. அதைப் படியுங்கள்: "ஒரு வசதியான இடத்தில் நில்லுங்கள், எல்லாப் பக்கங்களிலும் போதுமான அளவு இடம் இருக்கட்டும். ஒவ்வொரு கையிலும் இரண்டரைக் கிலோ உருளைக்கிழங்குப் பை ஒன்றை எடுத்துக்கொள்ளுங்கள்.

உங்கள் கைகளை உங்கள் பக்கங்களில் நேராக நீட்டுங்கள். உங்களால் இயன்றவரை அவற்றை அங்கு பிடித்திருங்கள். ஒரு முழு நிமிடத்தை எட்ட முயலுங்கள், பிறகு, ஓய்வெடுங்கள். ஒவ்வொரு நாளும், இந்த நிலையில் நீங்கள் இன்னும் சற்றுக் கூடுதல் நேரம் இருக்க இயலுகிறது என்பதை நீங்கள் காண்பீர்கள்.

"சில வாரங்களுக்குப்பிறகு, ஐந்து கிலோ உருளைக்கிழங்குப் பைக்கு மாறுங்கள். அதன்பிறகு, 25 கிலோ உருளைக்கிழங்குப் பைகளை முயலுங்கள், இப்படிப் படிப்படியாக வளர்ந்து, ஒவ்வொரு கையிலும் ஒரு 50 கிலோ உருளைக்கிழங்குப் பையைத் தூக்கியபடி ஒரு முழு நிமிடத்துக்கு உங்கள் கைகளை நேராக வைத் திருக்கும் அளவுக்கு முன்னேற முயலுங்கள். (நான் இந்த நிலையில் உள்ளேன் என்கிறார் இதை எனக்கு அனுப்பியவர்.)

"இந்த நிலையில் நீங்கள் நம்பிக்கையாக உணர்ந்தபிறகு, ஒவ்வொரு பையிலும் ஓர் உருளைக் கிழங்கைப் போடுங்கள்." என்ன? சிரிப்பு வருகிறதா? நம் அனைவருக்கும் தேவையான, மனநிலையை வலுவாக்கும் விஷயம் அதுதான்!

கட்டுரை ஆசிரியர்கள் இருவரும் Fitness for Life மற்றும் Simply Spritiual — You Are Naturally Divine என்ற ஆங்கில நூல்களின் எழுத்தாளர்கள்.

# RI தெற்காசிய அலுவலகத்தின் செய்தி

**ரோட்டரி ஆண்டு 2020–21க்கான தெற்கு ஆசிய நிதி திரட்டல் முதன்மைச் செய்திகள்:**

- இந்தியா முன்பு எப்போதையும்விடக் கூடுதலான $22.3 மில்லியனை எட்டியது; மிகக் கூடுதலாக நிதி அளிக்கும் நாடுகளின் பட்டியலில் 3வது இடத்தைப் பிடித்தது.

**Arch Klumph Society members from South Asia region for Rotary year 2020–21**

| | |
|---|---|
| Taizoon Fakhruddin Khorakiwala and Edith Khorakiwala | (RID 3141) |
| Vinay and Rashmi Kulkarni | (RID 3131) |
| Banoo Jafer and Jafer Noman Sura | (RID 3141) |
| Rauzat and Saif Qureishi | (RID 3141) |
| Suresh and Kiran Poddar | (RID 3054) |
| M Ambalavanan | (RID 3232) |
| Ajay and Rooma Dubey | (RID 3131) |
| Khandkar Shafiqul Haque | (RID 3281) |
| Mituli Mahbub Hossain | (RID 3281) |
| Nikunj Pravin Jhaveri and Kanan Jhaveri | (RID 3141) |
| Ashok Kumar Mahansaria | (RID 3141) |
| Ashok Kumar and Bindu Mehra | (RID 3141) |
| Narendrakumar and Bhavani Mehta | (RID 3060) |
| Nitin and Harsha Mehta | (RID 3141) |
| PNB Murugadoss and Devi M | (RID 3212) |
| Dipti Ranjan and Indrani Patnaik | (RID 3261) |
| Ramesh and Asha Poddar | (RID 3141) |
| K R Ravindran and Vanathy Ravindran | (RID 3220) |
| Muhammad and Dilara Ajaz Saya | (RID 3271) |
| Srinivas T | (RID 3190) |
| S V Veerramani and Radha Veerramani | (RID 3232) |
| Irena Malabika and Tipu Munshi | (RID 3281) |
| Atos Global IT Solutions and Services Private Limited | (RID 3142) |

- தெற்கு ஆசிய ஆண்டு நிதி வழங்கல் சென்ற ரோட்டரி ஆண்டைவிட 17% உயர்ந்தது.
- மொத்த TRF பங்களிப்பில் எட்டு மாவட்டங்கள் 1 மில்லியன் இலக்கைத் தாண்டின, உலகின் மிகச் சிறந்த 50 மாவட்டங்கள் பட்டியலிலும் இடம்பெற்றன.
- தெற்கு ஆசியாவிலிருந்து மொத்தம் 23 புதிய AKS உறுப்பினர்கள் (நிலை மாற்றம் உள்பட), அதில் 16 பேர் இந்தியாவிலிருந்து.
- தெற்கு ஆசியாவின் 73% சங்கங்கள் RY 2020–21ல் TRFக்குப் பங்களித்துள்ளன.
- தெற்கு ஆசியாவில் நன்கொடையாளர் பங்கேற்பு 33% ஆகத் தொடர்கிறது.

**Districts from South Asia in top 50 districts worldwide**

| District | 2020–21* Total Contribution in US $ | Worldwide Rank |
|---|---|---|
| 3141 | $3,525,764 | 1 |
| 3131 | $1,760,573 | 10 |
| 3232 | $1,739,390 | 11 |
| 3190 | $1,320,244 | 27 |
| 3201 | $1,292,207 | 29 |
| 3060 | $1,208,745 | 34 |
| 3281 | $1,024,779 | 44 |
| 3011 | $1,019,684 | 47 |


*Interim unaudited update

**RY 2020–21* Top 5 Giving Clubs from South Asia**

| District | Club Name | Total TRF Contribution in US $ |
|---|---|---|
| 3131 | Pune Central | $540,501.36 |
| 3141 | Bombay Airport | $437,577.44 |
| 3141 | Bombay North | $350,430.47 |
| 3141 | Bombay Queen City | $327,943.85 |
| 3141 | Queen’s Necklace | $311,927.43 |

*Interim unaudited update


# On the racks




## Service Above Self – The Biography of M K Panduranga Setty

Author : **Vedam Jaishankar**
**M Satyanarayan**
Publisher : **Vimal Publication**
Pages : **292**


With a foreword by RI President Shekhar Mehta, this book is an interesting account of the life of PRID Panduranga Setty. From his first trip to Switzerland as a nervous boy to becoming a well-known educationist and industrialist of Karnataka, this book narrates the story of Setty, his successful career and journey in the Rotary world. Over the years he learnt to appreciate the beauty of nature, followed an arduous work ethic, and took up charitable work. The book gives readers a ringside view of his life as a member of RC Bangalore for the last 54 years, his achievements and the service he has rendered. It also highlights how he developed a strong network of friends and rich experiences which aided him in doing good in the world.




## A Kashmiri Century

Author : **Khemlata Wakhlu**
Publisher : **HarperCollins**
Pages : **356; ₹388**

Written by former cabinet minister Khemlata Wakhlu, a Kashmiri, this book delves into the lives of Hindus and Muslims living in the valley. We get a glimpse of the Kashmir that Khemlata grew up in, its ethos and culture over several centuries. Having been ruled by kings from diverse faiths and cultures, the region has undergone various cycles of social, cultural and religious changes which have impacted the life of the Kashmiris. The stories in the book are an insight into Kashmiri society, its evolution and how the people dealt with the valley's bitter past. It highlights the natural beauty of the region, its contributions to Indian literature and its vibrant flora and fauna. The stories are based on the author's personal experiences and her intimate understanding of what it means to be a Kashmiri-speaking native.




## A Different Route to Success

Author : **Ramesh Narayan**
Publisher : **Notion Press**
Pages : **110; ₹299**

Giving readers a peek into his professional life, the author examines the factors that contributed to his success in the advertising field. The founder of Canco Advertising was quite active in this field for well over two decades, before retiring at 50 for good. The author narrates anecdotes from his own life making the book an interesting read. He elaborates on what success means to him and the journey that took him to where he is today. Genius is not the only important thing that determines a person's success, Narayan states, and explains that practical learning is critical to attain professional goals. According to him there is "no one formula for success. Nor one route to this holy grail." The self-help book tells his success story in simple language with a mix of interesting anecdotes, honest insights and a different look at success.

Compiled by Kiran Zehra

## RC மன்னார்குடி மிட்-டவுன் — RID 2981



இந்தச் சங்கம் தத்தெடுத்த கிராமத்தில் மருத்துவ முகாம் நடைத்தியது. 200 நரிக்குறவர்களுக்கு மருத்துவப் பரிசோதனைகள் நடைபெற்றன.

## RC குன்ட்லி — RID 3012




குன்ட்லி-யில் ஒரு தொழில்துறைப் பகுதியில், தலைவர் நீலம் செஹ்கல் தலைமையில் உறுப்பினர்கள் 50 மரக் கன்றுகளை நட்டு, மரக்காப்புகளைப் பொருத்தினார்கள்.

## RC கரூர் — RID 3000



ரூ.26,000 மதிப்புள்ள மருத்துவக் கருவிகள் கஸ்தூரிபாய் நகராட்சி மகப்பேறு மருத்துவ மனைக்கு நன்கொடையாக அளிக்கப்பட்டன.

## RC நாசிக் கோதாவரி — RID 3030



வீடுகளில் தையல் மையங்கள், அழகு நிலையங்கள் போன்ற சிறு தொழில்களை அமைப் பதற்காக, 20 பெண்களுக்கு ரூ.21,000 வரையிலான வட்டி இல்லாத குறுங்கடன்கள் வழங்கப்பட்டன.

## RC டெல்லி கூப்சூரத் — RID 3011




லஜ்பத் நகரில் உள்ள தொழுநோய் மையத்தில் 120 நலிந்த பின்னணி கொண்ட பெண்களுக்கு சானிட்டரி பேட்கள், அழகுப் பொருட்கள், ஆயுர்வேத மருந்துகளை வழங்கியது.

## RC ஜெய்பூர் பாபுநகர் — RID 3054



சங்கத்தலைவர் நரேந்திர மால் மாத்தூர் மன்பூர் மச்சேரி கிராமத்தில் உள்ள ஒரு பொது சுகாதார மையத்திற்கு ரூ.1.7 லட்சம் மதிப்புள்ள மருத்துவ உபகரணங்கள் அளித்தார்.

# செய்திகள்

## RC பதன்கோட் மிட்-டவுன் — RID 3070



சரியாக வளராத உணவுக் குழலுடன் பிறந்த ஒரு பெண் குழந்தைக்கு அறுவைச் சிகிச்சை செய்வதற்காக இந்தச் சங்கம் ரூ.50,000 பங்களித்தது. அந்தக் குழந்தை இப்போது நன்றாக உள்ளது.

## RC சண்டிகர் மிட்-டவுன் — RID 3080



200 கர்ப்பிணிப் பெண்களுக்கு ரத்தத்தில் சர்க்கரை அளவு, BP, பிற அளவுருக்களும் பரிசோதிக்கப் பட்டன. 25 தாய்மார் களுக்குச் சங்கத் தலைவர் சலீல் சோப்ரா உணவு பொருட்களை வழங்கினார்.

## RC ஸ்ரீ கங்காநகர் சிட்டி — RID 3090



PDG விஜய் குப்தா ஒரு மருத்துவ உதவி வண்டியை (GG: ரூ 25 லட்சம்) RC கபாலபா, ஆஸ்திரேலியா, ஆதரவுடன் தொடங்கி வைத்தார். DG பர்வீன் ஜிண்டால் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டார்.

## RC சன்ஸ்க்ரிதி மொராதபாத் — RID 3100



சங்க உறுப்பினர் Dr பல்லவ் அகர்வால் அப்போலோ கண்மருத்துவ மனையில் 90 பேருக்கு கண் சிகிச்சை அளித்தார். கண் புரை அறுவை சிசிக்சைகளும் இந்த முகாமில் சங்சம் நடத்தியது.

## RC ஆக்ரா நார்த்ஈஸ்ட் — RID 3110



புதிய ரோட்டரி ஆண்டுக்காகக் குரு காதால் குருத்வாரா, சிகந்த்ரா-வில் 200க்கும் மேற்பட்ட மரங்கள் நடப்பட்டன.

## RC லக்னோ பரதாரி — RID 3120



சுமார் 50 பேரைக் கொண்ட சிஷு பால் கிரிஹா என்ற ஆதரவற்றோர் இல்லக் குழந்தைகளுக்கு ஆடைகள், பொம்மைகள் வழங்கப்பட்டன.

## RC குண்டூர் விகாஸ் — RID 3150



இந்தப் பகுதியில் பசுமையை மேம்படுத்து வதற்காகச் சங்க உறுப்பினர்கள் மரக் கன்றுகளை நட்டார்கள். பல தன்னார் வலர்கள் இதில் பங்கேற்றார்கள்.

## RC பெங்களூர் ஈஸ்ட் — RID 3190

இரண்டு பள்ளிகளில் இணையப் பயிற்றுவித்தலில் உதவுவதற்காக, அங்குள்ள ஆசிரியர்களுக்கு மடிக்கணினிகள் நன்கொடையாக வழங்கப்பட்டன. மாணவர்களுக்கு 550 உணவுப் பொதிகளும் (ரூ.3.85 லட்சம்) வழங்கப்பட்டன.




## RC அடோனி — RID 3160



இந்தச் சங்கம் இரண்டு நோயாளிகளுக்குக் கண் புரை அறுவைச் சிகிச்சைகளை ஆதரித்தது. 10 நலிந்த பெண்களுக்கு ரூ.30,000 மதிப்புள்ள தையல் பொருட்கள் வழங்கப்பட்டன.

## RC உடுமலைப்பேட்டை — RID 3203

சங்கம் நடத்திய கோவிட் தடுப்பு மருந்து வழங்கல் முகாமில் சுமார் 330 பேருக்குத் தடுப்பு மருந்து வழங்கப்பட்டது.



## RC ஹூப்ளி வித்யாநகர் — RID 3170



60 காய்கறி விற்பனை யாளர்களுக்கு ரோட்டரி சின்னம் கொண்ட குடைகள் ரூ 15,000 செலவில் வழங்கப் பட்டன.

## RC திருநெல்வேலி ட்வின் சிட்டி — RID 3212

SCAD பள்ளியில் நடைபெற்ற கோவிட் தடுப்பு மருந்து வழங்கல் முகாமில் 60 பேருக்குத் தடுப்பு மருந்து வழங்கப் பட்டது. TN முன்னாள் முதல் அமைச்சர் M G ராமச்சந்திரனைப் போல் வேடமணிந்த ஒருவர் மக்களை ஈர்த்தார்.



# செய்திகள்

## RC வேலூர் நார்த் — RID 3231



வேலூரில் உள்ள ஆக்சிலியம் கல்லூரி வளாகத்தில், கல்லூரி முதல்வர், NCC மாணவர்கள் ஆதரவுடன் மரக்கன்றுகள் நடப்பட்டன.

## RC ரூர்கேலா க்வீன்ஸ் — RID 3261

RCC தன்னார்வலர் சஞ்சுக்தா பிந்து பர்லா உதவியுடன் இந்தச் சங்கம் பிர்கேரா கிராமத்தில் 300 மரக்கன்றுகளை நட்டது.




## RC பொங்கைகாவ்ன் — RID 3240




டாங்டால் கிராமத்தில் உள்ள கிரிபாள்யா குழந்தைப் பராமரிப்புக் கல்வி நிறுவன வளாகத்தில் மரக் கன்றுகள் நடப்பட்டன.

## RC புபனேஸ்வர் மெட்ரோ — RID 3262

ஆக்சிமீட்டர், நெபுலைசர், உறிஞ்சி மற்றும் திரும்பப் பயன்படுத்தக்கூடிய PPE பொதி போன்ற கோவிட் தொடர்பான கருவிகள், வை இந்த நகரிலும் அதைச் சுற்றியும் உள்ள ஐந்து ஆதரவற்றோர் இல்லங்களுக்கு நன்கொடையாக அளிக்கப்பட்டன.




## RC ஜாம்ஷெட்பூர் மிட்-டவுன் — RID 3250



நலிந்த மாணவர்களுக்கான பள்ளியாகிய பிரேம் ஜோதி பிரங்களில் உள்ள ஆசிரியர்களுக்கு மாதவிலக்குக் கோப்பைகள் நன்கொடையாக அளிக்கப்பட்டன.

## RC கீதாஞ்சலி கொல்கத்தா — RID 3291

தெற்கு 24 பர்கனாஸ் மாவட்டத்தில் உள்ள அம்ரதலா கிராமம் மற்றும் பராசத் வட்டத்தில் உள்ள கஜ்லா பழங்குடியினப் பகுதியில் நல முகாம்கள் நடத்தப்பட்டன.



ஒருங்கிணைப்பு: V முத்துகுமரன்

# போக்குவரத்து, நிறுத்துதல் பிரச்சனையை வெல்லுவதற்கு உதவும் ஓட்டுநர்கள்

LBW

TCA ஸ்ரீனிவாச ராகவன்

பெரும்பாலான உலக நாடுகளுடன் ஒப்பிடும் போது, இந்தியாவின் நடுத்தர மக்கள் ஓரளவு வசதியாக வாழ்கிறார்கள், அதாவது, மலிவான உதவி ஆட்கள் கிடைக்கிற விஷயத்தில்.

பல ஆண்டுகளுக்குமுன், நாம் வளர்ந்து கொண்டிருந்த நேரத்தில் இந்த உதவி முழு நேரப் பணியாக இருந்தது, இப்போது இது அவ்வாறு இல்லை என்பது உண்மை. இப்போது அது 90% பகுதி நேரமாக உள்ளது. இந்தப் பின்னணியில்தான் சென்ற மாதம் நான் தோட்டக்காரர் பிரச்சனையைப்பற்றி எழுதினேன். தோட்டங்கள் மிகப் பெரிதாக இருந்த, சூழ்நிலை இப்போது இல்லை, அதனால், உங்களுக்கு ஒரு முழு நேரத் தோட்டக்காரர் தேவைப்படுவதில்லை. இப்போது, காருக்குதான் (அதன் அளவு எப்படி இருந்தாலும் சரி) ஒரு முழு நேர ஓட்டுநர் தேவைப்படுகிறார்.

இதனால், எனக்குத் தெரிந்த பலர் ஒரு முழு நேர ஓட்டுநரை வைத்துள்ளார்கள், அவர்களிடம் பணம் இருக்கிறது, போக்குவரத்து மிக மோசமாக இருக்கிறது என்பதால் மட்டுமில்லை, அவர்கள் முதியவர்கள், இன்னும் முதுமை பெறுகிறார்கள் என்பதாலும், அதைவிடப் பெரிதாக, காரை நிறுத்துவது ஒரு மிகப் பெரிய பிரச்சனை என்பதாலும்தான்.

உண்மையில், ஓட்டுநர்கள் நமக்காகக் காரை நிறுத்துபவர்களாக தான் மிகவும் பயன்படுகிறார்கள். ஐந்து நட்சத்திர விடுதிகளில் கார்களை நிறுத்தத் தனி ஆட்கள் இருப்பார்கள். இதை இன்னும் பல வணிக வளாகங்கள், பொருள் வாங்கல் தெருக்கள், மருத்துவமனைகள் ஏன் பின்பற்றவில்லை என்று நான் பல நேரங்களில் வியக்கிறேன்.

யோசித்துப் பார்த்தால், இணையத்தில் பொருட்கள் வாங்கப்படுவதற்கு ஒரு மிகப் பெரிய காரணம், கடைகளுக்குச் சென்று பொருள் வாங்குவது போல் கார் நிறுத்த இடம் தேடவேண்டியதில்லை. இப்போதெல்லாம், இடம், நாளின் நேரத்தைப் பொறுத்துக் கார் நிறுத்தும் கட்டணம் ஒரு மணிக்கு ரூ 50லிருந்து 200வரை இருக்கலாம். இதுவும் ஒரு முக்கியமான பிரச்சனை.

20 ஆண்டுகளுக்கு முன்னால், அரை மணி நேரத்துக்கு மேல் வண்டி ஓட்டுவதால் ரத்த அழுத்தத்துக்கு என்ன ஆகிறது என்று என்னுடைய உறவினராகிய மருத்துவர் ஒருவர் சரியாக விளக்கினார். அதன்பிறகு, நான் வண்டி ஓட்டுவதை நிறுத்தி விட்டேன்.

அப்போது என் அலுவலகம் 45 நிமிடத் தொலைவில் இருந்தது (இப்போது அது 110 நிமிடத் தொலைவில் உள்ளது.). அங்கிருந்து திரும்பியதும் என்னுடைய ரத்த அழுத்தத்தை அளவிடும்படி அவர் சொன்னார்.

இதனால், திங்கள் தொடங்கி வெள்ளி வரை என் மனைவி என்னுடைய ரத்த அழுத்தத்தை அளந்தார். என்ன சாப்பிடக்கூடாது, குடிக்கக்கூடாது என்று சொல்வதில் அவர் மருத்துவர்களுக்கு இணையானவர்.

அந்த ரத்த அழுத்த அளவுகள் என்னை வியக்கவைத்தன! என் உறவினர் ஊகித்ததுபோல், அவை மிகக் கூடுதலாக இருந்தன. என் மனைவி கட்டளை இட்டார்: ஓர் ஓட்டுநரை வேலைக்கு வைப்போம்.

அவர் எங்களிடம் வேலை செய்யத் தொடங்கியபின், 2 வாரங்கள் கழித்து, என் ரத்த அழுத்தத்தை மீண்டும் அளந்தோம். அது இயல்பாக இருந்தது. அப்போதிலிருந்து, நான் வண்டி ஓட்டுவதில்லை.

ஆனால் இப்போது அது 20 மடங்கு உயர்ந்துவிட்டது, மாதம் ரூ.1,000ல் தொடங்கி, மாதம் ரூ.20,000 ஆகிவிட்டது. ஆனால், எங்கள் குடும்ப வருவாயின் சதவிகிதமாகப் பார்த்தால், அது உண்மையில் குறைந்துள்ளது. இத்தனைக்கும் இப்போது நான் ஓய்வு பெற்றுவிட்டேன், என் வருவாய் பாதியாகக் குறைந்துவிட்டது. ஓட்டுநர் களுடைய வழங்கல் மிக விரைவாக உயர்ந்துவிட்டது தெளிவாகப் புரிகிறது.

நீங்கள் இதைப் பணம் என்கிற கோணத்திலிருந்து மட்டும் பார்த்தால், இது சரிதான். ஆனால், எப்போதும் போல், வழங்கல் மிக விரைவாக உயர்ந்தால், தரம் மிக நன்றாகக் குறையும். இதற்கு மொபைல் தொலைபேசி வலைப்பின்னல்கள் ஒரு மிகச் சிறந்த எடுத்துக்காட்டு.

இந்த ஓட்டுநர்களுடைய ஓட்டும் திறன்கள்மட்டும் குறையவில்லை; கார் எப்படி இயங்குகிறது என்பதே இவர்களுக்குத் தெரியவில்லை. இதனால், முந்தைய 20 ஆண்டுகளில் நாங்கள் ஆறு ஓட்டுநர்களை வைத்திருந்தோம், ஒவ்வொருவரும் முந்தைய ஓட்டுநரைவிட மோசமானவர், ஆனால், அவரைவிடக் கூடுதலாகச் சம்பாதிக்கிறவர்.


எங்களுடைய இப்போதைய ஓட்டுநர் மிக நன்றாக ஓட்டுகிறார், அல்லது, முன்னால் உள்ள பயணிகள் இருக்கையில் இருந்து நான் தொடர்ந்து தொல்லை செய்தபின், நன்கு ஓட்டத் தொடங்கியுள்ளார். ஆனால், ஒரு கார் எப்படி இயங்குகிறது என்று அவருக்குத் தெரியாது. நல்ல வேளையாக, அவருக்கு இப்போது டயர் மாற்றத் தெரியும், ஆனால், அதற்கு நாங்கள் பணம் செலவழித்து அவரை ஒரு பயிலகத்துக்கு அனுப்பவேண்டியிருந்தது.

பேராசிரியராகிய என் மனைவி தன்னுடைய மாணவர்களுடைய தரம் குறைந்துவருவதைக் கையாளப் பழகியவர். அவரிடம் நான் இதைச் சுட்டிக்காட்டினேன். அவர் தன்னுடைய புருவங்களை உயர்த்தினார், உங்களைப் போன்ற இதழாளர்களும் இப்படிதானே நடந்துகொள்கிறீர்கள்? இப்போதெல்லாம் நீங்கள் வெறுமனே கூகுள் செய்து வெட்டி ஒட்டுகிறீர்கள், 20 ஆண்டுகளுக்குமுன் நீங்கள் செய்த வேலையைவிடக் குறைவாகச் செய்து கூடுதலாகச் சம்பாதிக்கிறீர்கள்.

வழக்கம்போல், அவர் பிரச்சனையின் மையத்துக்குச் சென்று விட்டார்: ஊடக மக்களுக்கும் ஓட்டுநர்களுக்கும் எந்த வேறுபாடும் இல்லை. இப்போது நான் வீட்டு உதவியாளர்பற்றிப் புகார் சொல்வதை நிறுத்தத் தீர்மானித்து விட்டேன். ■

# செய்தித் துளிகள்

## தன்னுடைய தங்கப் பதக்கத்துக்காக ஒரு மெடல் காப்புறையைப் பின்னிய டாம் டலெ




புகழ் பெற்ற LGBTQ ஆதரவாளரான டாம் டலெ, டோக்கியோ ஒலிம்பிக்ஸில் ஒத்திசைக்கப்பட்ட 10மீ மேடை நீரில் பாய்தலில் தங்கம் வென்றபின், பெண்களுக்கான 3மீ ஸ்ப்ரிங்போர்ட் இறுதிப் போட்டியைப் பார்த்தபடி பின்னிக்கொண்டிருந்தார். டலெ ஊதா நிற நூலைப் பின்னும் புகைப் படத்தை அதிகாரப்பூர்வ ஒலிம்பிக்ஸ் ட்விட்டர் கணக்கு பகிர்ந்தபோது, அது ஒரே நாளில் 1.6 லட்சம் “விருப்பங்களை”ப் பெற்றது. அவர் தன்னுடைய ஒலிம்பிக் தங்கப் பதக்கத்துக்காகத் தான் பின்னிய சிறு கம்பளிப் பையின் ஒரு சிறு காட்சியை 4.2 லட்சம் பின்பற்றுவோரைக் கொண்ட தன்னுடைய @madewithlovebytomdaley இன்ஸ்டாகிராம் கணக்கில் பகிர்ந்து கொண்டார்.

## அருகிவரும் இனங்களின் பட்டியலில் பேரரசப் பெங்குயின்கள்




பேரரசப் பென் குயின்களைக் காக்கும் நோக்கத் துடன், அருகிவரும் உயிரினங்கள் சட்டத்தின்கீழ் அச்சுறுத்தப் படுகிறவையாக இந்த இனத்தைப் பட்டியலிட வேண்டும் என்று US மீன் மற்றும் காட்டு உயிர்ச் சேவை (USFWS) முன்வைத்துள்ளது. இந்த இனம் அமெரிக்காவில் காணப்படா விட்டாலும், அருகிவரும் உயிரினங்கள் சட்டத்தின் கீழ் இது பட்டியலிடப்பட்டால், அவற்றின் வாழ்விடங்களில் மீன் பிடித்தல் போன்ற செயல்பாடுகளால் அவற்றுக்குச் சேதம் குறையும்படி செய்ய கூட்டாட்சி அமைப்புகளுக்கு அது உதவும். இப்போதைய ஆற்றல் அமைப்புகளின்கீழ் காலநிலை மாதிரிகள் முன்வைக்கும் விகிதத்தில் கடல் பனி குறைந்து வந்தால், பெங்குயின் குடியேற்றங்கள் விரைவாகக் குறையும், 2100ம் ஆண்டுவாக்கில் அவை கிட்டத்தட்ட அழிந்துவிடும் என்று USFWS ஆய்வு காண்பிக்கிறது.

## கோவிட் தடுப்பு மருந்து எடுத்துக்கொள்ளுங்கள் என்று வலியுறுத்துகிறார் ஜெனிஃபர் அனிஸ்டன்



ஹாலிவுட் நடிகர் ஜெனிஃபர் அனிஸ்டன் தன்னுடைய 37.7 மில்லியன் இன்ஸ்டாகிராம் பின்பற்றுவோரிடம் முகமூடி அணியும்படி கேட்டுக்கொண்டார். என்னுடன் பழகுகிற சிலர் தாங்கள் தடுப்பு மருந்து எடுத்துக் கொண்டார்களா இல்லையா என்பதைத் தெரிவிக்கவில்லை அல்லது தெரிவிக்க மறுத்தார்கள், இது துரதிருஷ்டவசமானது என்ற அவர், இது உண்மையில் நாணத்துக்குரிய செயல் என்றார். இன்ஸ்டைல் இதழுக்கு அவர் அளித்த பேட்டியில், தடுப்பு மருந்து எடுத்துக் கொள்ளுதல் உங்களுடைய ஒழுக்க மற்றும் தொழில் சார்ந்த கடமை என்றார்.

## ‘பார்க்கின்சன்ஸ்’ சிகிச்சையிற்கு புதிய ஹைட்ரோஜெல்



ஆஸ்திரேலியத் தேசியப் பல்கலைக்கழகம் (ANU), நரம்பு அறிவியல், மன நலத்துக்கான ஃப்ளோரெ கல்விக்கழகம் ஆகியவை இணைந்து, ‘பார்கின்சன்’ஸ் நோய்க்கான சிகிச்சையில் உதவக் கூடிய ஒரு புதிய ஹைட்ரோஜெல்லை உருவாக்கியுள்ளன. இயற்கையான அமினோ அமிலங்களின்மூலம் உருவாக்கப்பட்டுள்ள இந்த ஜெல், குருத்து அணுக்களை மூளைக்குப் பாதுகாப்பாக அனுப்புகிற ஒரு வழியாகச் செயல்படும், GDNF (கிளைல் அணுக் கோட்டால் பெறப்பட்ட நியூரோடிராஃபிக் காரணி) என்று அழைக்கப்படுகிற, வளர்ச்சியைச் செயல்படுத்துகிற ஒரு புரதத்தை வெளியிட்டுச் சேதமடைந்த திசுவை மீட்கும். செலவு அடிப்படையில் செயல்திறன் கொண்ட இந்தத் தொழில்நுட்பத்தைப் பெரிய அளவில் உற்பத்தி செய்வது எளிது என்று கூறப்படுகிறது, விரைவில் இதற்கான மருத்துவப் பரிசோதனைகள் தொடங்கப்படலாம்.

## கடல் நீரைப் பரிசோதிப்பதற்குச் சூரிய ஒளி மிதவை



சென்னையில் உள்ள, கடற்கரையோர ஆராய்ச்சிக்கான தேசிய மையம் (NCCR), புதுச்சேரி கடற்கரைக்கு அருகில் ஓர் உயர் தொழில்நுட்ப மிதவையை அமைத்துள்ளது. உணரிகள் பொருத்தப்பட்ட இந்த மிதவை கடலின் ஆக்சிஜன், நீர் வெப்பநிலை, கடத்துந்திறன் (உப்புத்தன்மை), ஆழம், நீல-பச்சைப் பாசி, கலங்கியிருக்கும் தன்மை, pH மற்றும் பச்சைய அளவுகளை ஒரு கணினி மாதிரியின் வழியாகத் தானே அளந்து அனுப்பும், கடற்கரையோரத்துக்கு அருகில் உள்ள யார் வேண்டுமானாலும் ஒரு ஸ்மார்ட்ஃபோன் செயலி வழியாகத் தரமான பதிவுகளைப் பார்க்கலாம். சூரிய ஒளி ஆற்றலால் இயங்கும் இந்த மிதவை, கடற்கரையோரத்திலிருந்து 1.5கிமீ தொலைவில் நிலைநிறுத்தப்பட்டுள்ளது, இது, வளிமண்டல வெப்பநிலை, ஈரப்பதம், காற்றின் வேகம், திசை, அலைகளின் வேகம், ஓட்டங்களின் திசை போன்றவற்றையும் ஆராயும், ஆறு மீட்டர் உயரமுள்ள அலைகள் உள்ளிட்ட கடினமான வானிலையையும் இது தாங்கி நிற்கும்.

ஒருங்கிணைப்பு: கிரண் ஜெஹரா; வடிவமைப்பு: S. கிருஷ்ணப்ரதீஷ்.

Regn. No. TN/CCN/677/2019-2021
Licensed to post WPP No.TN/PMG(CCR)/WPP-611/2019-2021
Total number of pages in this monthly issue, including cover, 84. Price: ₹35
Registered with Registrar of News Papers for India TNTAM/2018/76372 Rotary News Tamil Published on the first week of every month

www.iisuniv.ac.in



IIS (deemed to be UNIVERSITY) JAIPUR

# Admissions Open 2021-22

For UG/PG/Ph.D./Professional programmes

**Option-1 : Apply Offline**
Visit our Campus between 9.30 am & 4.00 pm on all working days

**Option-2 : Apply Online**
https://onlineadmission.iisuniv.ac.in/
Direct Admission for **UG/PG & Professional** programmes
Admission to **Ph.D.** programmes through **Research Entrance Test (RET)**

**Psychometric Testing available for Vocational & Career Counselling**
https://onlineadmission.iisuniv.ac.in/node/3016

**FOR ACADEMIC COUNSELLING &/OR ANY SPECIFIC QUERIES :**
9358819994 ARTS & SOCIAL SCIENCE | 9358819995 SCIENCE
9358819996 COMMERCE & MANAGEMENT | or mail at : admissions@iisuniv.ac.in

**FOR GENERAL ENQUIRY : +91 141 2397906-07, +91 141 2400160, 2401008**

## UNDERGRADUATE PROGRAMMES
- B.A.
- B.A. Hons.
- B.A. (Journalism and Mass Communication)
- B.F.A. (Applied Art, Painting, Sculpture)
- B.B.A.
- B.C.A.
- B.Com.
- B.Com. Hons.
- B.Sc.
- B.Sc. Hons.
- B.Sc. Hons. (Home Sc.)
- B.Sc. Hons. (Multimedia & Animation)
- B.Sc. Fashion Design
- B.Sc. Jewellery Design & Technology

## INTEGRATED COURSES
- B.A. B.Ed.*
- B.Sc. B.Ed.*

*Approved by NCTE

## SPECIALIZED PROGRAMMES
- **B.Com. Hons.** (Proficiency in Chartered Accounting/ Proficiency in Company Secretaryship) Specialized programmes and separate academic calendars for aspirants of CA & CS.
- **B.Com. Hons.** (Applied Accounting and Finance) Accredited by ACCA, UK.

## SPECIALIZED CERTIFICATE PROGRAMMES
- **ICAI sponsored Certificate** programme for Accounting Technicians.
- **University of Cambridge,** U.K.'s Business English Certificates Tests of English

## BACHELOR OF VOCATION (B.VOC.) PROGRAMMES
- **B.Voc.** (Office Management and Secretarial Practices)
- **B.Voc.** (Banking and Financial Services)
- **B.Voc.** (Entrepreneurship and Business Innovation)
- **B.Voc.** (Digital Marketing)

*Approved by UGC

## POSTGRADUATE PROGRAMMES
- **M.A.**- Economics, English, French, Sociology, Geography, History, Political Science, Mathematics, International Relations, Public Administration, Psychology, Statistics
- **M.Sc.**- Biotechnology, Botany, Chemistry, Economics, Environmental Science, Geography, Information Technology, Mathematics, Microbiology, Physics, Psychology, Statistics, Zoology
- **M.Com.** - Accounting & Taxation, Business Studies, Financial Studies
- **M.Sc. Home Science** - Clothing and Textiles, Foods and Nutrition, Human Development
- **M.F.A.** - Applied Art (Graphic Design/Illustration), Print Making, History of Art, Painting, Sculpture (Portraiture, Creative Sculpture)
- **M.A.** Journalism & Mass Communication
- **M.A./M.Com./M.Sc.** Fashion Design
- **M.S.W.** (Master of Social Work)
- **M.B.A. (Semester Based)** Human Resource Management; International Business; Retail Management; Travel & Tourism Management; Finance; Advertising & Brand Management; Business Analytics; Innovation, Entrepreneurship and Venture Development
- **M.B.A. (Dual Specialization, Trimester based)** - Marketing, Finance, Human Resource, International Business, Information Technology Management **(Co-Educational)**
- **M.C.A.** (Master of Computer Applications - Two years semester based programme) **(Co-Educational)**

## RESEARCH PROGRAMMES
- **Ph.D.**

**Faculty of Arts & Social Sciences:** English, Journalism and Mass Communication, Economics, Geography, History, Political Science, Fine Arts, Fashion & Textiles, Mathematics, Psychology, Statistics

**Faculty of Science :** Environmental & Life Sciences (Botany, Biotechnology, Environmental Science, Microbiology, Zoology), Chemistry, Computer Science, Fashion & Textiles, Geography, Home Science (Human Development), Mathematics, Physics, Psychology, Statistics

**Faculty of Commerce & Management:** Commerce, Management

- **D.Sc./D.Litt.**



**PDG Dr. Ashok Gupta AKS**
Founder, IIS Group

CAREER ORIENTED & SKILL DEVELOPMENT PROGRAMMES, 3-LEVEL CERTIFICATE/ DIPLOMA/ADVANCED DIPLOMA ALONG WITH DEGREE PROGRAMMES

**IIS (deemed to be UNIVERSITY)**
Gurukul Marg, SFS, Mansarovar, Jaipur -302 020 (India)
**www.iisuniv.ac.in** | admissions@iisuniv.ac.in

**50% SCHOLARSHIP**
OFFERED TO THOSE WHO HAVE LOST AN EARNING PARENT / GUARDIAN TO COVID-19